V52,1g7 MO5
N23
177745

# ஜோஸப் மாஜினி


## (JOSEPH MAZZINI)

10 MAR 1923

ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமி சர்மா

...erved.] [Price As. 12.

V52,187M05
N23
177745



ஜோஸப் மாஜினி.

அரசியல் ஞ பாதினி—2.

இதாலி தேசாபிமானியான

# ஜோஸப் மாஜினி

# (JOSEPH MAZZINI)

10 MAR ·923

கிருஷ்ணஸ்வாமி சர்மா

எழுதியது

'ஞானபோதினி' பிரசுராலயம்

33, இருளப்பன் வீதி, சௌகார்பேட்டை

சென்னை.

விலை அணா 12.

# முகவுரை

---

நம் பாரதநாடு தற்பொழுது அன்னிய அரசாங்கத்தின் கீழிருந்து துன்பக்கடலில் ஆழ்ந்து அவஸ்தைப்படுவதுபோல, இதாலிதேசம் ஆஸ்திரிய அராசாங்கத்தின் கொடுங்கோன்மையால் பல இடுக்கண் கொண்டு வாழ்ந்து வந்தது. பல தேசாபிமானர்கள் அத் தேசத்தினிடை தோன்றி ஸ்வராஜ்யத்தை ஸ்தாபித்தனர். அங்ஙனம் உழைத்த தேசாபிமானர்களில் முதன்மையானவர் ஜோஸப் மாஜினி. மாஜினி ஊரூராகத் துரத்தப்பட்டுக் கஷ்டப் பட்டதையும், அக் கஷ்டங்களி னிடையே தேச காரிய மொன்றையே நினைத்துப் பாடுபட்டு வந்ததையும், நம் தமிழ் மக்கள் பெரிதும் அறிதல் வேண்டும். அன்னிய அரசாங்கத்துடன் சுதேச சமஸ்தானங்களும் சேர்ந்து பிரஜாதிபத்ய உணர்ச்சியை நசுக்க எங்ஙனம் பாடுபட்டு வந்ததையும் மாஜினி சரிதத்தால் நாம் அறியலாம். மாஜினியின் நாமம் நம் தமிழ் மக்களுக்குப் புதிதாகையால் சுருக்கமாக அவர் சரித்திரத்தைப் பற்றி எழுதலானேன். இரண்டாம் பதிப்பில் மாஜினியின் சில அருமை பிரசங்கங்களையும் இராஜீய தத்துவங்களையும் எழுத எண்ணியுள்ளேன். நம் தமிழ்நாட்டுத் தேசாபிமானப் புலவர் காலஞ் சென்ற ஸ்ரீசுப்பிரமண்ய பாரதி மாஜினியைப்பற்றியும் யெளவன இதாலியைப் பற்றியும் பாடின பாடலையும் சேர்த்துள்ளேன். இச் சிறு நூலைத் தமிழுணங்கு ஏற்றுக் கொள்வாளாக!

கூடலூர் சிறை.
25-5-22.

கிருஷ்ணஸ்வாமி சர்மா.

# ஜோஸப் மாஜினி

## 1. இதாலிதேசத்து நிலைமை

இதாலிதேசம் இந்தியாவைப்போல ஓர் அழகிய தேசம். இந்தியாவைப் போலவே நானாவித தேசங்களும் அனுஷ்டானங்களும் நடை யுடை பாவனைகளும் இதாலி தேசத்திலுண்டு. விதம் விதமான சீதோஷ்ண ஸ்திதியும், குன்றுகளும் மலைகளும், நதிகளும் ஓடைகளும், இதாலி தேசத்தில் உண்டு. இந்தியாவைப் போலவே இதாலியாவும் ஒரு தீபகற்பம். இந்தியாவுக்குத் தெற்கே ஸிலோன் தீவு இருப்பதுபோல இதாலிக்குத் தெற்கேயும் ஸிஸிலி என்னுமொரு தீவு உண்டு. இந்தியாவைப் போலவே இதாலியும் புராதன நாகரிகம் பெற்ற தேசம். ஆசியாவுக்கு இந்தியாவும் ஐரோப்பாவுக்கு இதாலியும் நாகரிகம் பிறந்த தேசமெனப்படும். இதாலி தேசத்து நாகரிகமே ஐரோப்பாவின் முன்னேற்றத்திற்குக் காரணம். பல அற்புதக் காட்சிகளும் இயற்கை வனப்புகளும் இதாலி தேசத்தில் இப்பொழுதும் காணலாம். இதாலி தேசத்தில் நேபல்ஸ் என்னும் நகரம் ஆச்சரியமானது. 'நேபல்ஸ் நகரைக் கண்டு பிறகு மரண மடை' என்று

ஐரோப்பியர் வழக்குச் சொல்லாகக் கூறுவதுண்டு. பைஸா நகரத்துச் 'சாய்வு கோபுரமும்' இதாலிதேசத்தி லுள்ளதே. இது உலகக் காட்சி எழில் ஒன்று. இதாலி தேசம் இந்தியாவுடனும் பாரஸீகத்துடனும் பூர்வம் வியாபாரஞ் செய்திருந்தது. ரோமாபுரி இதா லிக்குத் தலை நகர். ரோமாபுரியின் வனப்பும் வளமை யும் வெகு காலத்தது. இந்தியர்கள் ரோமாபுரியுடன் வாணிகஞ் செய்துவந்தனர். தமிழகத்தை யாண்டு வந்த முதலாவது கரிகாலன் காலத்தில் தமிழர் ரோமா புரிக்குச் சென்று பல வளங்களைக் கொண்டு வந்தனர். ரோமாபுரி பண்டை காலத்தில் உலக நாயகியாய் விளங்கி யிருந்தது. பல செங்கோன் மன்னர் ரோமா புரியை யாண்டு இதாலி தேசத்தைச் சிறப்பித்தனர். பூர்வம், ரோமாபுரியில் பலகவிஞர்கள், இசைவல்லோர், சிற்பசாரிகள், சித்திரக்காரர்கள், நாடக மாடுவோர், சரித்திர சாஸ்திர பண்டிதர்கள் முதலானோர் இருந்த னர். ரோமாபுரியை யாண்ட மன்னர்கள் இங்கிலாந்து முதலிய பல ஐரோப்பா தேசங்களையும் ஆண்டு வந்த னர். இங்ஙனம், இதாலிதேசம் பத்து நூற்றாண்டு வரை வெகு சிறப்புற்றிருந்தது. பிறகு இதாலி தேசம் கொஞ்சங் கொஞ்சமாக சிறப்பு குறைந்து அன்னியர் ஆட்சியில் சீர் குலைந்தது. இதாலி தேசத்துப் பல சிறிய தேசங்கள் ஒன்றோடொன்று போர் புரியலா யின. ஒவ்வொரு சிறிய தேசத்துக்கும் தனித்தனி சிற்றரசன் இருந்தான். சிற்றரசர்கள் குடிகளைக் கவனி யாது, தனவந்தர்களையும் பிரபுக்களையும் மற்ற உயர் குடியிற் பிறந்தோர்களையும் ஆதரித்து வந்ததால், குடி களுக்கும் பிரபுக்களுக்கும் பலமான பிரிவு உண்டாகிக் கட்சி பேதங்கள் ஏற்பட்டன. கிறிஸ்துவ பாதிரிமார்

களின் ஆதிக்கம் இதாலி தேசத்தில் பலமாக யிருந்து வந்தது. பாதிரிமார்கள் தங்களுக்குள்ளே நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள், பொது ஸ்தாபனங்கள் ஆகிய எல்லாவற்றையும் தனிப்படையாக ஸ்தாபித்து வந்தனர். நாட்டின் வருவாயில்களைப் பாதிரிமார்களும் பிரபுக்களும் போட்டி போட்டு வீண் செலவு செய்து வந்தமையால் சாதாரண பிரஜைகள் அவர்கள்மீது துவேஷங் கொண்டுவந்தனர். சாதாரண பிரஜா சமூகத்திலிருந்து பல மேதாவிகள் உண்டாகி பிரபுத்துவத்தையும் பாதிரிமார்களின் ஆதிக்கத்தையும் அழிக்க முன் வந்தனர். கார்லோ டேனீனு, பாரட்டி முதலியவர்களும் கணித சாஸ்திரி லாக்ரேஞ்சும் இதாலியாவிற்றோன்றினர். மூன்றுவது அமாதியஸ்விக்டர் என்பவன் அரசாண்டு வந்தான். அவன் இராணுவம் ஒன்றிலேயே தன் கவனத்தைச் செலுத்தி வந்ததால், மற்ற விஷயங்களைக் கவனிக்காமல் விட்டுவிட்டான். பிரஜைகளின் உரிமை பல பிரபுக்களாலும் பாதிரிமார்களாலும் பறிக்கப்பட்டு வந்தது. இதாலி தேசத்திலுள்ள பலசிறிய தேசங்களுள் பைத்மாண்ட் முக்கியமானது. அத் தேசத்து நிலைமையைப் போலவே மற்ற லம்பார்டி, வெனிஷியா, எமிலியா, டஸ்கனி, நேபல்ஸ் முதலிய சிறிய தேசங்களின் நிலைமையும் தடுமாறிக் கொண்டிருந்தது. லம்பார்டி தேசம் மிகவும் செழிப்புள்ளது. இது சிலகாலம் ஸ்பெயின் தேசத்தார் கீழும், ஆஸ்திரியர்கள் கீழும் பிரன்சுக்காரர்கள் கீழும் இருந்தது. பதினெட்டாவது நூற்றூண்டில் ஆஸ்திரியர்கள் இத் தேசத்தைக் கைப்பற்றி யிருந்தனர். மிலன், வெனிஸ், ஜினேவா, மதோனு, ரோம் முதலிய பல முக்கிய பட்டணங்கள் சீர்குலைய ஆரம்

பித்தன. பிரஜைகள் சகிக்க முடியாத தொல்லைக் குட்பட்டிருந்தனர். பிரான்சு தேசத்தில் இராஜ்யப் புரட்சி உண்டாயிற்று. சாதாரண பிரஜைகளுக்கும் பிரபுக்களுக்கும் கலகமுண்டானதைப்பற்றியும் குடியரசுக்கும் சமத்துவ பாத்தியதைக்கும் ஜனங்கள் பெருங் குழப்பஞ் செய்து வருகின்றனென்றும் கேள்வியுற்ற இதாலி பிரஜைகள் அச் சமத்துவ உணர்ச்சியைக் கொள்ள ஆரம்பித்தனர். இதாலி தேசத்துப் பல சிற்றரசர்கள் தாங்கள் தங்கள் தேசத்தில் பிரஜைகளைச் சாந்தப்படுத்த சீர்திருத்தங்கள் செய்தனர். அச் சீர்திருத்தங்களை மகாஜனங்கள் அங்கீகரிக்கவில்லையாயினும் பிரன்சு பிரஜைகள் செய்த கலகத்தைப் போல் செய்யத் தயாராகவில்லை. அப்படியிருக்க, இதாலிதேசம் கொஞ்சங் கொஞ்சமாகப் பிரான்சு தேசத்து உணர்ச்சியைப் பெற்றுக் கடைசியாக அத் தேசத்திற் குட்பட்டது. நேபோலியன் இதாலி தேசத்தை வென்று பிரஜைகளுக்குச் சுதந்தரங் கொடுத்தான். ஆஸ்திரியர்களின் ஆதிக்கத்தில் பல வருடகாலம் இருந்துவந்த இதாலிபிரஜைகள் சமத்துவ உணர்ச்சியையும் சுதந்தரத்தையும் நெபோலியனிடமிருந்து பெற்றனர். பல சிற்றரசர்கள் நெபோலியன்மீது பல சூழ்ச்சி செய்தும் பிரயோசனமில்லாமற் போயிற்று. பாதிரிமார்களின் ஆணவமும் நெபோலியனால் ஒழிந்தது. பிரன்சு பிரஜைகளின் இராஜீய உணர்ச்சியை இதாலி மகாஜனங்கள் கொண்டனர். இதாலி பிரஜைகளுக்கும் சமத்துவம், சுதந்தரம், சகோதரத்துவம் என்னும் இம்மூன்று தர்மங்களின் பொருள்களை யுணரும் சக்தி யுண்டாயிற்று. நெபோலியனுடைய நிலைமை மாறி பிரான்சுதேசம் போர்

போன் வமிசத்தனருக் குட்பட்டதால், இதாலிதேசத்தின் நிலைமையும் மாறி பழைய சிற்றரசர்களின் ஆதிக்கம் உண்டாயிற்று. ஆஸ்திரியர்கள் இதாலிதேசத்தைக் கைப்பற்றி அச்சிற்றரசர்களைத் தங்கள் ஆதீனத்தின் கீழ்ப்படுத்தி வந்தனர். இதாலி ஜனங்கள் பிரான்சுதேசத்து நாகரிகத்தையும் அரசியலையும் இராஜீய உணர்ச்சியையுங் கொண்ட வாழ்க்கையைப்பற்றி வந்ததால், ஆஸ்தியர்களின் புதிய ஆதிக்கம் அவர்களுக்குத் துன்பமாகவே இருந்தது. ஆஸ்திரிய மன்னனும் இதாலி பிரஜைகளைக் கொடுங்கோன்மை கொண்டு பரிபாலிக்க முயன்றான். 'என்னால் வெற்றி பெற்றவர்களானதினால், நீங்கள் இதாலியர்கள் என்பதை மறந்து இருங்கள்' என்று ஆஸ்திரியமன்னன் பறை சாற்றினான். ஆஸ்திரியமன்னன் கூறின வார்த்தையைக் கேள்வியுற்ற பிரஜைகள் இதாலி தேசத்தவர்களென்னும் உணர்ச்சியைப் பெருக்க பெருமுயற்சிகொண்டு ஒருப்பட்டு வரலாயினர். பிரஜைகளுக்குள்ளே புதிய சக்தியொன்று உண்டாயிற்று. சபைகளும் சமாஜங்களும் ஏற்படுத்தி சமுதாய ஒற்றுமையை யவர்கள் உண்டுபண்ணி வந்தனர். ஆஸ்திரிய அரசாங்கத்தார் ஜனங்களின் உணர்ச்சியை யடக்கப் பல இரகசியப் போலீஸார்களை யமைத்தனர். இதாலி பிரஜைகளைத் துன்புறுத்தவும் சபைகளையும் சமாஜங்களையும் உடைக்கவும் ஆஸ்திரிய அரசாங்கத்தார் அப்போலீஸார்களுக்கு உத்திரவு கொடுத்தனர். சுதந்தர உணர்ச்சி பிரஜைகளுக்குள்ளே பரவாமலிருக்க அன்னிய பிரபுத்வத்தார் பாடுபட்டு வருகையில், பிரஜைகளின் தலைவர்களும் முக்கியஸ்தர்களும் மேன்மேலும் சாமான்ய ஜனங்களுக்குச் சமத்துவ உரிமையையும் சுதந்தர தாகத்தை

யும் உண்டாக்கி வந்தனர். சுதந்தர உணர்ச்சியையும் பிறப்புரிமையையும் அன்னிய பிரபுத்துவத்தின் பாதகத்தையும் பிரஜைகளுக்கு எடுத்துக்காட்ட பல பத்திரிகைகள் ஸ்தாபிக்கப்பட்டன. ரஸோரி, ஸில்வியோ பலிகோ, பிலிப்போ முதலிய தலைவர்கள் பத்திரிகைகளுக்கு வியாசம் எழுத முன்வந்தனர். ஆஸ்திரிய அரசாங்கத்தார் சும்மா யிருக்கவில்லை. பத்திரிகைகளின் நடமாட்டத்தைத் தடுத்தனர். பத்திரிகாசிரியர்களையும் விஷய தானஞ் செய்தவர்களையும் அன்னிய அரசாங்கத்தார் சிறைப்படுத்தினர். புதிய சட்டங்கள் பல உண்டாயின. கடைசியாக பிரஜா சுதந்திரத்தை ஸ்தாபிக்கப் பகிரங்கமான வழிகளைக்கொண்டு செய்ய முடியாதெனக்கண்டு இதாலி தேசாபிமானர்கள் இரகஸிய சமாஜங்களை ஏற்படுத்தினர். அவ்விரகஸ்ய சமாஜத்திற்கு கர்போனரி என்று பெயர். 1820-ம் வருடம் ஜுலைமாதம் 2-ந்தேதி மாரேலி, ஸில்வேடி என்னும் இருவர் நூற்றிருபத்தேழு பேர்களுடன் கர்போனரி சமாஜத்திற்குரிய கறுப்பு, சிவப்பு, நீலம் ஆகிய மூன்று வர்ணமிட்ட கொடிகளை அடையாளமாகக்கொண்டு நோலா என்னும் இடத்திலிருந்து 'கடவுளுக்காகவும், அரசனுக்காகவும், தேசத்திற்காகவும்' என்று கூறிக்கொண்டு வெளிவந்தனர். அவர்களோடு மற்றுஞ்சிலரும் சேர்ந்தார். வரவர அவர்களுக்கு ஆள்பலம் அதிகமாயிற்று. பிரஜைகளில் அநேகர் சேர்ந்தனர். ஆஸ்திரிய அரசாங்கத்தின் கீழிருந்து நேபல்ஸ் சமஸ்தானத்தை யாண்டுவந்த சுதேச மன்னனை பர்டினண்டை நேபல்ஸ் பிரஜைகளுக்குத் தாராள உரிமையையும் பொதுஜனவாக்கைக் கொண்ட பார்லிமெண்ட் சபையையும் உண்டாக்க கர்போனரி

சமாஜத்தார் தூண்டினர். அச்சிற்றரசன் ஜனங்க ளுடைய பலத்தை யுணர்ந்து ஒருவாறு சம்மதித்தான். பிரஜாதிபத்ய உணர்ச்சியை யூட்டப் பல மேதாவிகள் தோன்றினர். கப்ரீல் ரோஸட்டி தன் கவி சாதுரியத் தால் இதாலி பிரஜைகளை சுதந்தர உணர்ச்சிகொள்ள எழுப்பினர். அவருடைய கவிகள் பலருடைய மன தைத் துளைத்து வீராவேசம் கொள்ளச் செய்தன. பர்டினண்ட் நேபல்ஸ் தேசத்தைவிட்டு ஆஸ்திரியா சென்றான். பிரஜைகளின் ஆதிக்கம் நேபல்ஸ் தேசத்தி லுண்டாயிற்று. ஆஸ்திரிய அரசாங்கத்தார் அதைச் சகியாமல் உடனே படையைத்திரட்டி நாட்டைக் கைப் பற்ற உத்திரவு செய்தனர். ஆஸ்திரியபடை நேபல்ஸ் தேசத்தைத் தகர்த்து பிரஜைகளின் ஆதிக்கத்தை யழித்து மீண்டும் கொடுங் கோன்மையை ஸ்தாபித் தது. இதாலி தேசத்திலுள்ள மற்றொரு சமஸ்தான மாகிய பைத்மாண்டும் கர்போனரி சமாஜத்தாரின் உணர்ச்சியில் ஈடுபட்டது. விக்டர் எமான்னியல் என்பவன் அந்த சமஸ்தானத்திற் கதிபதியாயிருந் தான். அவன் ஜனங்களின் உணர்ச்சியை யறிந்து அவர்களுக்கு உரிமைகளைக் கொடுக்கவும் ஒருவாறு மனங் கொண்டிருந்தும், ஆஸ்திரிய சாம்ராஜ்யத்திற் குக் கொடுத்தவாக்கை நிலைநிறுத்தக் கடமைப் பட்ட வனாயிருப்பதை யுணர்ந்து, உடனே அரச பதவியைத் துறந்து தன் ஸ்தானத்தைத் தம்பியான சார்லஸ் பலிக்ஸ் என்பவனுக்குக் கொடுத்தான். சார்லஸ் பலிக்ஸ் மதோனாவி லிருந்ததினால் அவன் தனக்கு வந்த இராஜீய பதவியை சார்லஸ் ஆல்பர்ட்டுக்குக் கொடுத்துத் தான் வருமளவும் தனக்காக பரிபாலித்து வரும்படி கட்டளையிட்டான். சார்லஸ் ஆல்பர்ட்

இயற்கையிலேயே நல்ல குடியரசு உணர்ச்சியைக் கொண்டவன். பாரிஸ்நகரில் படித்து பிரன்சு பிரஜைகளின் இராஜீப உணர்ச்சியை நன்கு உணர்ந்தவன். அன்னிய பிரபுத்துவமின்றி இதாலிதேசம் சர்வ சுதந்தரத்துடனிருக்க வேண்டுமென்னும் கொள்கையைக் கொண்டவன். சமத்துவ உணர்ச்சியுள்ளவன். சார்லஸ் ஆல்பர்ட் பட்டத்திற்கு வந்ததும் அரசாங்கத்தில் புதிய சீர்திருத்தங்களைக் கொடுத்து பிரஜா உரிமையை ஸ்தாபிக்கும் சட்டங்களையும் ஏற்படுத்தினன். சார்லஸ் ஆல்பர்ட் செய்த அரசியல் திருத்தங்களைக் கேள்வியுற்ற சார்லஸ் பலிக்ஸ் உடனே, அந்த சீர்திருத்தத்தைச் செய்ய ஆல்பர்டுக்கு அதிகாரமில்லை யென்றும் முன்யாதிரியாகவேதான் அரசியல் நடத்தப்படுமென்றும் மதோனாவிலிருந்து விளம்பரப்படுத்தினன். நேபல்ஸ் தேசத்தைப் பழையபடி கொடுங்கோன்மையுடன் அரசாள வந்த ஆஸ்திரிய அரசாங்கம் பைத்மாண்ட் தேசத்தின் மீதும் ஒரு படையையனுப்பிற்று. சார்லஸ் ஆல்பர்ட் தன்னுடைய நிலைமையை யுணர்ந்து ஒருவருமறியா வண்ணம் இரவோடிரவாய் தேசத்தை விட்டு பிளாரன்ஸ் நகருக்குச் சென்றான். கர்போனரி சமாஜத்தாரின் தூண்டுதலினால் பிரஜைகள் தேசத்தில் கலகஞ்செய்ய வாரம்பித்தனர். சார்லஸ் பலிக்ஸின் விளம்பரத்தை அங்கீகரிக்கவில்லை. பிரஜைகளுக்கும் பழைய அரசாங்கத்தவர்களுக்கும் கொடிய போர் உண்டாயிற்று. கர்போனரி சமாஜத்தார் பலமான படைக்கு முன் நிற்க முடியாமல் தோல்வியடைந்தனர். சிலர் சிறைபட்டனர். சிலர் ஊரைவிட்டு ஜீனேவா சென்றனர். பிரஜாதிபத்ய கட்சியினர் சின்னபின்னப்பட்டு மூலைக்கு மூலையோடினர். பல தேசாபிமானர்கள்

தூக்கிலிடப்பட்டனர். பலவிதமான அடக்கு முறைகளைக்கொண்டு சுதந்தர உணர்ச்சியை யழித்தனர். நாட்டில் கலவரமும் பயமும் உண்டாயிற்று. எடுத்ததற்கெல்லாம் சிறைவாசமும் தொடுத்ததற் கெல்லாம் தூக்கு தண்டனையாகவுமிருந்தது. ஜனங்கள் குன்றினர். ஒவ்வொரு காரியத்திலும் ஆஸ்திரிய அரசாங்கத்தார் துன்புறுத்தினர். சிறையில் தக்க உணவின்றியும் ஆடையின்றியும் கேவலமான குற்றங்களுக்குத் தண்டனை யடைந்தவர்களுடன் சேர்க்கப்பட்டு அவர்களை அரசாங்கத்தார் வருத்தி வந்தனர். ஆஸ்திரிய அரசாங்கத்தின் கீழ் பரிபாலித்து வந்த சுதேச மன்னர்கள் ஆஸ்திரியர்களைவிட அதிகமாக பிரஜைகளைத் துன்பப்படுத்தி வந்தனர். பல கடுமையான சட்டங்களும் உத்திரவுகளும் ஏற்படுத்தப்பட்டன. தாராள நோக்கத்தைக் கொண்டவர் ஒவ்வொருவரிடத்தும் அந்த சமஸ்தானாதிபதிகள் சந்தேகங்கொண்டு இரகஸிய போலீஸார்களை யமைத்துக் காவல் காத்து வந்தனர். இரகஸிய போலீஸார் அவர்களைப்படாத பாடெல்லாம படுத்தி, தற்கொலை பண்ணும்படியாகவும் செய்துவந்தனர். இரகஸிய போலீஸார்களுடைய தொல்லைக்கும் சமஸ்தானாதிபதிகளுடைய துன்பத்திற்கும் ஆஸ்திரிய அரசாங்கத்தின் கொடுங்கோன்மைக்கும் பயந்து பல இதாலி தேசாபிமானர்கள் தங்கள் ஜன்ம தேசத்தை விட்டுவிட்டு வெளி தேசங்களுக்குச் சென்று அடைக்கலம் புகுந்தனர். மதோனாவை யாண்டுவந்த சுதேசாதிபதி நான்காவது பிரான்ஸிஸ் ஜன தலைவர்களுக்குச் செய்த அக்கிரமங்களுக்கு எல்லையில்லை. ஜனத்தலைவர்களை வரிசைவரிசையாக அணிவகுத்து நிற்கவைத்துப் பீரங்கிகளால் சுட்டான். தலை

வர்களுடைய கழுத்தை யறுத்துத் தலையைக்கொம்பில் சொருகி ஊர்வலமிட்டு வருவான். சில தலைவர்களுடைய சிரசுகளைக் கொய்து, கொய்த சிரசுகளை நாற்சந்தியில் நிறுத்திவைப்பான். சுதந்தரம், தேசாபிமானம் என்னும் சொற்கள் காணும் இடங்களிலெல்லாம் இராஜபக்தி என்னும் சொல்லை உபயோகப்படுத்த அவன் உத்திரவு செய்தான். அந்நாளில் சுதேசாதிபதிகள் பணத்திற்காகப் பல உத்தியோகங்களையும் விற்றுவந்தனர். சுதேச சமஸ்தானங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக வேறுபட்டு இருந்தமையால் ஒற்றுமை யென்பதில்லாமல் சதா போராடிவந்தன. பிரஜைகளும் வெவ்வேறு வழிசென்று ஒருவரையொருவர் பாராட்டாது தனிப்பட்டு வாழ்ந்துவந்தனர். அத்தருணத்தில் மாஜினி என்பவரும் அவரைச்சேர்ந்த சிலரும் ஜனங்களுடைய அவிவேகத்தையொழித்து தேசாபிமானத்தையூட்ட முன்வந்தனர். மாஜினி, இதாலி தேசத்தை எங்ஙனம் முன்னுக்குக் கொண்டு வந்தாரென்பதையும், எங்ஙெந்த விதமாகப் பாடுபட்டாரென்பதையும் நம் தமிழ் மக்களறிய வேண்டும். மாஜினியோடு அவர் குழாங்கள் பல இடுக்கண்களுக்கும் உட்பட்டு இதாலிதேசத்தில் சுதந்தரத்தையும் ஸ்வராஜ்யத்தையும் ஸ்தாபித்ததையும்பற்றி நம் தமிழ் மக்களறியவேண்டும். இதாலிதேசத்து ஸ்வராஜ்யத்துக்கு அடிகோலின ஜோஸப் மாஜினி அவர்களின் சரிதையைப்பற்றி நாம் சற்று கவனிப்போம்.

# 2. ஜோஸப் மாஜினி

இதாலி தேசத்திலுள்ள பழைய சுதேச சமஸ்தானங்களில் லிகூரியா என்பது ஒன்று. பைத்மாண்ட் என்னும் சமஸ்தானத்திற்குத் தெற்கிலுள்ளது. ஜினோவா வளைகுடாக் கடலைத் தெற்கு எல்லையாகக்கொண்ட லிகூரியா சற்றேறக்குறைய இற்றைக்குப் பத்துலட்சம் ஜனத்தொகையைக் கொண்டது. லிகூரியா பழையகாலந்தொட்டே உயர்ந்த சிற்ப சாஸ்திரவல்லோர்களுக்கும் சித்திரக்காரர்களுக்கும் பேர் போனது. இதாலிதேசத்து சித்திரங்களின் மேன்மைக்கு லிகூரியாவே காரணம். லிகூரியாவில் பிரசித்திபெற்ற சில பட்டினங்கள் இற்றைக்கும் மேன்மை பெற்று விளங்கிவருகின்றன. லிகூரியாவுக்குத் தலைநகராக விளங்கிவந்த ஜினோவாவில் ஜோஸப் மாஜினி கி. பி. 1805-ம் வருடம் ஜூன்மாதம் 22-ந்தேதி பிறந்தான். மாஜினியின் தகப்பனார் அந்நகரிலுள்ள சர்வகலாசாலை யொன்றில் வைத்திய பரிசோதகராகயிருந்தார். அவர், கலாசாலைக்குப் போகும் நேரந்தவிர, மற்ற நேரங்களில் ஏழைகளுக்குத் தர்மவைத்தியஞ் செய்துவந்தார். அவர் நல்ல தேசாபிமானி. ஜனங்களுடைய நல்வாழ்க்கையில் சதா விருப்பமுள்ளவர். பிரஜாதிபத்ய உணர்ச்சி அவருடைய இரத்தத்தில் கலந்திருந்தது. சமத்துவத்தைச் சதா தன் உள்வாழ்க்கையிலும் வெளிவாழ்க்கையிலும் அவர் பாராட்டிவந்தார். அவர் வீடு சதா சிரித்துக்கொண்டிருக்கும். அவர் தன்மனைவியுடனும் மக்களுடனும் எப்பொழு

தும் வாழ்க்கையின் பயனைப்பற்றிப் பேசுவார். சில அந்தரங்க நண்பர்கள் அடிக்கடி அவருடன் பிரஜாதி பத்யத்தைப்பற்றியும் தேச முன்னேற்றத்திற்குரிய பிரயத்தனங்களைப்பற்றியும் பேசுவதுண்டு. அதனால், அவருடைய கிரகம், ஆஸ்திரிய போலீஸ் வேவுகாரர்களுடைய கண்ணோட்டத்திற்கு விழுமோவென்ற பயம் அவருக்கு வெகுவாய் இருந்தது. மாஜினியின் தாயாரும் நல்ல உத்தமி. தேசாபிமானங்கொண்டவள். பெண்களுக்குரிய பயம் அப்போதைக்கப்போது இருந்து வந்தும், கூடியவரையில் அவள் நாட்டின் முற்போக்குக்குரிய விஷயங்களிலும் பிரஜாநிபத்ய உணர்ச்சிக்குரிய ஸ்தாபனங்களிலும் பாடுபட்டு வந்தாள். அவளுக்கு மாஜினி என்னும் ஒரு பிள்ளையும் மூன்று பெண் குழந்தைகளும் இருந்தன. மாஜினி, சிறுபிராயத்திலிருந்தே பலஹீனமுள்ளவன். ஆனால் நல்ல மனோதிடங் கொண்டவன். பிரான்சு தேசத்தைப் பரிபாலித்துவந்த நெபோலியன் ஆட்சிமுறை சின்னாபின்னப்பட்ட காலத்தில் மாஜினிக்கு வயது ஒன்பது. நெபோலியன் இதாலிதேசத்தைச் சேர்ந்தவனென்றும் நேசக்கட்சியினர்களின் அக்கிரமங்களினால் இதாலி தேசத்தைச் சேர்ந்த எல்பா தீவில் நெபோலியன் வைக்கப்படப்போகிறான் என்றும் மாஜினி தன் தந்தை கூறக் கேட்டான். மாஜினியினுடைய வீட்டில் தாய் தகப்பன்மார் சதா பிரஜாதிபத்யத்தைப்பற்றி பேசி வந்ததினாலும் பிரன்சுக்காரருடைய பிரஜாதிபத்தியப் போர்களைப்பற்றி அடிக்கடி கண்தருபமாகத் தகப்பனார் கூறி வந்ததினாலும், பாரிஸ்நகரில் சுதந்தரப்புரட்சி காலத்தில் எற்பட்ட பலகட்சிகளுக்குள்ளே கிராண்டிஸ்ட் க்ட்சியார் வெளியிட்ட பத்திரிகைகளின் பழைய

பிரதிகள் பல வீட்டில் இருந்து அவைகளைப் படித்து வந்ததினாலும், லத்தீன் பாஷையைக் கற்பித்துவந்த உபாத்தியாயரின் பாடங்களினாலும், மாஜினி சின்னஞ் சிறு வயதிலேயே இராஜீய விஷயமாகத் தீவிர ஞான மடைந்ததுந் தவிர, பிரஜாதிபத்ய உணர்ச்சியையுங் கொண்டான். மாஜினி தன் வீட்டிலேயே இராஜீய ஞானத்தைப் பெற்றான். அக்காலத்தில், கலாசாலை களில் சரித்திரங்கள் உண்மையாகக் கற்பிக்கப்படுவ தில்லை. சுதந்தர உணர்ச்சியைக்கொண்ட கவிஞர்களின் பாடல்களையும் புத்தகங்களையும் பாடங்களாகக் கல்லூரி யில் வைப்பது கிடையாது. சுதந்தர உணர்ச்சியும் இராஜீய ஞானமும் உண்டாகாமலிருக்கப் பல ஏற்பாடு களை ஆஸ்திரிய அரசாங்கத்தார் கல்லூரியில் செய்து வந்தனர். இதாலி தேசத்துப் பழைய நாகரிகம், பழைய சாஸ்திரம், பழைய கலைஞானம், யாவும் தோன்றா வண்ணம் அரசாங்கத்தார் செய்துவந்தனர். மாஜினி, தகப்பனாரைப்போலவே வைத்தியராகப் போக எண் ணங்கொண்டு சிலகாலம் வைத்திய முறையைக் கற்றுக் கொண்டு வருகையில், ஒருநாள், தன் தகப்பனார் ஒரு வியாதியஸ்தனுக்கு இரணசிகிச்சை செய்துவருவதைக் கண்டு சகியாமல் மூர்ச்சித்து வீழ்ந்தான். தகப்பனார், மாஜினி வைத்திய வழிக்குத் தக்கவனல்லவென்று கொண்டு, சட்டப்படிப்பைக் கொள்ள ஏற்பாடு செய் தார். மாஜினி சிறு பிராயத்திலிருக்கையில் பைத் மாண்ட் தீவிர கட்சியினர் அன்னிய அரசாங்கத்தை உதறித்தள்ளி குடியரசை ஸ்தாபிக்கக் கலகஞ்செய்து, பின்னர் அக்கலகம் அடக்கப்பட்டுப் போனபின், அத் தீவிர கட்சியினரிற்பலர் வெளிநாடுகளுக்குச் சென்ற னர். அவர்களுக்கு உதவிசெய்யச் சிலர் சகாயநிதி

திரட்டிவந்தனர். ஒரு நாள், மாஜினியும் அவன் தாயாரும் மாலைப்பொழுதில் உலாவிவர வெளிப்புறப்பட்டுப் போகையில், தீவிர கட்சியினர்களின் உதவிக்காக சகாய நிதிதிரட்ட ஒருவன் மாஜினியின் தாயிடம் நெருங்கிக் கேட்கவே, அவள் உடனே தன்னிடமிருந்த பணத்தைக் கொடுத்துதவினாள். அதையறிந்த மாஜினி அந் நாள் முதல் தீவிர கட்சியினர்களின் கொள்கையைப் பற்றியும் அவர்களுடைய ஆழ்ந்த தேசாபிமானத்தைப் பற்றியும், தாய்நாட்டுத் திருத்தொண்டு செய்யும் பரம பாகவத குணத்தைப்பற்றியும் நினைத்துப் படிப்பில் அதிகமாகக் கவனஞ்செலுத்துவதை நிறுத்தித் தேசத்தைப்பற்றி பலமான யோசனைசெய்ய ஆரம்பித்தான். தன் தாய்நாடு அன்னியப் பிரபுத்துவத்தின்கீழ் துக்கப்பட்டு வருவதை யுணர்ந்து மாஜினி அந் நாள்முதல் மரணபரியந்தம் துக்கத்தைக் காட்டும் கறுப்புச் சட்டையையே யணிந்து வந்தான். பல சமயங்களில் தன்னந் தனியே யிருந்து கண்ணீர் சொரிவான். உணவையும் வெறுத்து உறக்கத்தையுந் தவிர்த்துப் பல நாள் ஆழ்ந்த யோசனையிலேயே மாஜினி இருந்துவருவான். தாய் நாட்டின் துர்ப்பாக்கிய ஸ்திதியைக் கண்டு நொந்து பிராணத்தியாகஞ் செய்யவும் நினைத்தான். கடைசியாக, தனக்குத்தானே மனதைத் தேற்றிக் கொண்டு சட்ட புத்தகங்களைப் படிக்க வாரம்பித்தான். சரித்திரத்திலும் கவிதைகளிலுமே இவன் காலத்தைக் கழிப்பான். மாஜினி பிரவேசப் பரீட்சையில் தேறின போது அவனுக்கு வயது பதினான்கு. அக்காலத்தில் கல்விச்சாலைகளில் மதபாடம் கட்டாயப்படுத்தப்பட்டிருந்தது. மாஜினி அப்பாடத்திற்குப் போகமாட்டான். மதத்தைப்பற்றிய விஷயங்களில் இவனுக்கு

நம்பிக்கை யில்லையென்பது தில்லை. நல்ல மதப்பற்று கொண்டவன். அப்பாடத்தைக் கட்டாயப்படுத்தினதினல், மாஜினி கட்டாயப்படுத்தும் காரியத்தை வெறுத்ததின் பேரில், மதப்பாடம் கற்பிக்கும் காலங்களில் வகுப்புக்குப் போவதில்லை. நிர்ப்பந்தப்படுத்துங் காரியம் ஒவ்வொன்றும் சுதந்தர உணர்ச்சிக்குத் தடையாயிருப்பதினல், சுதந்தர எழுச்சியைக்கொண்ட மாஜினி சிறு வயதிலேயே மதப் பாடத்தை வெறுத்து வந்தான். கல்விச் சாலைகளில் மாணவர்களுக்குச் சுதந்தரம் என்பது கிடையாது. அன்னிய அரசாங்கத்தார் மாணவர்களுக்கு வேதனம் கொடுத்து உதவுவதில்லை. மதப்படிப்பு கற்பிக்கும் வகுப்பில் சரியாக வந்து கொண்டிருக்கும் மாணவர்களுக்கு நன்னடக்கைப் பத்திரமும் வித்யாபத்திரமுங் கொடுக்கப்படும். அன்னிய அரசாங்கத்தாரின் மேல் பார்வையில் நிர்ப்பந்தமாக நடத்தப்பட்டு வந்த கல்லூரிகளில் நல்ல மேதாவிகள் ஆசிரியர்களாக வருவதில்லை. சாமானியர்களும், அரசாங்க உத்தியோகஸ்தர்களின் தயவுக்கு நச்சியிருப்பவர்களும், தேசாபிமான உணர்ச்சியில்லாதவர்களுமே போதகாசிரியர்களாக அமர்ந்தனர். கல்லூரிகளில் போதகாசிரியர்கள், உபாத்தியாயர்கள், குற்றேவல் செய்பவர்கள் ஆகிய அனைவரும் மாணவர்களின் சுதந்தரங்களைக் குறைத்துப் பலவித இடுக்கண்களை அவர்களுக்கு விளைத்து வந்தனர். மாணவர்கள் மீசை வைத்துக் கொண்டிருக்கக்கூடாது. மீசை வைத்திருப்பது பிரஜாதிபத்ய உணர்ச்சிக்கு அடையாளமாம். மீசை வைத்திருக்கும் மாணவர்களின் கைகால்களைக் கட்டிப் பக்கத்திலிருக்கும் அம்பட்டன் சாவடிக்குக் கொண்டுபோய் மீசையைச் சிரைத்துப்

பிறகு கலாசாலைகளுக்கு அழைத்துக்கொண்டு வருவர். மாஜினி கல்லூரியில் உள்ள மாணவர்களால் கௌரவிக்கப்பட்டான். இவன் வீண்வார்த்தைகளில் காலத்தைச் செலவு செய்யமாட்டான். தேகப்பயிற்சிக்குரிய குஸ்தி கவாத்து முதலியவைகளில் இவன் பழகி வந்தான். மற்ற நேரங்களில் சதா சரித்திரங்களையும் இராஜீய நூல்களையும் இவன் படித்துவருவான். ஓய்ந்தநேரங்களில் தாயுடன் பல கவிஞர்களின் பாடல்களைப்பற்றியும் சங்கீதத்தைப்பற்றியும் வாதிப்பான். காப்பி குடிப்பதில் இவனுக்குப் பிரியமுண்டு. அடிக்கடி சுருட்டு பிடிப்பான். சிறு பிராயத்திலேயே மாஜினி நல்ல பிரசங்கஞ்செய்யும் சக்தியைப் பெற்றிருந்தான். இவன் நல்ல நேர்மையும் கண்ணியமுங் கொண்டு கல்லூரியில் மாணவர்கள் புகழ கல்விகற்று வந்தான். இவனுக்கு ஜகோபோ, கியோவன்னி, அகாஸ்தினோ ரப்பினி ஆகிய இம்மூன்று சகோதரர்கள் சிநேகிதர்களானார்கள். ஜகோபோவும் ஜோஸப் மாஜினியும் இணை பிரியா சிநேகிதர்களாகி, சதா நாட்டின் விஷயத்தில் கவனத்தைச் செலுத்திவந்தனர். மாஜினி தன் நண்பர் பலருடன் கூடி ஒரு புதிய சபையை ஸ்தாபித்தனன். அச்சபையில் சரித்திரம், இராஜீய நூல்கள், இலக்கியம் முதலிய விஷயங்களைப்பற்றிப் படிப்பது வழக்கம். தவிர அரசாங்கததாரால் தடுக்கப்பட்ட புத்தகங்களையும் இரகஸியமாக வரவழைத்து ஆங்கு அவர்கள் படிப்பதுண்டு. பிரஜாதிபத்ய உணர்ச்சியையும் மற்ற இராஜீய விஷயங்களில் தீவிரஞானத்தையும் கொடுக்கும் பல புத்தகங்கள் வெளிதேசங்களிலிருந்து இரகஸியமாக வரவழைத்து அவர்கள் படித்து வந்தனர். மாஜினி, ஆங்கிலம், ஜர்மென்,

பிரன்சு முதலிய பாஷைகளில் நல்ல ஞானங் கொண்டிருந்ததால் அந்தந்த ஊர்களிலிருந்து பல இராஜீய நூல்களை வரவழைத்து வந்தான். பைபில், டாண்டியின் சாஸ்திரம், ஷேக்ஸ்பியர் நாடகங்கள் பைரன் கவிதைகள் ஆகிய இந்நான்குமே மாஜினியின் அருமைப் புத்தகங்களாகும். டாண்டியின் புத்தகத்தினின்றும் இவன் மனித ஐக்கியம், ஆழ்ந்த தேசாபிமானம், தர்மத்தின் ஸ்வரூபம், முதலிய அருமையான இரகஸியங்களை யுணர்ந்தான். இதாலிதேசமும் ரோமாபுரியும் பழையபடி உலகத்திற்கு ஞானகுருவாக விளங்கப் போவதையும் மாஜினி டாண்டியின் கிரந்தத்தால் அறிந்தான். பைரன் கவியைப்பற்றி மாஜினிக்குச் சொல்ல முடியாத பக்தியுண்டு. ஆங்கில கவிகளுக்குள் பைரன் கவியே சிறந்தவ ரென்பது இவனுடைய எண்ணம். தவிர, பல பிரன்சு கிரந்தங்களையும் படித்து வந்தான். மைகவல்லியின் இராஜீய நூல்களையும் அவருடைய அரசியல் கொள்கையையும் அடிக்கடி இவன் படித்து வருவான். பிரான்சு தேசத்து தேசாபிமானர்களான வால்டேர், ரூஸோ முதலியவர்களின் கிரந்தங்களையும் மாஜினி படிப்பான். மத உணர்ச்சியை யூட்டக்கூடிய ஒரு சரித்திரமும், இதாலி தேசத்தின் உண்மையான சரித்திரமொன்றும் உலகத்து அற்புதமான நாடகங்களைக் குறிக்கும் புத்தகமும் இதாலியா ஜனங்களுக்கு அவசியமானதென மாஜினி கூறிவந்தான். 'சுதந்தர உணர்ச்சியையும், தேச அபிவிர்த்தியையும் கொடுக்காத இலக்கியங்களால் இதாலி தேசம் இராஜீயத்துறையிலும், சமுதாய சீர்திருத்தத் துறையிலும் முன்னேற்ற மடையாது' என்று மாஜினி கூறினான். ஒரு தேசத்தினுடைய இராஜீய நிலைமையை

யறிவதற்கு அத்தேசத்தின் இலக்கியங்களே சான்றாகும். இலக்கிய ஆராய்ச்சி வளரவளர தேசத்தின் இராஜீய நிலைமை உன்னதபதவியை யடையுமென்பது பல இராஜீயவாதிகளின் கொள்கை. இலக்கியமும் தர்ம நீதியும் ஜனங்களின் சுதந்தரவாழ்க்கைக்கு அச்சாணி போன்றவை. மாஜினி பல நூல்களின் ஆராய்ச்சியினாலும், பல சரித்திரங்களின் ஆராய்ச்சியினாலும், முதிர்ந்த ஞானங்கொண்டு, இதாலிதேச முன்னேற்றத்திற்குப் பல துறைகளிலும் வேலை செய்ய தீர்மானித்தான். இதாலிதேசத்து ஜனங்களுக்குப் புதிய உணர்ச்சியுண்டாகுமாறு அத்தேசத்தின் நவசக்தியைக்கொண்டு 'யௌவன இதாலி' என்று புதுப்பெயரிட்டு இதாலியை யழைக்க இவன் முன்வந்தான். அன்னிய அரசாங்கத்தின் மேல்பார்வையிலுண்டாகும் பத்திரிகையின் நடமாட்டம் சரியல்லவென்றும், ஜனங்களுக்குப் புதிய உணர்ச்சியுண்டாவதற்கு அன்னிய அரசாங்கத்தின் மேல்பார்வையின்றித் தாராளமாகப் பத்திரிகைகளைப் பிரசுரஞ் செய்யவேண்டுமென்றும், மாஜினி தீர்மானித்தான். இதாலியாவில் வர்த்தகப் பத்திரிகையொன்று பிரசுரிக்கப்பட்டு வந்தது. அப் பத்திரிகைக்கு முதன் முதல் மாஜினி விஷயதானஞ் செய்தான். வரவர, அப்பத்திரிகை மாஜினியின் விஷயதானத்தால் சிறப்படைந்தது. அன்னிய அரசாங்க உத்தியோகஸ்தர்களின் கண்ணோட்டமும் அப் பத்திரிகையின் மீது வீழ்ந்தது. அரசாங்கத்தார் அப் பத்திரிகையைப் பிரசுரிக்கவொட்டாமற்படி தடுத்தனர். அப்பத்திரிகை நின்றுவிட்டது. மீண்டும், மாஜினியின் சிநேகிதனான குர்ராஸி என்பவன் லக்ஹாரன் என்னுமிடத்தில் புதிய பத்திரிகை யொன்றை யாரம்பித்து,

மாஜினியை விஷயதானம் வழக்கம்போற் செய்யும்படி வேண்டினான். மாஜினியும் விஷயதானம் செய்து வந்தான். புதிய புதிய விஷயங்கள் அப்பத்திரிகையில் வெளிவரும். இதாலி ஜனங்களின் நிலைமையை அது மாற்றிவந்தது. அப்பத்திரிகை ஜனங்களுக்குப் புதிய உணர்ச்சியையும் தேசாபிமானத்தையும் தன் மதிப்பையுங் கொடுத்து வந்தது. அப்பத்திரிகை ஒருவருடகாலம் வெகு உற்சாகத்துடன் வந்ததும், இரண்டாம் வருட ஆரம்பத்தில் அரசாங்க உத்தியோகஸ்தர்களால் தடைபட்டுப் பிரசுரிப்பது நின்று விட்டது. பிறகு, ஐரோப்பாவிலுள்ள முக்கிய மாதாந்தர பத்திரிகைகளிலொன்றான அண்டலோஜியா என்னும் இலக்கிய பத்திரிகைக்கு மாஜினி விஷயதானஞ்செய்து வந்தான். மாஜினியின் வியாசங்கள் இங்கிலாந்து முதலிய தேசங்களிலும் கொண்டாடப்பட்டன. மாஜினி சட்டபரீட்சையில் தேறி ஜினோவாவில் வக்கீலானான். ஏழைகளின் வியாச்சியங்களை யெடுத்துக்கொண்டு வாதித்து அவர்களுக்குப் பரிகாரஞ் செய்துவந்தான். ஏழைகளிடத்தில் பணம் வாங்கமாட்டான். வக்கில் தொழிலில் இவன் அதிக கவனத்தைச் செலுத்தவில்லை. பணம் சம்பாதிப்பதும், தன் குடும்பத்தைக் காப்பாற்றுவதுமாகவே இவன் இருந்தால், வக்கீல் வேலையைக் கவனித்து வந்திருப்பார். நாட்டைப்பற்றியும் ஜனங்களின் வாழ்க்கையைப்பற்றியும் கவலையிருக்கு மொருவனுக்குப் பணம் சம்பாதிப்பதில் எங்ஙனம் மனஞ்செல்லும்? மாஜினி கர்போனரி சமாஜத்தில் சேர்ந்தான். கர்போனரி சமாஜத்தைச் சேர்ந்தவர்களில் அநேகர் கேவலமான நிலைமையி லிருந்ததையும், இராஜீய உணர்ச்சியில் நிலையான கொள்கையைப் பெரும

விருந்தனையும், ஒருவரோடொருவர் சிறிய சிறிய விஷயங்களுக்காகச் சண்டை செய்து வருவதையும் மாஜினி கண்டான். ஆனால், அவர்கள் தேசாபிமான மென்னும் உணர்ச்சி கொண்டு தைரியத்துடன் எத்தகைய கஷ்டங்களுக்கும் தயாராக நிற்பதையுங்கண்டு மாஜினி சந்தோஷித்தான். இதாலி தேசத்தில் நானு பக்கங்களிலுள்ள கர்போனரி சமாஜத்தை சீர்திருத்தி ஒரு ஐக்கிய கட்டுப்பாட்டுடன் வைக்க மாஜினி எற்பாடு செய்தான். ஆனால், மாஜினி கர்போனரி சமாஜத்தைச் சேர்ந்தானென்பதை யறிந்த அதிகாரிகள், உடனே, அவனைச் சிறைப்படுத்தினர். மாஜினி சிறை படுவதற்கு முன்னர் தினந்தோறும் இராக்காலங்களில் வெளிச் சென்று முன்னணி வேலையைப்பற்றிய எற்பாடுகளைச் செய்து வருவான். எற்கெனவே, மாஜினியின்மீது கண்ணோட்டஞ் செலுத்திவந்த அதிகாரிகள், கர்போனரி சமாஜத்தில் சேர்ந்தானென்றதும் உடனே அவனைக் கைதுசெய்தனர். ஸவோனு என்னுமிடத்திலுள்ள ஒரு பழைய கோட்டையில் இவன் சிறைபட்டிருந்தான். விசாரணை நடந்தது. மாஜினியின்மீது குற்றம் புலப்படவில்லை. ஆதாரங்களின்றி உத்தியோகஸ்தர்கள் சிறைபடுத்தினதினல், மாஜினி விடுதலையடைந்தான். ஆனால், அரசாங்கத்தார் மாஜினியை முன்மாதிரி தாராளமாக நடமாட யிடங்கொடுக்கவில்லை. ஒரு கிராமத்தைவிட்டு வெளிப் போகக்கூடாதென்றும் அல்லது இதாலிதேசத்தைவிட்டு அன்னிய தேசத்திற்குப் போவதா யிருந்தால் புறப்பட்டுப் போகலா மென்றும் உத்தியோகஸ்தர்கள் இவனுக்கு உத்திரவு செய்தனர். கிராமமொன்றில் கட்டுப்பட்டிருப்பதை சம்மதியாமல், உடனே வெளிதேசத்திற்குச் செல்ல

மாஜினி தயாரானன். கர்போனரி சமாஜத்திற்குப் பிரன்சு பிரஜைகள் பல நன்மைகளைச் செய்து வந்ததினுல் பாரிஸ் நகர் சென்று, அங்கிருந்து தன் ஜன்ம தேசத்திற் குதவிசெய்ய எண்ணங்கொண்டு பாரிஸ் நகர் செல்ல ஆயத்தமானுன். மாஜினியின் பிரிவு பலரை வருத்திற்று. இதாலிதேசத்து யுவர்களை நல்ல தேசாபிமானர்களாகச் செய்ய இரவும் பகலும் உழைத்துவந்த மாஜினியைவிட்டுப் பிரிய அவர்களுக்கு எங்ஙனம் மனம் வரும்? மாஜினி தன் நண்பர்களிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு பாரிஸ் நகருக்கு செல்லலுற்றுன். மாஜினியின் தாயும் தந்தையும் மகனுடைய பிரிவைச் சகியாமல் மனங் கசிந்தனர். என்றுலும் மாஜினியின் ஆழ்ந்த தேசாபிமானத்தையும் மேலான குணத்தையுங் கண்டு ஒருவாறு தேறி-திருப்தி யடைந்திருந்தனர். மாஜினி இதாலிதேசத்தை விட்டுப் போகையில் இதாலிதேசம் மிக்க கொடுங்கோன்மை கொண்டிருந்தது. ஜனங்களுக்கு சட்டங்களை யேற்படுத்துவதிலும், மாற்றுவதிலும், ரத்து செய்வதிலும் யாதொரு அதிகாரமுங் கிடையாது. சட்டங்களைத் தயார் செய்வது முதலிய யாவும் அன்னிய அரசாங்கத்தாருடையதே. இதாலி பிரஜைகளுக்கு வரிப் பணம் திரட்டுவதிலும், குறைப்பதிலும் அதிகாரமில்லை. சட்டசபை நிர்வாக உத்தியோகஸ்தர்களின் ஆதீனத்திலேயே யிருந்தது. நகரங்களில் பொதுச் சபை கூடுவதற்கும் மகாநாடு கூட்டுவதற்கும் ஜனங்களுக்குச் சுதந்தரங் கிடையாது. தாராளமாகப் பேசுஞ் சுதந்தரம், எழுதுஞ் சுதந்தரம் ஆகிய உரிமைகள் ஜனங்களுக்கு இல்லை. கல்வி யபிவிர்த்தியின்றி யிருந்தனர். ஆஸ்திரிய அரசாங்கத்

தாருக்கு ஊழியஞ் செய்வதற்காக மட்டும் சில கல்விச் சாலைகளை யமைத்துக் கல்வி புகட்டப்பட்டு வந்தது. தாராள கல்வியும், தொழிற் கல்வியும், சரித்திர சாஸ்திரக் கல்வியும் போதிக்கப்பட்டு வரவில்லை. அன்னிய அரசாங்கத்தைச் சேர்ந்த வீரர்களின் சரிதங்களையும், அரசியல் நூல்களையும் பற்றிப் போதிக்கப்பட்டு வந்தன. இராஜபக்தி இதாலிபிரஜைகளுக் குண்டாகும்படி பலமான முயற்சிகளும் செய்யப்பட்டு வந்தன. அன்னிய அரசாங்கத்தைப் பூஷித்து வருபவர்களுக்கே சகல உத்தியோகங்களும் பட்டங்களும் கொடுக்கப்பட்டன. அன்னிய அரசாங்கத்தின் அதிகாரமெல்லாம் போலீஸாரிடமே யிருந்தது. போலீஸ் உத்தியோகஸ்தர்கள் கூறினபடி அரசாங்கம் ஆடும். இதாலி தேசத்தில் பிரஜைகளின் உரிமையும் சுதந்தரமும் போலீஸார் ஆதீனத்திலிருந்துவந்தன. அரசியலில் தாராள நோக்கமும் தீவிர ஞானமுங் கொண்டவர்கள் அரசாங்க விரோதிகளெனக் கருதப்பட்டனர். போலீஸாருடைய உபத்திரவம் அவர்களுக்குச் சொல்லமுடியாது. அரசாங்கத்தைப் பற்றிக் குறைகூறுபவர்களைப் போலீஸார் சிறைபடுத்தியும் பலவிதமாகத் துன்பப்படுத்தியும் வந்தனர். வீதிகளிலும், வீடுகளிலும், மாதாக்கோயில்களிலும், கலாசாலைகளிலும், நாடகங்களிலும் போலீஸ் வேவுகாரர்கள் பிரசன்னமா யிருந்து வருவர். நான்கு மனிதர்கள் கூடிப் பேசு மிடங்களிலெல்லாம் ஒரு போலீஸ் வேவுகாரன் நண்பனைப் போல் நடித்து உளவு அறிந்து வருவான். இதாலி தேசத்தில் அன்னிய அரசாங்கத்தின் ஆட்சிமுறைமையால் ஜனங்கள் பட்ட தொல்லைக்கு எல்லையுமில்லை. கர்போனரி சங்கத்தார் அதிகாரிகளின் அட்டூழியங்

களைக் கண்டு சகியாமல் ஆங்காங்கு குழப்பம் செய்தனர். குழப்பம் ஒருமாத காலம் நடந்தது. பல ஊர்களில் அதிகாரிகள் ஊரைவிட்டு ஓடினர். என்றாலும், ஆஸ்திரிய படையொன்று கலகக்காரர்களைத் தாக்கிக் கலகத்தை யடக்கிற்று. அன்னிய அரசாங்கத்தை யொழிக்க இச்சிப்பவர்கள் இத்தகைய கலகங்களினால் வெற்றிபெற மாட்டார்களென்பதே பல இராஜீய வாதிகளின் துணிபு. கர்போனரி சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இதாலி தேசத்திலுள்ள எல்லா சமஸ்தானங்களையும் ஒன்று சேர்த்துப் பொதுவான சாம்ராஜ்யமொன்றை யேற்படுத்தி ரோமாபுரியைத் தலை நகராக்கிக்கொள்ள வேண்டுமென்பது அவர்களுடைய எண்ணம். அவ்வெண்ணத்தை நிறைவேற்றும் விஷயத்தில் கர்போனரி சங்கத்தார் ஜனங்களுடன் கலக்காமலும் அவர்களுடைய ஆதரவைப் பெறாமலுமிருந்தனர். தவிர கலகத்திற்குரிய காலத்தையும் சமய சந்தர்ப்பத்தையு மறியாமல் அவர்கள் அவசரப்பட்டு இருந்தனர் என்று மாஜினி கூறினான். கர்போனரி சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஜனங்களுக்கு உற்சாகத்தையூட்டிப் புதிய உணர்ச்சியைக் கொடுக்கும் சக்தியைப் பெறவில்லை. தவிர, நல்ல யுவர்களை அச்சங்கத்தார் ஆதரிக்காமல் தூரவைத்து வந்ததினாலும், சாமானிய ஜனங்களின் உற்சாகத்தைக் கிளப்பத் தவறினதினாலும், அரசியல் விஷயமாகப் பாரபுத்தியில்லாமையினாலும், நாட்டின் கால நிலையையும் இட நிலையையுமறியும் சக்தியைப் பெறாமலிருந்ததினாலும் ஆஸ்திரிய அரசாங்கத்தை யொழிக்கச் செய்த பிரயத்தனங்கள் யாவும் ஆற்றிற் கரைத்த புளிபோலாயின. யுவர்களின் உற்சாகத்தையும் யுவர்களின் சுறுசுறுப்பை

யும் அறியாமல் அன்னவர்களை விலக்கிவைப்பது தேசத்திற்குத் துர்ப்பாக்கியமென்றும், இதாலிதேசம் ஸ்வராஜ்யம் அடைவதற்கு யுவர்களே யேற்றவர்க ளென்றும், யுவர்களினாலேயே இதாலி தேசம் தானிழந்த சுதந்தரத்தையும் ஸ்வராஜ்யத்தையும் அடையக் கூடுமென்றும் ஜோஸப் மாஜினி தன் தேசத் தாருக்குப் பாரிஸ் நகரினின்றும் அறிவித்தான். கர் போனரி சங்கத்தால் இனி நாட்டுக்குப் பிரயோஜன மில்லை யென்று கண்டு, மாஜினி புதிய சங்கமொன்றை ஸ்தாபித்தான். புதிய இயக்கத்துக்குப் புதிய புதிய சபைகளே பலத்தைக் கொடுக்கு மென்பது மாஜினி யின் நோக்கம். அந்நோக்கத்தைக்கொண்டு ஒரு புதிய சபையைப் பாரிஸ் நகரில் ஸ்தாபித்தான். கடவுளுக் கும் பிரஜைகளுக்கும் ஊழியஞ் செய்வது அச்சபை யின் நோக்கம். மத உணர்ச்சியில்லாத வெறும் இரா ஜீய கிளர்ச்சி பயன்படாதென்றும், ஆழ்ந்த பக்தியும் நம்பிக்கையும் இயக்கத்திற்கு அத்யாவசியமென்றும் மாஜினி அடிக்கடி கூறி வந்தான். 'யௌவன இதாலி தியாகத்தையும் கடவுள் ஆக்ஞையையும் அறிய வேண்டுமென்றும் கடவுளுடைய ஆக்ஞையைச் செய் வதே நாட்டின் அபிவிர்த்திக்குக் காரணமென்றும், இதாலி தேசத்தார் கேவலம் மதப்போரிலும் மற்ற உபயோக மற்ற வியவகாரங்களிலும் கருத்தைச் செலுத்தாமல், சநாதனமான தர்மத்தில் கவனத்தைச் செலுத்த வேண்டும்' என்றும் மாஜினி தான் ஸ்தா பித்த சபையினர்களுக்குக் கூறிவருவான். இதாலி தேசத்தில் 1821-ம் ஆண்டிலும் 1831-ம் ஆண்டிலும் உண்டான கலகத்தை மாஜினி வெறுத்தான். 'கல கமே நாட்டை சீர்திருத்தா தென்றும், புரட்சியானது

சனங்களுக்காக சனங்களாலேயே யுண்டாகுமானல், அது நன்மையைச் செய்யுமென்றும், கலகம் விளைவதினல், ஒரு கொடுங்கோன்மைக்குப் பதிலாக மற்றொரு கொடுங் கோன்மையும், ஒரு அதிகாரத்துக்குப் பதிலாக மற்றொரு அதிகாரமுமே யுண்டாகும்' என்றும் மாஜினி பாரிஸ் நகர பத்திரிகைகளில் எழுதி வந்தான். இதாலி தேசத்து பிரஜைகளில் அநேகர் உடையின்றியும் உணவின்றியுமிருப்பதை யுணராமல் சிலர் தனச் செருக்கால் தங்களைப் போற்றிக்கொள்வதும், தாங்களே சகல போக போக்கியங்களை யனுபவித்து வருவதையுமறிந்த மாஜினி அடிக்கடி மனம் வருந்திவருவான். ஜீவகாருண்யமும், சகோதர வாஞ்சையும், வாழ்க்கையின் இலட்சியமும் இல்லாத இதாலியர்களின் வாழ்க்கையைப்பற்றி நினைத்து நினைத்து மாஜினி மனம் நொந்து போவான். ஏழை ஜனங்களுக்கும் அடிமைப்பட்டு வாழும் ஜனங்களுக்கும் கடவுளே ஆதரவு என்றும், இதாலி ஜனங்களும் கூடிய சீக்கிரத்தில் பழைய நாகரிகத்தையும் சுதந்தரத்தையும் அரசாட்சியையுமடைவார்களென்று மாஜினி கூறி மனந் தேறுவான். இதாலி மகா ஜனங்கள் தங்கள் வாழ்க்கையைப் பரிசுத்தத்துடனும், ஸ்வதர்மத்துடனும் நடத்திவரவேண்டுமென்றும் மாஜினி அடிக்கடி சொல்லிவந்தான். இதாலி மகா ஜனங்களின் சமுதாய வாழ்க்கையில் சீர்திருத்தம் மிகவும் ஆவசியமானதென்று முதன் முதல் உணர்ந்தவன் மாஜினி. இராஜீய வாழ்க்கையை நடத்துவதற்குப் பரிசுத்தமான கிரகவாழ்க்கை இன்றியமையாததென்று மாஜினி அக்காலத்திலேயே கூறிவந்தான். இதாலீதேசத்து இராஜீய வாழ்க்கையில் சம்பந்தப் பட்டவர்கள் ஒருவருக்கொருவர் மனஸ்

தாபங்கொண்டு சண்டையிடுவர். பகைமையும், பொறு மையும் அவர்களுக்குள்ளே குடிகொண் டிருந்தன. ஒவ்வொருவனும் தலைவனெனத் திரிந்துவந்தான். ஒருவன் போகும்வழி ஒருவன் போவதில்லை. பெரிய வர் சிறியவர் என்னும் மரியாதை போயிற்று. ஒவ் வொருவனும் தனக்குத்தானே உத்தம தேசாபிமானி யென்று ஆணவங்கொண்டிருந்தான். ஒருவரையொரு வர் தாக்குவதும் ஒருவரையொருவர் இகழ்வதுமாகவே அவர்கள் யிருந்து வந்தனர். அதைக்கண்ட மாஜினி 'ஒரு சபைக்கு ஐக்கியம் பலமேயன்றி அங்கத்தினர் களின் எண்ணிக்கைபலமல்ல' என்று மாஜினி தெரி வித்தான். மாஜினியின் கொள்கையைச் சில மிதவாதி கள் அங்கீகரிக்கவில்லை. 'நன்மை தீமைவிஷயத்திலும், சத்தியம் அசத்தியம் விஷயத்திலும், அபிவிர்த்தி பிற் போக்கு விஷயத்திலும் மிதவாதமென்பது கிடையாது' என்று மாஜினி கூறிவந்தான். 'பிரஜாதிபத்யமும் இதாலி தேச சமூதாய ஐக்கியமுமே' மாஜினியின் ஆழ்ந்த கொள்கை. பிரபுத்துவ ஆட்சிமுறையில் பிர ஜாதிபத்ய உணர்ச்சிக்குரிய சட்டதிட்டங்கள் ஏற்பட முடியாது. இதாலி பிரஜாதிபத்திய உணர்ச்சியே இயற்கையாகக் கொண்டதால் பிரபுத்துவ ஆட்சி முறைமையும், அன்னிய அரசாங்க முடியரசும் இயற் கைக்கு விரோதமாக நின்று இதாலி பிரஜைகளின் முற்போக்கையும் பிறப்புரிமையையும் அழிக்கின்றன' என்று மாஜினி பத்திரிகைக்கு எழுதுவான். ஆஸ் திரிய அரசாங்கம் இதாலிதேசத்து பிரஜாதிபத்ய உரிமையை எங்ஙனம் காப்பாற்ற முடியும்? கொடுங் கோன்மைக்கும் பிரஜாதிபத்யத்திற்கும் சம்பந்தம் எப் படி யுண்டாகும்? பிரஜாதிபத்ய ஸ்தானங்களின் பக்

கத்தில் கொடுங்கோன்மை ஸ்தாபனங்கள் எப்படி வளரமுடியும்? ஆகவேதான், பிரஜாநிபத்ய ஸ்தாபனங்களை வளரவிட சம்மதிக்காமல் அன்னிய அரசாங்கத்தார் தடுப்பது சகஜமேயாம். ஆஸ்திரிய அரசாங்கத்துடன் நேருக்கு நேராக நின்றுபோர் தொடுக்க இதாலியர்களுக்கு முடியாதென்றும், அன்னிய அரசாங்கத்தை யொழிக்க மறைவான யுத்தமே ஏற்றதென்றும் மாஜினி கூறுவான். மறைவான யுத்த மென்பது இராஜீய விஷயமாகப் போராடுவதில் ஒன்று. சேனைகளை அணிவகுத்து நின்று போராடுவதல்ல. மறைவிடங்களில் பதுங்கிப் பதுங்கிப் பகைவருடன் போராடுவதற்கே மறைவான யுத்தம் எனப்படும். இதற்கு ஆங்கிலத்தில் கொரிலா (Guerilla) யுத்தம் என்பார். அடிமைப் பட்டிருக்கும் நாட்டார் தங்கள் விடுதலைக்காக அன்னிய அரசாங்கத்தின் மீது மறைவான யுத்தஞ் செய்வது தர்மமென்று மேனாட்டு இராஜீய வாதிகளும அரசியல் ஞானிகளும் அங்கீகரித்திருக்கின்றனர். இதாலிதேசத்தில் கர்போனரி சமாஜத்தைப்போல மாஜினியின் 'யௌவன இதாலி' சமாஜமும் பிரபலமாயிற்று. பாரிஸ் நகரில் முதன் முதல் சமாஜம் ஸ்தாபிக்கபபட்டதும் இதாலி தேசத்திலும் மாஜினிக்கு வேண்டுவோர் ஆங்காங்கு சமாஜம் ஸ்தாபித்தனர். கர்போனரி சமாஜத்தின்மீது போலீஸார் கண்ணோட்டஞ் செலுத்தினதுபோல, யௌவன இதாலி சமாஜத்தின் மீதும் போலீஸார் கண்ணோட்டஞ் செலுத்தி வந்தனர். பாரிஸ்மாநகரில் மாஜினியுடன் வேறு சிலரும சேர்ந்து ஒரு சிறிய அறையில் தனித்து வாழ்ந்து வந்தனர். மாஜனியும் அவன் நண்பர்களும் இதாலிதேசததில் ஸ்வராஜ்ய ஸ்தாபனஞ்

செய்ய பாரிஸ்நகரில் வேலைபுரிந்து வந்தனர். ஒரு சிறிய அச்சுக்கூடமொன்றை ஏற்படுத்தி லாஸிஸிலியா என்பவன் அச்சுக் கோர்ப்பவனாகவும், லம்பர்ட்டி பிழை திருத்துபவனாகவும், மற்றொருவன் சேவகனாகவும் மாஜினி எழுதுபவனாகவும் முறையே அவர்கள் இருந்து வந்தனர். அந்நாலைந்து நண்பர்கள் ஒருமைப்பட்டுத் தாய் நாட்டுக்காக சகல தாழ்மையான தொழில்களையுஞ் செய்து வந்தனர். அவர்களுடைய தேசாபிமானத்தையும் சுறு சுறுப்பையுங் கண்டு பல பாரிஸ் நகரத்தார்களும் வேறு பலரும் ஆச்சரியப்பட்டனர். இரண்டு வருடகாலம் பாரிஸ் நகரில் அவர்கள் வெகு நிதானமாகவும் சுறுசுறுப்பாகவும் வேலை செய்து வந்தனர். அன்னிய அரசாங்கத்தின் கீழ் சுதந்த்ர மிழந்து வாழும் பிரஜைகள் எந்தெந்த வழியாக நாட்டின் க்ஷேமத்திற்கு உழைக்கமுடியுமோ அந்தந்த வழிகளிலெல்லாம் உழைக்க முன் வரவேண்டுமென்றும், நாட்டிலுள்ள பாலர்களையும் பாலிகைகளையும், தொழிலாளர்களையும், வியாபாரிகளையும், நகரவாசிகளையும், குக்கிராம வாசிகளையும் அவரவர்களுக்குத் தக்கபடி இராஜீய உணர்ச்சியை யூட்டி வரவேண்டுமென்றும், தேசாபிமானம் உண்டாவதற்குரிய படங்கள், துண்டு பத்திரிகைகள், சிறுபுததகங்கள் ஆகிய இவைகளையும் கிராமங்கள் தோறும் நகரங்கள் தோறும் இடைவிடாமல் வழங்கிவரவேண்டுமென்றும் இதாலி தேசத்தின் தேச சிறப்பையும் தொன்மை வாய்ந்த சரித்திரத்தையும், நாகரிகப் பான்மையையும், பழைய காலத்து உன்னத பதவியையும் பற்றி ஜனங்களுக்கு எடுத்துக் கூறவேண்டுமென்றும் மாஜினி தெரிவித்து வந்தான். இதாலி தேசத்தைப் பரிபாலித்து வந்த

ஆஸ்திரிய அன்னிய அரசாங்கத்தை யொழித்து ஸ்வராஜ்யத்தை ஸ்தாபிக்க மாஜினியும் அவனுடைய நாலைந்து மித்திரர்களும் பாரிஸ் நகரினின்று வேலை செய்து வந்தது சாலவும் மெச்சத்தக்கது. மாஜினியின் ‘யௌவன இதாலி’ சங்கம் இதாலி தேசத்தில் எங்கும் பாவிற்று. ஜினோவாவில் பல பாலர்களும் மத்திய வகுப்பைச் சேர்ந்தவர்களும் அச்சங்கத்திற்கு வந்து சேர்ந்தனர். சற்றேறக்குறைய ஐம்பது அறுபதினாயிரம் பேர்கள் அங்கத்தினர்களானார்கள். அக்காலத்தில் ஒரு யௌவன மானுமியும் வந்து சேர்ந்தான். அவன் பெயர் கரிபால்டி இவனும் மாஜினியுமே இதாலி தேசத்து இரட்சகர்கள். இதாலி தேசத்தில் மாஜினியின் சங்கம் பலப்படவே, பைத்மாண்ட் சமஸ்தானத்தைப் பரிபாலித்து வந்த சார்லஸ் ஆல்பர்ட்டுக்கு மாஜினி கடிதமொன்று எழுதி, அன்னியப்பிரபுத்துவத்தை யொழிக்கும்படி தூண்டினான். சார்லஸ் ஆல்பர்ட் தீவிர கட்சியினர்களின் சக்தியையும் பலத்தையு மறியாமல் சும்மா இருந்தான். ஆனால், ஜினோவாவில் பல பாலர்கள் சேர்ந்து மீண்டும் இராஜீய புரட்சி யொன்றை யுண்டாக்க முயற்சி செய்து வந்தனர். அவசரப்பட்டு அவர்கள் செய்து வந்த காரியம் அன்னிய அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குத் தெரிந்து கலகஞ்செய்ய விருந்தவர்களை அவர்கள் சிறைப்படுத்தினர். ஜகோபோ ரப்பினி சிறைபட்டான். கலக விஷயமாகப் பல விஷயங்கள் விசாரணையில் சொல்ல வேண்டிவருமென்று யோசித்து இரகஸியம் வெளிவராதபடி காக்கச் சிறையில் தற்கொலை புரிந்து ஆவி துறந்தான். மாஜினியின் மானத்தையும் மற்ற பல தேசாபிமானர்களின் இரகஸியத்தையும் காக்கப்

பிராணத்தியாகஞ் செய்த ரப்பினியை எத்தேசத்தாரும் புகழ்வார்களென்பதற்கு ஐயமேயில்லை. ஆஸ்திரிய அரசாங்கத்தின் தூண்டுதலினல், பிரன்சு அரசாங்கத்தார் மாஜினியின் அச்சுக்கூடத்தை உடைத்தனர். மாஜினியையும் பாரிஸ் நகரத்தைவிட்டு வேறு தேசம் போகும்படி பிரன்சு அரசாங்கத்தார் உத்திரவு செய்தனர். என்ருலும் மாஜினி பிரான்சு தேசத்தை விட்டுப்போகாமல் வெகு இரகஸியமாக மறைந்து வாழ்ந்து வந்தான். லூயி நேபோலியனுக்கு மந்திரியாயிருந்த டமஸ்தானே ஒலிவியர் என்பவருடைய வீட்டில் ஒருவருமறியாதபடி வசித்து வந்தான். வெளியே செல்ல ஆவசியமான காலத்தில் மாஜினி பெண்வேடந் தரித்து இரவில் போய் வருவான். கடைசியாக, மாஜினி கொலை செய்பவர்களுக்கு உடந்தையாயிருக்கிருனென்ற ஓர் அபாண்டமான குற்றத்தை பிரான்சு அரசாங்கத்தார் சுமற்றவே, மாஜினி, பிரான்சு எல்லையைவிட்டு ஸ்விட்ஜர்லாந்திலுள்ள ஜினீவா என்னும் நகருக்குச் சென்ருன். ஒவ்வொரு தேசங்களினின்றும் இராஜ நிந்தனைக்காகவோ அரசாங்கப் புரட்சிக்காகவோ தூரத்தப்பட்டவர்களெல்லாம் ஸ்விட்சர்லாந்து தேசத்தில் அடைக்கலம் புகுந்தனர். ஜினீவா நகரம் அவர்களுக்குப் பெரிய அடைக்கல ஸ்தானமாக இருந்தது. போலாந்து, ஜர்மெனி, பிரான்சு, இங்கிலாந்து, இதாலி முதலிய பல தேசத்து தீவிர கட்சியினர் மாஜினிக்கு அறிமுகமாயினர். அவர்களுடைய உதவியைக்கொண்டு மீண்டும் ஒரு முறை இதாலி தேசத்தில் ஒரு இராஜீய புரட்சியையுண்டாக்கி ஆஸ்திரிய படையைத்தாக்க மாஜினி யோசித்தான். சுமார் எண்ணூறு பேர்கள் ஆயுதபாணியாக நின்றனர்.

அச்சிறு படையை நடத்திக்கொண்டுபோக நாயகர்கள் சரியாக இல்லை. ஜனரல் ரமாரினோ என்பவனைக் கடைசியாக நியமித்தனர். அவன் நெபோலியன் காலத்தில் யுத்தத்தில் தேர்ந்தவன். நல்லயுத்த சாகஸமறிந்தவன். ரமாரினோ அச்சிறு படைக்கு நாயகனாக விருந்து ஆஸ்திரிய அரசாங்கத்தை யொழிக்கப் பாடுபடப்போகிறான் என்ற செய்தியைக் கேள்வியுற்ற பிரன்சு அரசாங்கத்தார் ரமாரினோவுக்குப் பண உதவி செய்து இரகஸியமாக அச்சிறு படையைத் தாறுமாறாக்கும்படி செய்தனர். அப்படியே ரமாரினோ அச்சிறு படையை அநியாயமாக வருத்தியழித்தான். அவன் செய்த துரோகத்தால் அத்தேசாபிமானப் படை சிதறிக் கடைசியாக மாஜினியின் எண்ணம் ஈடேறாமற் போயிற்று. ஸ்விட்சர்லாந்து அரசாங்கத்தாரும் அடைக்கலம் புகுந்த தேசாபிமானர்களை வருத்த முயன்றனர். ஆஸ்திரியா, பிரான்சு முதலிய அரசாங்கத்தார் ஸ்விட்சர்லாந்து அரசாங்கத்தின் மீது கோபங்கொண்டனர். கலகக்காரர்களுக்கு இடங்கொடுத்து அரசாங்கங்களின் மீது படையெழுச்சி செய்ய உதவி செய்து வருகின்றதென அவ்வன்னிய அரசாங்கத்தார் ஸ்விட்ஸர்லாந்து அரசாங்கத்தைக் குறை கூறினர். தேசங்களின் உடன்படிக்கைக்கு ஸ்விட்ஸர்லாந்து விரோதமாகச் செய்ய இஷ்டப்படவில்லை. தவிர சுற்றுபக்கங்களிலுள்ள அரசாங்கத்தை விரோதித்துக் கொள்ளவும் அதற்கு இஷ்டமில்லை. அடைக்கலம் புகுந்தவர்களை அப்புறப்படுத்தப் பல ஏற்பாடுகள் ஸ்விட்ஸர்லாந்தில் செய்யப்பட்டன. மாஜினியோ கிராமம் கிராமமாக நடந்து காலத்தைக்கழித்து வந்தான். போலீஸாருடைய துன்பத்திற்கும் பாத்

திரமாகிப் பலநாள் சரியான உணவின்றியும் உறக்க மின்றியும் ஏக்கங்கொண்டு வருந்துவான். சரியான படுக்கையில்லாமல் குளிரிலும் பனியிலும் புறந்திண்ணையிலும் மாஜினி உட்கார்ந்தபடியே இரவு நேரங்களைப் போக்குவான். பிராடஸ்டண்ட் பாதிரிமார் ஒருவருடைய வீட்டில் வசித்து பத்துமாத காலம் தன் அறையைவிட்டு வெளிவராமலே யிருந்தான். மாஜினிக்கு வரவர தேகம் இளைத்தது. பல்நோய் உண்டாயிற்று. மனோ வியாதியால் வருந்தின மாஜினிக்குப் பல் நோய் சற்றே சாந்தியாகவேயிருந்தது. ஸ்விட்ஸர்லாந்து எல்லைப்புறத்திலுள்ள ஆல்ப்ஸ் பர்வதத்தைக் கண்டு ஆநந்தங் கொள்வான். ஆல்ப்ஸ் பர்வதத்தின் உன்னத சிகரத்தையும் உயர்ந்த வனப்பையுங் கண்டு இதாலியை நினைத்து நினைத்துக் கண்ணீர் வடிப்பான். கை வறண்டது. பணம் இல்லாமற் கஷ்டப்பட்டான். தாயார் மாஜினிக்குப் பண உதவி செய்துவந்தும் இவனுக்குப் போதவில்லை. அடைக்கலம் புகுந்தவர்களுக்குத் தன் கஷ்டத்தையும் பாராமல் உதவி செய்வான். பிறருடைய கஷ்டத்தைச் சகியாமல் சதா உதவிபுரிவதில் இவன் விருப்பமுள்ளவன். ஸ்விட்ஸர்லாந்திலும் இராஜீய விஷயமாகப் பல கட்சிகளிருந்தன. தொழிலாளர்களுடைய சுதந்தரமும் குடியானவர்களுடைய சுதந்தரமும் பறிக்கப்பட்டு வந்தன. மாஜினி அந்நாட்டு இராஜீய விஷயங்களில் தலையிட்டு வந்தான். சிலர் அன்னியன் ஒருவன் ஸ்விட்ஸர்லாந்து இராஜீய விஷயத்தில் தலையிட்டுக் கொள்ளவேண்டியதேன் என்றும் கூறினர். மாஜினியோ அவ்வார்த்தைகளை லட்சியஞ் செய்யாமல், ஸ்விட்ஸர்லாந்து தேசத்தின் நன்மைக்காக 'யௌவன ஸ்விட்ஸர்லாந்து' என்னும் ஒரு

சங்கத்தை ஸ்தாபித்தான். சில ஸ்விஸ் நண்பர்களின் உதவியால் பத்திரிகை யொன்றையும் இவன் ஏற் படுத்தினன். பத்திரிகையின் பிரசாரத்தால் ஸ்விஸ் சனங்கள் நன்மையையடைந்து வருவதைப் பொருத அரசாங்கத்தார் பத்திரிகையையும் அச்சுக்கூடத்தை யும் பறி முதல் செய்தனர். நிற்க, மாஜினி லம்பார்ட் குலத்தைச் சேர்ந்த ஸித்தோலி என்பவனுடைய புத் திரியை மணந்துகொண்டான். அவள் பெயர் கியூதித்தா ஸித்தோலி. அவள் மாஜினிக்கு ஒருவயது மூத்த வள். சின்னஞ் சிறு வயதில் கணவனை யிழந்த கைம் பெண். நல்ல அழகும் குணமும் பொருந்தியவள். ஆழ்ந்த தேசாபிமானமும் பிரஜாதிபத்ய உணர்ச்சியுங் கொண்டவள். அவள் மாஜினிக்குச் சிலகாலம் மிக்க உதவியாயிருந்தாள். ஸ்விட்ஸர்லாந்தில் மாஜினியை மணந்துகொள்ள மற்றொருத்தியும் இருந்தாள். அவ ளும் நல்ல யௌவனமும் ரூபமுங் கொண்டவள். மாஜினி ஏகபத்னி விரதமுள்ளவனுதலால் அக்கன்னி கையை மணக்க இஷ்டப்படவில்லை. அக்கன்னிகை மாஜினியையே நினைத்து நினைத்து மனமுருகி மாண்டாள். அக்கன்னிகையை மணமுடிக்க மாஜினி யைப்பலர் வற்புறுத்தியும் மாஜினி அவர்களுடைய வார்த்தைகளுக்கு இணங்காமலிருந்தான். இவன் தன் குடும்பத்தைப்பற்றிச் சிறிதும் கவலை கொள்வதில்லை. சதா தேசத்தைப்பற்றியே நினைத்து வந்தான். ஸ்விட் ஸர்லாந்தைவிட்டு இங்கிலாந்து தேசத்துக்குப் புறப் படுகையில் தன் மனைவியைத் தனியே விட்டு விட்டுச் சென்றான். மாஜினியும் ரப்பினி சகோதரர்களும் கடைசியாக லண்டன் மாநகருக்கு 1837-ம் வருடம் வந்து சேர்ந்தனர். ஆல்ப்ஸ் பர்வதத்தின் செங்குத்

தான பாறைகளையும் சிகரங்களையும், பல அழகிய ஏரி களையும் கண்ட இவர்களுக்கு லண்டன் நகரத்து கட்ட டங்களும் புகைப்படலங்களையுங் காணப்பிடிக்கவில்லை. லண்டன் மாநகரம் இவர்களை உற்சாகப்படுத்தவில்லை. என்றாலும், ஒரு சிறிய அறையில் மாஜினியும் பாலிய மித்திரர்களான ரப்பினி சகோதரர்களும் வசித்து வந்த னர். ரப்பினியின் தாயார் நல்ல உத்தமி. மாஜினியின் மேலான குணத்தில் விருப்பமுள்ளவள். இவனைத் தன் மக்களினுஞ் சிறந்தவனென்று அவள் கருதிவந்தாள். மாஜினி பாரிஸ்நகரிலும் ஸ்விட்ஸர்லாந்திலும் கஷ்டப் பட்டு வந்தகாலத்தில் இவனுக்குப் பலவித நன்மை களைச் செய்துவந்தாள். இதாலிபெற்ற வீரத்தாய் மார்களில் அவள் ஒருத்தி. மாஜினி லண்டனில் டாடன்ஹாம் வீதியில் வசித்துவந்தான். அகஸ்தினோ ரப்பினி அடிக்கடி மாஜினியுடன் சண்டைசெய்வான். மாஜினி எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு புன் னகைவதனத்துடன் இருப்பான். ரப்பினிஸ்வபாவத் தில் சற்றே முரட்டு குணத்தைக் கொண்டவன். அவன் செய்யும் பிழைகளையெல்லாம் மாஜினி பொறுத்துக் கொள்வான். கியோவன்னியோ நல்ல புத்திசாலி. மாஜினியின் குணத்தை நன்கு அறிந்தவன். மாஜினி யும் அவன் சிநேகிதர்களும் தினம் சோறும் உருளைக் கிழங்குமே புசித்து வந்தனர். டாம்பீக வாழ்க்கையை யறியாதவர்களாதலால் உடைகளிலும் உணவுகளிலும் வெகு சிக்கனமாகவேயிருந்து லண்டனில் வாழ்ந்து வந்தனர். மாஜினி சற்றே நல்லவழியாக வாழ்வதற்கு இதாலிதேசத்திலிருந்து தகப்பனார் லண்டன் நகரில் ஆலிவ் எண்ணெய் வியாபாரஞ்செய்யும்படி உதவி செய்து வந்தார். மாஜினியோ வியாபாரத்தில் மன்

தைச் செலுத்தாமலிருந்தான். தகப்பனருக்குக்கோப முண்டாகி மாஜினிக்குப் பணம் அனுப்புவதை நிறுத் தினர். தாயோ மகனுக்கு அடிக்கடி உடைகளைத் தைத்து அனுப்புவாள். மாஜினி பணமில்லாமையைக் கண்டு தாயார் கொடுத்த மோதிரம், கை கடியாரம், சட்டை முதலியவைகளை விற்று காலட்சேபஞ் செய்து வந்தான். தன்னிடத்துள்ள உடைகளை விற்றுத் தன் நண்பர்களையும் காப்பாற்றிவந்தான். மேல்சட்டை யில் லாததினல் இவன் வெளிப்புரப்படமாட்டான். கடைசி யாக இவன் சில பத்திரிகைகளுக்கு வியாசம் எழுதி அதினல் வரும் ஊதியத்தைக் கொண்டு மானஜீவனஞ் செய்துவந்தான். லண்டன் நகரிலுள்ள கண்காட்சி சாலைக்கும் இலவச புத்தகசாலைக்கும் அடிக்கடி இவன் போவான். லண்டனில் இவர்கள் ஒற்றுமையுடன் சில மாதகாலம் வசித்துவந்ததும் ரப்பினி சகோதரர் கள் மாஜினியை விட்டுப் பிரிந்தனர். அவர்களுடைய பிரிவு மாஜினியை வருத்திற்று. மாஜினி தன் எண் ணத்தையே பலமாகக்கொண்டு, வரும் கஷ்டங்களையும் துன்பங்களையுஞ் சகித்து வந்தான். வரவர மாஜி னிக்கு லண்டனில் மித்திரர்கள் ஏற்பட்டார்கள். எடின் பர்க் நகரைச் சேர்ந்த ஆர்ச்பால்ட் பிளட்சரின் மனைவி யார் முதன் முதல் மாஜினிக்கு சிநேகிதமானள். பிறகு கார்லயல் குடும்பத்தார் மாஜினிக்கு சிநேகி தர்களானர்கள். கார்லயல்சிறந்த கிரந்தகர்த்தா. அவ ருடைய வம்சம் நல்ல மேதாவிகளைப்பெற்றது. மாஜினி கார்லயலிடம் மிக்க அன்பும் பக்தியும் கொண்டவன். கார்லயல் மனைவியார் மாஜினியின் தேசாபிமானத் தைப் புகழ்வாள். கார்லயல் மாஜினியின் இராஜீய கொள்கையை யங்கீகரிக்கவில்லையாயினும் மாஜினியின்

தேசாபிமானத்தையும் அறிவையும், உயர்குணத்தை யுங்கண்டு ஆச்சரியப்படுவார். மாஜினிக்கு நெருங் கின ஆங்கில நண்பன் ஆஷ்ஹர்ஸ்ட் என்னும் வக்கீல். அவன் ராபர்ட் ஓவனுடைய மித்திரன். மாஜினி யும் ராபர்ட் ஓவனுடைய சிநேகத்தையுஞ் சம்பாதித் தான்: அவர்கள் மூலமாக பல ஆங்கில நண்பர்கள் மாஜி னுக்கு அறிமுகமானார்கள். லண்டனில் இதாலிதேசத்த வர்களிற் சிலர் வசித்து வந்தனர். கப்ரீல்ரோஸட்டி யும் அண்டோனியோ பனிஸீயும் முக்கியமான வர்கள். ரோஸட்டியை சிறுவயதிலிருந்தே மாஜினி அறிந்தவனாதலால், தன்னுடன் வேலைசெய்ய மாஜினி கேட்டுக்கொண்டும் அவன் சம்மதிக்கவில்லை. மாஜினியி னுடைய காரியத்தில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. இராஜ்ய கொள்கையில் அவர்கள் மாஜினியுடன் சேர வில்லை. மாஜினி லண்டன்மாநகரிலிருந்து இதாலி மகாசனங்களுக்கு அன்னிய அரசாங்கத்தின் தீமையை யும் அவ்வரசாங்கத்தினால் சனங்கள்படும் அவஸ் தையையும் அவைகளுக்குப் பரிகாரமான வழி களைப் பற்றியும் பல துண்டு பிரசுரங்கள் அச்சிட்டு இரகஸியமாக அனுப்பிவந்தான். லண்டன் நகரி லுள்ள பத்திரிகைகளுக்கும் மாதாந்தர பிரதிகளுக்கும் பைரன்கவி, விக்டர்ஹியூகோ, பிரான்சுதேச இலக்கி யம், இதாலி சரித்திரம், கலைஞானம் முதலிய பல விஷயங்களைப்பற்றி இவன் வியாசம் எழுதிவந்தான். உண்மையை யுள்ளபடி இவன் எழுதும் வியாசங்களிற் சிலவற்றை அப்பத்திரிகைகளின் ஆசிரியர்கள் பிரசுரிக்க மாட்டார்கள். ஐரோப்பாவில் பிரஜாதிபத்ய தத்துவங் கள் என்னும் விஷயமாக இவன் எழுதின வியாசங்கள் இங்கிலாந்திலுள்ள பல இராஜீய வாதிகளுடைய மன

தைக் கவர்ந்தன. இதாலி தத்துவஞானியான டாண்டியைப்பற்றி பஸ்காலோ என்பவர் எழுதின கையெழுத்துப் பிரதிகள் சில லண்டனில் ஒரு கடைக்காரனிடத்தில் இருந்தன. மாஜினி அப்பிரதியைக் கேட்கவே, அவன் அதற்கு 420 பவுன் வேண்டினான். மாஜினியிடத்தில் பணமில்லை. கடைசியாக டங்கன் சமஸ்தானத்தைச் சேர்ந்த மாது ஒருத்தி கொடுத்த பணத்தைக் கொண்டு அக்கையெழுத்துப் பிரதிகளை வாங்கி மாஜினி ஜீர்ணமா யிருந்த விடங்களிலும் பூர்ணமாக எழுதாத யிடங்களிலும் அதைப் பூர்த்திசெய்து அச்சிட்டான். டாண்டியின் தத்துவஞானம் பிறகு உயர்ந்த ரத்தினம்போல் பிரகாசிக்க வாரம்பித்தது. மாஜினி, தவிர, பல சிறு புததகங்களையும் எழுதி அச்சிட்டான். இவ்வழியாக இவன் இங்கிலாந்திலுள்ள பல மேதாவிகளுடன் அறிமுகமாகி இதாலி விஷயமாக அவர்கள் அக்கரை யெடுத்துக்கொள்ளும்படி செய்தான். லண்டன் நகரில் பல இதாலிதேசத்துத் தொழிலாளர்களும், வியாபாரிகளு மிருந்தனர். அவர்களுக்கு இதாலி தேசத்து நிலைமையையும் பிரஜாதிபத்ய உணர்ச்சியையும், யௌவன இதாலி சங்கத்தின் கொள்கையையும் பற்றி அடிக்கடி இவன் பிரசங்கங்கள் மூலமாகவும், துண்டு பத்திரிகைகள் மூலமாகவும் போதித்து வந்தான். இதாலிய தொழிலாளர்களுடைய பரிதாபமான நிலைமையைக் கண்டு மனம் வருந்தி, அவர்களுக்குப் பல உதவி புரிந்து வந்தான். அவர்களுக்கு இராப் பள்ளிக்கூட மொன்றை ஸ்தாபித்து கல்வி கற்பித்து வந்தான். தொழிலாளர்களுடைய பிள்ளைகளுக்கு பள்ளிக்கூட மொன்றை யேற்படுத்தி தினம் கல்வி கற்பித்து வந்தான். இதாலி தொழிலாளர்களை வருத்

தும் ஆங்கில முதலாளிகளைப் பார்த்து வருந்தாம லிருக்கும்படி இவன் பேசிவருவான். அவர்களுடைய கஷ்டங்களைக் கவனித்துப் பரிகாரஞ் செய்துவந்ததால் அவர்கள் மாஜினியைத் தந்தையெனப் பாராட்டி வந்தனர். தொழிலாளர்களுக்கு இராஜீய விஷயமாக ஞானமுண்டாவதற்காக ஒரு பத்திரிகையையும் ஸ்தா பித்தான். இதாலிதேச சரித்திரத்தைப்பற்றி அத் தொழிலாளர்களுக்குக் கூறிவந்தான். அன்னிய அர சாங்கத்தின் ஆட்சிமுறைமையால் தொழிலாளர்களே பெரும்பாலும் கஷ்டப் படுபவர்களென்றும், அவர்க ளுடைய கல்வி, சுகாதாரம், ஜீவனம் முதலியவைகள் யாவும் நிராகரிக்கப்படுவதென்றும் மாஜினி அத்தொழி லாளர்களுக்குக் கூறிவருவான். இவன் லண்டனில் வசித்து வந்த தொழிலாளர்களுக்கு கடமையையும் சமத்துவ உணர்ச்சியையும் குடியரசு ஆதிக்கத்தின் ஸ்வரூபத்தையும் பற்றி கூறி அவர்களைச் சிறந்த தேசபக்தர்க ளாக்கினன். இதாலிதேச விடுதலைக்கு அவர்களும் உதவி புரிந்தனர். இங்கிலாந்தில் மாஜினி தன் தேசத்தவர்களுக்குப் பலவித உதவி புரிந்து வருகையில், இதாலிதேசத்தில் அன்னிய ஆட்சியின் துன்பத்தைப் பொருத பலர் மீண்டும் கலகம் விளைத் தனர். கல்லூரியில் கல்வி கற்று வந்த மாணவர்கள் மாஜினி அனுப்பிவந்த துண்டுப்பிரசுரங்களைப் படித்துத் தேசாபிமான உணர்ச்சிகொண்டு நாட்டின் விடுதலைக் காக அவர்களும் கலகத்தில் சேர்ந்தனர். ஆஸ்திரிய அரசாங்கம் தேசத்தினின்றும் போகவேண்டு மென் றும் நல்லரசாங்க மொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டு மென்றும் மாணவர்களும் மற்ற ஜனங்களும் கூறி வந்தனர். போலீஸார் வெகு சாக்கிரதையுடன்

பார்வையிட்டுவந்தும் அவர்க ளறியா வண்ணம் பல பத்திரிகைகள், புத்தகங்கள், துண்டு பிரசுரங்கள் இதாலிதேசத்திற்குட் வந்தன. மாணவர்களும் சாமானிய சனங்களும் சுதந்தரப் போர் தொடுக்கப் பலமான காரியங்களைச் செய்துவருகையில் சில மிதவாதிகள் அவர்களுடைய உற்சாகத்தை மட்டுப் படுத்தி சனங்களை வேறு வழியில் திருப்ப முயன்றனர். இதாலியின் பூர்ண சுதந்தரத்திலும் பிரஜாதிபத்ய உணர்ச்சியிலும் அம்மிதவாதிகளுக்கு நம்பிக்கையில்லை. சார்லஸ் ஆல்பர்ட் மூலமாக இதாலி தேசத்துக்கு நன்மையுண்டாகு மென்றும், கொஞ்சங் கொஞ்சமாக அன்னிய அரசாங்கத்தினின்றும் சீர்திருத்தங்களைப் பெற்றுக்கொண்டு முற்போக்கடைய வேண்டுமென்றும், பூர்ண சுதந்தரத்துக்கு இதாலி இன்னும் யோக்கியதையடையவில்லை யென்றும் அம் மிதவாதிகள் கூறிவந்தனர். மாஜினியின் கொள்கைக்கும் அனுஷ்டான வழிக்கும் அவர்களுடைய கொள்கைக்கும் அனுஷ்டான வழிக்கும் வெகுதூரம். மிதவாதிகளுக்குத் தியாகபுத்தி பலமாக உண்டாவதில்லை. 'கஷ்டப்படவுங் கூடாது சுகமும் அனுபவிக்க வேண்டும்' என்னும் நோக்கத்தை மிதவாதிகள் கொண்டவர்கள். மிதவாதிகள் தங்கள் சொத்தையாகிலும் சுகத்தையாசிலும் தேகத்தையாகிலும் தேசத்திற்காக விட எப்பொழுதும் தயாராக முன் வருவதில்லை. அதிகாரிகளுடன் கலந்துகொண்டு கொஞ்சங் கொஞ்சமாக அவர்களுடைய தயவை சம்பாதித்துப் பிறகு நாட்டின் விஷயமாக ஒழிந்த நேரங்களில் பாடுபடுவதென்னும் தன்மையையே மிதவாதிகள் பெற்று வந்ததினால், இதாலி ஜனங்களும் மாணவர்களும் அவர்களுடைய

கொள்கையையேனும் வார்த்தையையேனும் அங்கீ கரிக்கவில்லை. ஏனெனில், அம்மிதவாதிகளுக்குத் தங்க ளிடத்திலாகிலும், பிறர்களிடத்திலாகிலும், தேசத்தி னிடத்திலாகிலும் பக்தியும் நம்பிக்கையுங் கிடையாது. கடைசியாக, இதலி தேசத்தின் வடபுறத்திலும் தென் புறத்திலும் கலகமுண்டாயிற்று. அக்கலகத்தில் பல தொழிலாளர்கள், சாமானிய ஜனங்கள், மாணவர்கள் ஆகிய இவர்கள் ஒன்று சேர்ந்தனர். ஆஸ்திரிய கப் பற்படையில் உத்தியோகம் புரிந்து வந்த இரண்டு வெனிஸ் உயர்குலத்தவர்கள் அப்படையை விட்டு விட்டு கலகக்காரர்களுடன் சேர்ந்து கலகஞ் செய்த னர். அவ்விருவர்களே காலகக்காரர்களுக்குக் கடைசி யாக நாயகர்களாக யிருந்து வந்தனர். மாஜினிக்கும் அவர்களுக்கும் நடந்துவந்த போக்கு வரவு கடிதங்களை இரகஸியமாக ஆங்கில அரசாங்கத்தார் பிரித்துப் பார்த்து நேபல்ஸ் சமஸ்தானத்திற்கு எச்சரிக்கை செய் தனர். ஆங்கிலேய அரசாங்கத்தார் மாஜினியின் கடி தத்தை வெகு நாளாகப் பிரித்துப் பார்த்துப் பிறகு முத் திரையிட்டு அவனுக்கு அனுப்புவது வழக்கம். அதை வெகு நாள்வரை மாஜினி அறியவில்லை. திடீரென்று ஒருநாள், மாஜினி தன் கடிதத்தின் அரக்கு முத்திரை நீக்கப்பட்டிருந்ததையும், அதோடு புதிய முத்திரை யொன்று போடப்பட்டிருந்ததையுங் கண்டு, சந்தேகங் கொண்டான். அதை பின்ஸ்பரி ஜில்லாவின் பார்லி மெண்ட் பிரதிநிதியான தாமஸ்டன் கோம்பி என்பவ ரிடம் ஆங்கில அரசாங்கத்தின் யோக்கியதையைப் பற்றி மாஜினி குறை கூறினான். தாமஸ்டன் கோம்பி பார்லிமெண்ட் சபையில் அனைவரும் அறியும்படி கூறி னார். மனிதனுடைய இரகஸியத்தைப் பகிரங்கப்படுத்

தும் இழிவான நடத்தையைப்பற்றி பல மெம்பர்கள் அரசாங்க உத்தியோகஸ்தர்களைக் கண்டனஞ் செய்தார்கள்- இரகஸியத்தைக் காப்பாற்றுவதென்னும் மனிதனுடைய இயற்கை உரிமையைப் பறிக்க அரசாங்கத்திற்கு அதிகாரமில்லை யென்று பல பார்லிமெண்ட் மெம்பர்கள் கோபித்து, அரசாங்கத்தின் நடத்தையைப்பற்றி கண்டித்தனர். நாகரிகமுள்ள அரசாங்கத்தார் இத்தகைய காரியத்தை இப்பொழுதும் செய்து வருகின்றனர். ஆங்கில அரசாங்கத்தார் மாஜினியின் கடிதங்களை அந்நாளில் இரஸியமாகப் பிரித்ததுபோல இந்நாளிலும் பல தேசாபிமானர்களின் கடிதங்களைப் பிரித்து வருகின்றனர்— ஒருவருக்கு வரும் கடிதத்தை மற்றொருவன் பிரிப்பது குற்றமெனச் சட்டம் ஏற்படுத்தி யிருக்கையில், சட்டத்தை யேற்படுத்தின அரசாங்கத்தார் ஒருவருடைய கடிதங்களைப் பிரிப்பது குற்றமென்பதை உணராமலிருக்கின்றனரா அல்லது அங்ஙனம் பிரிப்பதற்கு அரசாங்கத்தாருக்கு உரிமை யுண்டு என்னும் பாத்தியதை கொண்டு செய்து வருகின்றனரா வென்னும் விஷயம் இன்னமும் உலகத்தில் தீர்ந்தபாடில்லை— மாஜினி விஷயத்தில் ஆங்கில அரசாங்கத்தார் வேவுகாரர்களாகயிருந்து அவனுடைய பரம இரகஸியங்களை ஆஸ்திரிய அரசாங்கத்தாருக்கும் நேபல்ஸ் முதலிய இதாலி தேச சமஸ்தானாதிபதிகளுக்கும் வெளிப்படுத்தின விஷயமாக மேக்காலே, ஷீல் முதலானோர் அரசாங்கத்தின் நடத்தையைப்பற்றிக் கண்டித்தனர். கார்லயல் டைம்ஸ்பத்திரிகைக்கு அவ்விஷயமாகப் பலமான கடிதமொன்று எழுதினார். அக்கடிதத்தில் 'ஒருவனுக்கு வந்த கடிதத்தைத் தபால் ஆபீஸினின்றும்

வாங்கிப் பிரிப்பது முடிச்சவிழ்ப்பதற்குச் சமமான தென்றும், போக்கிரிகளும் கொள்ளைக்காரர்களுமே அங்ஙனம் செய்வார்களெ'ன்றும் எழுதினர். ஆங்கில அரசாங்கத்தார் தம் வழக்கப்படி அநேகவிதமான கல்பனைகளைத்தயாரித்தனர். ஸர் ஜேம்ஸ் கிரஹாம், அரசாங்கத்தின் தரப்பில் 'மாஜினி பிரான்சு தேசத்திலிருக்கையில் கொலையை யங்கீகரித்து வந்தானென்றும், கொலைசெய்பவர்களுக்கு உடந்தையாய் யிருந்து கொலை செய்யத் தூண்டி வந்தானென்றும் தெரிவித்துக் கூறினன். பிறகு, மாஜினியின் நடத்தையையும் பிரன்சு அரசாங்கத்தின் அபாண்டமான பழியையுந் தெரிந்த ஸர் ஜேம்ஸ் கிரஹாம், மாஜினியின் மீதிருந்த அவநம்பிக்கையை நீக்கிக்கொண்டார். பல பார்லிமெண்ட் மெம்பர்களின் கடிதங்களும் பிரிக்கப்பட்டு வந்தன வென்பதும் பிறகு தெரிந்ததும் லண்டனிலும் இங்கிலாந்திலும் அது விஷயமாகப் பலமான கிளர்ச்சி யுண்டாயிற்று. அதைப்பற்றி விசாரிக்க பார்லிமெண்டார் ஒரு கமிட்டியை யேற்படுத்தினர். 1806-ம வருடத்திலிருந்து கடிதங்கள் பிரிக்கப்பட்டு வருகின்றன வென்றும் மாஜினியின் கடிதத்தைப் பிரிக்க அரசாங்கத்தார் உத்திரவு கொடுத்தனரென்றும் அக்கமிட்டி தெரிவித்தது. அக்கடிதத்தின் வழியாக மாஜினியின் பெயர் இங்கிலாந்து தேசத்தில் பலருக்குந் தெரிந்தது. மாஜினியிடம் பலருக்கு அக்கரை பிறந்தது. மாஜினியிடம் பலர் அடிக்கடி வரலாயினர். மாஜினியின் பெருமை நன்கு விளங்கிற்று. மாஜினி அச்சந்தர்ப்பத்தை வீணுக்காமல் இதாலி தேசத்தவர்களின் நிலைமையையும் ஆஸ்திரிய அரசாங்கத்தின் கொடுங்கோன்மையையும் பற்றி முறையிட்டான். பல

ஆங்கிலேயர்கள் இதாலி விஷயமாக அக்கரை கொண்டனர். ஆஸ்திரிய அரசாங்கத்தின் அநீதியைப்பற்றி லண்டன் பத்திரிகைகள் எழுதவாரம்பித்தன. பல விடங்களில் பிரசங்கங்கள் நடந்தன. இங்கிலாந்திலிருந்து இதாலிக்குப்போகும் ஆங்கில அமெரிக்க யாத்திரிகர்கள் மாஜினியிடமிருந்து இரகஸியமாகப் பல கடிதங்களையும் துண்டு பிரசுரங்களையும் வாங்கிக் கொண்டுபோய், ஆங்கு மாஜினியின் சிநேகிதர்களிடம் கொடுத்து வந்தனர். பல கனவான்கள் மாஜினிக்கும் இதாலியிலிருந்து கடிதங்கள் இரகஸியமாகக் கொண்டு கொடுப்பர். இங்ஙனம் மாஜினி இதாலிதேசத்தின் விடுதலைக்காக எல்லா துறையிலும் அரும்பாடுபட்டு வந்தான். இதாலி தேசத்தவர்களின் நன்மைக்காகவும் உபயோகத்துக்காகவும் சகாயந் திரட்டி வந்தான். லண்டனில் ‘இதாலிதேச விளையாட்டுக் கடை’ ஒன்று அமர்த்தி அதன் மூலமாகப் பணஞ் சேகரித்து இதாலிதேசத்து விடுதலைக்காகக் கஷ்டப் படும் தன் யௌவன இதாலி சங்கத்தாருக்கு மாஜினி அனுப்பிவந்தான். ஐரோப்பிய சமுதாய சங்கமொன்றை லண்டனில் மாஜினி ஸ்தாபித்தான். அச்சங்கத்தில் பலஆங்கிலர் அங்கத்தினர்களானார்கள். பாக்ஸ் தாமன் கூபர், ஹென்ரிவின்ஸ்ண்ட், பீடர் டேய்லர், ஸ்டான்ஸ் பீல்ட் வம்சத்தார், ஆஷ்ஹர்ஸ்ட் வம்சத்தார், ஷாயன் முதலானோர் அச்சபையின் நிர்வாகத்திற்குரியவர்களானார்கள். பிரதிவாரமும் சபையில் கூட்டமொன்று கூடும். ஆங்கு ஐரோப்பா தேசத்திலுள்ள இராஜீய விஷயமாகவும், சுதந்தர மற்றுக் கஷ்டப்படும் தேசத்தார் விஷயமாகவும் பேசப்படும். மாஜினியின் இராஜ்யப் புரட்சியின் கொள்கையைப்

பற்றி பீடர் டெயிலர் கண்டித்துப் பேசினர். அதைக் கேட்ட மாஜினி' 'ஐயா! உங்களுடைய நாட்டைப் பற்றிய வரையிலும் நீங்கள் கூறினது வாஸ்தவமே. கொடுங்கோன்மை ஆட்சியை யுதறித்தள்ளி பூர்ண சுதந்தரத்தை நீங்கள் அடைந்து விட்டீர்கள். அச் சுதந்தரத்தை யடைவதற்குமுன் நீங்களும் மிருக பலத்தை உபயோகப்படுத்தியே வந்தீர்கள். அத் தகைய துராக்கிரக சக்தி இனி உங்களுக்கு வேண்டுவ தில்லை. ஆனல் அன்னிய அரசாங்கத்தின் கால்களின் கீழ் அகப்பட்டுக் கொண்டு நசுங்கும் எங்களுக்கு என்ன வழி? எங்களுடைய நாட்டாரைக் கேட்பாரொருவரு மில்லை. பிறப்புரிமையைக் காப்பாற்றும் சாசனங்க ளாகிலும் பட்டயங்களாகிலுமில்லை. போர்புரிவதை விட வேறு என்ன வழியிருக்கிறது சொல்லுங்கள்' என்று கூறினன். இங்கிலாந்து அரசாங்கத்திற்கு மந்திரியாயிருந்த பால்மர்ஸடன் முதலிய சிறந்த அரசியல் ஞானிகளும் மாஜினியின் தேசாபிமானத் தைக் கண்டு வியந்து இதாலிதேசத்தினர்களுக்குத் தங்களாலியன்றவளவு உதவிபுரிந்து வந்தனர். மாஜி னிக்கு சற்றேனும் ஓய்வுகிடையாது. வரவர தேகம் இளைத்து வந்தது. வயது முதிர்ந்தவனைப்போல் காணப்பட்டான். சதா தொழிலாளர் பள்ளிக்கூடத் தில் பாடஞ்சொல்லிவருவதும், பத்திரிகைகளுக்கு விஷயதானஞ் செய்து வருவதும், தன்தேசத்தாருக் குக் கடிதங்களும் பிரசுரங்களும் அனுப்புவதும், புத் தகங்கள் எழுதுவதும், சபையில் பிரசங்கவாதஞ் செய் வதும், தன்னைப்பார்க்கவரும் ஆங்கில கனவான்க ளுடன் சம்பாஷிப்பதுமாக மாஜினி தன் பொழுதைப் போக்கிவந்தான். உண்ணவும் உறங்கவும் இவனுக்

குப் பொழுதில்லை. இதாலிதேசத்து வடபுறத்திலும் தென்புறத்திலும் நடந்தகலகம் வெற்றிபெறவில்லை. கலகத்திற்குப் பிறகு மிதவாதக் கட்சி இதாலிதேசத்தில்பலப்பட்டது. புதிய போப் வந்தார். பாபல் சமஸ்தானாதிபதியாக பீயோ நோனோ என்பவர் வந்ததும் மிதவாதிகளுக்குப் பலமுண்டாயிற்று. இதாலிதேசத்தில் மிதவாதிகளின் நடமாட்டம் பலமடைந்தால், தேசத்திற்கு விடுதலை சீக்கிரத்திலுண்டாகாதென மாஜினி நினைத்து, அவர்களுடைய இயக்கம் பலமடையாமலிருக்க மீண்டும் வெகு வேகத்துடன் வேலை செய்ய ஆரம்பித்தான். இதாலிதேச சமுதாய ஐக்கியம் ஒழிந்துவிடுமென்றும், பிரஜாதிபத்ய உணர்ச்சிக்குப் பதிலாக பிரபுத்துவ உணர்ச்சியும் அடிமைத் தன்மையு முண்டாகு மென்றும் மாஜினி நினைத்து வாரம் வாரம் புதியபுதிய பிரசுரங்களை அச்சிட்டு இதாலி தேசத்தினர்களுக்கு அனுப்பிவந்தான். பிரபு கட்சியினரும் பிரஜாதிபதய கட்சியினரும் ஐக்கியத்துடன் இருந்து வாழ்வதற்கு மாஜினி புதிய ஏற்பாடொன்றைத் தயாரித்துப் பிரசுரித்தான். தவிர, மானிட தர்மத்தைப்பற்றிப்பல அருமையான வியாசங்கள் எழுதினான். ஒருவன் தன் தேசத்திற்குச் செய்யவேண்டிய கடமையைப்பற்றி வெகு அழகாகப் பின்வருமாறு இவன் எழுதியுள்ளான்.

'ஒவ்வொருவனும் மானிட தர்மத்தையறிந்து பிறர்க்குபகாரஞ் செய்தலை மேற்கொள்ளுதல் அவசியமானது. இதுவே எல்லாக் கடமையினும் முதற் கடமையாகும். உலகத்திலுள்ள மனிதகுடும்பத்தின் வழியையே ஒவ்வொரு மனிதனும் பற்றிவருவதால் பொதுவாக ஜீவகாருண்யங் கொண்டு மனிதவர்க்கத்

துக்குப் பரோபகாரஞ் செய்து வருதல் முக்கிய கடமை. மனிதன் சேர்ந்து வாழும் பிராணியாதலால் அவன் கூட்டுறவைக்கொண்டு சகல மனிதர்களுடைய சுகதுக்கங்களையும், லாபநஷ்டங்களையும், மான அவமானங்களையும், நன்மை தீமைகளையும் அறிந்து அதற்குப் பரிகாரமாக அப்போதைக் கப்போது உழைத்து வருதலும் ஸ்வதர்மமாகும். அங்ஙனம் உழைத்து வருவதற்கே மனிதனுக்குத் தேசமென்றும் அத்தேசத்தைக் காக்கப் பல இயற்கை எல்லைகளென்றும் கடவுள் அமைத்துள்ளார். ஒருதேசத்தார் மற்றொருதேசத்தாரைத் துன்பப்படுத்தாமலிருக்கவே கடவுள் உயர்ந்த மலைத்தொடர்களையும் அகண்ட சமுத்திரங்களையும் எல்லைகளாகச் சிருஷ்டித்துள்ளார். இதாலிதேசத்து ஜனங்களை மற்ற தேசத்தார் துன்பப்படுத்தாமலிருக்கக் கடவுள் வானளாவிய ஆல்ப்ஸ் மலைச்சிகரத்தை ஒரு புறத்திலும் ஆழ்ந்தகடல்களை மற்றொரு புறத்திலும் வைத்துள்ளார். தேசமில்லாமல் மனிதனுக்குப் பெயரும், கீர்த்தியும், உரிமையும், சகோதர உணர்ச்சியும், கலைஞானங்களும் கிடையா. ஆகவே அத்தேசத்தைக் காப்பாற்றப் பாடுபடுவது இன்றியமையாதது. ஒவ்வொரு சாதியாரும் அவரவர்களுக்கென்றே தனியாக ஒரு தேசத்தை தேடிக்கொள்ளுதல் இயற்கையாகும். ஒவ்வொரு சாதியாருக்கென்று தனித்தனி தேசமில்லாமற் போனால் வாழ்க்கைக்குரிய காரிய நிர்வாகங்களும் கூட்டுறவும் ஐக்கிய பாவமும் உண்டாக மாட்டா. காரியா காரியங்களும் காலநிலையும் இடநிலையு மறிந்து செய்யும் தன்மையும், அவைகளின் தர்மாதர்மங்களும் ஏற்படமாட்டா. மனிதனுக்கு மனிதன் சதா சண்டையும் சச்சரவுங்கொண்டு ஒருகாரியமும் ஏற்படா வண்

னம் செய்துவருவான். பலவான் பலமற்றவனை யடக்கித்துன்புறுத்துவான். உயர்ந்தசாதி தாழ்ந்த சாதியை உபத்திரவப்படுத்தும். ஆகவே, தேசகாரியத்தை ஒழுங்கு படுத்துவதற்கு முன் குடும்பகாரியம் ஒழுங்கு படும் என்று நினைக்கமுடியாது. ஒருதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் வர்த்தக சங்கங்கள், கல்விக்கழகங்கள், சரித்திர சாஸ்திரசங்கங்கள் யாவும் மனிதனுடைய அபிவிர்த்திக்கு உதவியாக நிற்கக்கூடியவைகள். நாட்டிற்கு முக்கியமாக தனப்பெருக்கு வேண்டும். தனவிர்த்திக்குக் கூட்டுறவு அவசியம். கூட்டுறவுக்கு தேசாபிமான உணர்ச்சியும் சகோதர பான்மையும் வேண்டும். தேசத்திற்குரிய இக்காரியங்கள்யாவும் நடைபெற தேசிய இராஜாங்கமாகயிருத்தல் வேண்டும். அன்னிய அரசாங்கம் மேற்கூறிய கடமைகளைச் செய்ய முடியாது. ஜனங்கள் தங்கள் உரிமைகளையும் பாத்தியதைகளையும் ஸ்தாபித்துக் கொள்ளவேண்டுமென்றால் தேசத்திற்காக உழைக்க முன் வரவேண்டும். தேச கடமையைச் செய்யாதவரையில் அச்சனங்களுக்கு ஒன்றுமுண்டாகாது. நம் தேசமே நம் தாய் வீடு. தேசத்தினிடத்து அன்பு கொண்டிருக்கவேண்டும். இதாலி மகா ஜனங்களே! நாம் ஒருவரையொருவர் நேசிக்கவும், நம் குடும்பத்தார் ஒவ்வொருவரும் ஒருவரையொருவர் ஆதரித்து வரவும், ஒரே சீதோஷ்ணஸ்திதியினாலும், நடையுடை பாவனையினாலும், ஒழுக்கவழக்கங்களினாலும் ஒருமைப்பட்டு சகோதரர்கள்போல ஒரு குடும்பத்தினராய் வாழ்ந்து வரவும், ஒரேவித எண்ணத்தையும், இலட்சியத்தையும், உணர்ச்சியையும் கொண்டு தேச அபிவிர்த்தியில் ஈடுபடவும் பகவான் நம்மை ஒரு சாதியாராக

சிருஷ்டி செய்தாரென்பதை இதாலிமகா ஜனங்கள் முதல் முதல் அறியவேண்டும். நம்நாட்டுப் பொருள்கள் நமக்காகவும், நம் நாட்டு நாகரிகங்கள் நமக்காகவும், உபயோகப்பட பகவான் நமக்கு அகண்ட பூமிப்பரப்பையும் கொடுத்தார். நம் தேசத்துக்காகப் பாடுபடுகையில், நாம் மனிதவர்கத்துக்கே பாடுபடுபவர்களாகின்றோம். மனிதவர்க்கத்தைக் காப்பது தேசமாதலால், தேசத்திற்குப் பாடுபடுபவர்கள் மனிதவர்க்கத்திற்கும் உழைப்பவர்களாகின்றனர். இத்தர்மத்தை நாம் அறியாதவரை நாட்டிற்கும் மனிதவர்க்கத்திற்கும், குடும்பங்களுக்கும் சுகமென்பது உண்டாகாது. ஒரு தேசத்தார் பொதுவாக ஒருசமுதாயத்தாராக முதல் முதல் ஆகவேண்டும். சமத்துவ உணர்ச்சியின்றி சங்கங்களும் சமாஜங்களும் கிடையா. சமத்துவ உணர்ச்சியினின்றுமே சாதாரணமாக உலகில் பல சங்கங்களும் சமாஜங்களும் உண்டாகின்றன. இது உலகதர்மம். அனுபவ சித்தாந்தம். ஆகவே; ஒவ்வொருவனுடைய எண்ணமும் நினைவும் சதா தேசத்தினிடையே யிருக்கவேண்டும். ஒவ்வொருவனும் தேசத்தினுடைய அவதாரமாக யிருக்கவேண்டும். ஒரு குடும்பத்தை எப்படி பிரிக்க முடியாதோ அப்படியே ஒரு தேசத்தினரையும் பிரிக்க முடியாது. ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவன் தூரதேசத்திலிருக்கையிலோ அல்லது வேறு விதமாக பிரிக்கப்பட்டிருக்கையிலோ எப்படி அக்குடும்பத்தைச்சேர்ந்த மற்ற நபர்கள் சேர்ந்து உண்ணும் பொழுதும், உறவாடும்பொழுதும் பிரிக்கப்பட்டவனைப்பற்றி எங்ஙனம் நினைத்து வருந்துவார்களோ அங்ஙனமே சமுதாயத்தைவிட்டுப் பிரிக்கப் படுபவர்

களைப் பற்றியும் வருந்தி வரவேண்டும். உரிமையும் சுதந்தரமும் சகோதரத்துவமுங்கொண்ட மனிதர்கள் சமத்துவத்தை யடைந்து ஒரே நோக்கத்துடன் வாழும் ஒரு குடும்ப சமுதாயத்தைக் கொண்டிருப்ப தற்குத் தேசமெனப்படும். தேசமென்பது கேவலம் சந்தைக் கூட்டமல்ல; தேசமென்பது ஒரு சமுதாயத்தின் சங்கம். பொதுவான உரிமையும் சுதந்தரமுமின்றி தேசங் கிடையாது. அப்பொதுவான உரிமையும் சுதந்தரமும், ஜாதிபேதத்தினுலும், வகுப்புப் பிரிவினுலும், ஏற்றத்தாழ்ச்சியினுலும் பறிக்கப்பட்டும், சமுதாயத்தைச் சேர்ந்த பலருடைய கல்வி யறிவும் சாமர்த்தியமும் மேல் கிளம்பாதபடி தடுக்கப்பட்டும், பொதுவான ஒரு தர்மத்தை அவலம்பிக்காமலும் அங்கீகரிக்காமலும் இருக்கும் சமுதாயத்தைக் கொண்டுள்ள இடம் தேசமல்ல. அத்தகைய நிலைமையிலிருப்பவர்களை யொரு சமுதாயத்தாரெனவும் கூறுதல் ஒவ்வாது. ஏதோ தெய்வகதியாக ஒரு இடத்தில் சேர்க்கப்பட்ட மனிதவர்க்கமேயன்றி, ஒரே நியாயமும், ஒரே நோக்கமும் ஒரே உணர்ச்சியும் கொண்ட சமுதாயத்தாரல்ல. தேசமே ஒரு பெரிய கோயிலாக நமக்கிருக்க வேண்டும். அக்கோயிலுக்கு ஜனங்களே அஸ்திவாரங்களாவர். தேசத்தைச் சேர்ந்தவர்களில் படிப்பில்லாதவன் ஒருவன் இருக்கும் வரையில், வாக்குரிமை பெருதவனிருக்கும் வரையில், வேலையின்றிக் கஷ்டப்படுபவர்களிருக்கும் வரையில், உரிமையின்றி அடிமையுடனிருக்கும் வரையில் அது ஒரு நாகரிக தேசமாக மாட்டாது. வாக்குரிமை, கல்வி, வேலை ஆகிய இம்மூன்றே ஒரு தேசத்தின் தூண்கள். அத்தூண்களை நன்கு நிறுத்துவ

தற்குரிய ஆதாரங்களைத் தேடவேண்டும். ஒரு தேசம் அத்தேசத்தாரின் ஆதீனமின்றி பிறதேசத்தாரின் ஆதீனத்திலிருந்தால் ஆதாரமற்ற அத்தூண்கள் நிலத்திற் சாயும். ஆகவே, தேசத்தைக் காப்பாற்றும் விஷயத்தில் சமுதாயத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் தம் தம் கடமையைச் செய்யவேண்டும். இதாலியர்களே! உங்களுடைய பெருமுயற்சியாலே தான் அரசாங்கம் ஸ்தாபிக்கப்படவேண்டும். சுயப்பிரயோசனத்தைக் கொண்டுள்ளவர்களால் ஸ்தாபிக்கப்படும் அரசாங்கம் எப்பொழுதும் சமுதாயத்திற்கு நன்மை யுண்டாக்காது. சுதந்தரமானது மிகவும் பரிசுத்தமானது. உங்களுடைய பெருமுயற்சியால் ஒரே கடவுளும் ஒரே தர்மமும், ஒரே மதவழிபாடும், ஒரே அரசாங்க பரிபாலனமும் உண்டாக்கலாம். உங்களுடைய பெருமுயற்சியால் தேசத்தில் பெருமையும் வன்மையும், வீரமும் உரிமையும், சுதந்தரமும் சுயஆட்சியும் ஸ்தாபிக்கலாம். உங்கள் நாட்டின் பெருமை என்றும் அழியாதபடி காக்கவும் நீங்கள் செய்யலாம்.'

இது போன்ற பல வியாசங்கள் இதாலிதேசத்தவர்களுக்கு மாஜினி அடிக்கடி எழுதியனுப்பி வந்தான். இதாலிதேசத்தில் மிலன் நகரில் கலகம் உண்டாயிற்று. அதற்குப் பதினைந்து நாள் பின்னர், ஸிஸிலித்தீவில் பெரிய கலகமுண்டாகி போர்போன் பிரபுவம்சத்தினர் பலர் சின்னாபின்னப் படுத்தப்பட்டனர். பார்டினண்ட் அரசன் புதிய அரசாங்க சீர்திருத்தத்தைக் கொடுத்தான். அப்படியே டஸ்கனி சமஸ்தானாதிபதியும் பைத்மாண்ட் சமஸ்தானாதிபதியும் முறையே தங்கள் தங்கள் சமஸ்தானங்களில் சீர்திருத்தங்களைச் செய்தனர். இப்படியிருக்க பிரான்சுதேசத்தில் இரண்

177745

டாவது முறை பிரஜாதிபத்யம் ஸ்தாபிக்கப்பட்டது. ஐரோப்பாவில் இராஜீய நிலைமை மாறலாயிற்று. பியோநோநோவும் சீர்திருத்தம் செய்தான். இதாலியிலுள்ள சமஸ்தானங்கள் யாவும் அநேகமாக சீர்திருத்தங்களைக் கொடுத்துப் பிரஜைகளுக்குப் பல உரிமைகளை ஸ்தாபித்தன. ஆஸ்திரியர்களுடன் போராடி அவர்களை இதாலிதேசத்தையே விட்டு ஒழிக்கவேண்டுமென்னும் எண்ணங்கொண்டு பலர் முன்வந்தனர். வியன்னாவில் கலகமுண்டான செய்தியை யறிந்த மிலன் சமஸ்தான பிரஜைகள் உடனே கலகஞ் செய்து ஆஸ்திரிய பட்டாளத்தை அந்நகரினின்றும் ஓட்டினர். வெனிஸ், பர்காமோ, பரஸியா, காமோ முதலிய ஊர்களும் கலகஞ்செய்தன. லம்பார்ட், வெனிஸ் பிராஞ்சியங்களிலுள்ள ஒவ்வொரு ஊரும் கலகஞ்செய்து பிரஜாதிபத்யத்தை ஸ்தாபித்தது. ஒரு வாரத்துக்குள் ஆஸ்திரிய அரசாங்கம் அழிந்தது. இதாலியில் மூலைக்கு மூலை கலகமுண்டாயிற்று. பைத்மாண்டும், டஸ்கனியும் ஆஸ்திரியர்களுடன் போர் தொடங்க முன்வந்தன. கிராமங்களினின்றும், நகரங்களினின்றும் குடியானவர்களும், தொழிலாளர்களும் பிரபுக்களும் அனைவரும் ஒன்று சேர்ந்து இதாலி தேசத்தின் விடுதலைக்குப் போர் புரிந்தனர். அச்செய்தியைக் கேள்வியுற்ற மாஜினி தன் கனவு நனவாக முடியுஞ் சமயம் வந்துவிட்டதெனச் சந்தோஷித்தான். மாஜினி, உடனே லண்டனைவிட்டு இதாலிக்குப் புறப்பட்டான். இவன் பாரிஸ் நகர்வந்து ஆங்கு பழைய படி பிரஜாதிபத்ய சபையொன்றை ஸ்தாபித்து அடைக்கலம் புகுந்திருந்த தேசாபிமானர்களை யழைத்துக்கொண்டு மிலன் நகர்வந்து சேர்ந்தான். இவன்

பைத்மாண்டுக்குப்போக முடியவில்லை. ஏனெனில், 1833-ம் வருடத்தில் இவன்மீது அரசாங்கத்தார் செய்த உத்திரவு பாதிக்கக்கூடுமென்ற எண்ணத்தினுல், மாஜினி அந்த சமஸ்தானத்திற்குட் போக வில்லை. கலகம் விபரீதமாகவே நடந்து வந்தது. ஆஸ்திரிய இராணுவத்தில் சேர்ந்த இதாலியர்கள் இராணுவத்தைவிட்டு இரண்டாயிரம் வீரர்கள் மகாஜனங்களுடன் சேர்ந்து தங்கள் தேசவிடுதலைக்காகப் போராடினதையும் மாஜினி கண்டு ஆநந்தங்கொண்டான். எல்லைப்புறத்தில் இருந்துவந்த சுங்க உத்தியோகஸ்தர்கள் மாஜினியைக் கண்டு சந்தோஷித்தனர். மிலன் நகர் புறத்தில் மாஜினியை வரவேற்கப் பலமான கூட்டமொன்று திரண்டுவந்தது. இவனுக்கு ஊர்வலம் வைத்து மரியாதை செய்தனர். மாஜினி வந்ததும் சாமானிய ஜனங்களுக்குப் புத்துயிர் உண்டாயிற்று. பிரஜாதிபத்யக் கட்சியினர் வலுவடைந்தனர். பிரஜாதிபத்யக் கட்சியினர் வலுவடைந்து பிரஜாதிபத்யம் இதாலி தேசத்தில் உண்டானுல் பிரபுவம்சத்தினர்களுக்கு யாதொரு வழியுமின்றி போவதைக் கண்டு மிதவாதிகளும் இன்னும் சில பிரபுக்களும் ஆஸ்திரிய அரசாங்கத்துடன் போர் செய்துகொண் டிருந்ததை நிறுத்தி சும்மாயிருந்தனர். கரிபால்டி, பாண்டி முதலிய சிறந்த யுத்தவீரர்களைச் சேனுதிபதியாக்கவும் அவர்கள் சம்மதிக்கவில்லை. மாஜினியின் வரவு ஒருவாறு அநர்த்தத்தை யுண்டாக்கிற்றெனலாம். மாஜினி மிலன் நகரில் வந்திராமல் ரோமாபுரியில் இருந்து ஜனங்களைத் தூண்டியிருந்தால் இதாலிதேசம் அன்றே சுதந்தரத்தை யடைந்திருக்கும். மாஜினி ரோமாபுரியிலும், கரிபால்டி தெற்கு தேசங்களிலுமிருந்து ஜனங்களை உற்

சாகப்படுத்தி வந்திருந்தால் ஆஸ்திரிய அரசாங்கம் அன்றே ஒழிந்திருக்கும். சார்லஸ் ஆல்பர்ட் சந்தேகத்துடனே போர்புரிந்து வந்ததால் இரண்டொரு இடத்தில் அவன் தோல்வி யடைந்து சும்மாயிருந்தான். பல சமஸ்தானாதிபதிகளும் மிதவாதிகளும் இதாலிதேசத்தின் விடுதலையைப் பெரிதாகக் கருதாமல் வீணாக மாஜினியை நினைத்துப் பொறாமை கொண்டிருந்ததாலும், தங்கள் சுயகாரியங்களையே பெரிதெனக் கருதியிருந்ததாலும் அவர்கள் நல்ல சமயத்தில் தேசத்திற்குத் துரோகஞ் செய்தனர்.

# 3. இராஜ்ய புரட்சி

இதாலி தேசத்து சமஸ்தானங்களைச் சேர்ந்த சில ஊர்களில் கலகம் உண்டாயிற்றென முந்தின அத்தியாயத்திற் கூறியுள்ளோம். 1841-ம் ஆண்டில் அப்ருஸியென்னுமிடத்திலும் 1843-ம் வருடத்தில் ரோமக்னு என்னுமிடத்திலும், 1844-ல் கலேபிரியாவிலும் பலமான கலகங்கள் நடந்தன. கலேபிரியா கலகம் பண்டீரா சகோதரர்களின் தலைமையின் கீழ் நடந்தது. அவர்களுடன் டோமன்ஸியோ மோரோ என்பவனும் வேறு சிலரும் மாஜினியின் உத்திரவைக் கொண்டே கலகம் விளைத்தனர். வெகு சாமர்த்தியமாக நடத்தவேண்டுமென்றிருக்கவே, அவர்களில் ஒருவன் அரசாங்கத்திற்குத் தெரிவித்தான். அரசாங்கத்தரர் அவனுடைய வார்த்தையைக்கொண்டு பலமான சோதனை செய்து பண்டீரா சகோதரர்களையும் அவர்களுடன் சேர்ந்த பத்தொன்பது பேர்களையும் தூக்கிலிட்டனர். கலகம் ஒருவாறு ஒய்ந்ததென்றாலும் கியோபர்டி என்பவன் வெகு நிதானமாக கலகத்திற்கு வேண்டிய உணர்ச்சியைப் புத்தகங்கள் மூலமாக ஊட்டிவந்தான். மிதவாதிகளும் பலமாகத் தங்கள் கொள்கையைப் பிரசுரஞ்செய்து வந்தனர். சார்லஸ் ஆல்பர்ட் தன்னுடைய நிலைமையை யுத்தேசித்து அராசாங்க சீர்திருத்தஞ் செய்ய முன்வந்தான். முதன் முதல் சார்லஸ் பைத்மாண்டில் பின்வரும் அரசியல் சீர்திருத்தத்தைச் செய்தான்.

1. பிரஜைகளின் வாக்கைக்கொண்டு அரசாங்கம் முடியரசாக யிருக்கும். அரசுரிமை பாரம்பர்ய பாத்தியதையைக் கொள்ளும்.

2. அரசனும் அரசாங்கத்தைச் சேர்ந்த சபைகளுமே சட்டதிட்டங்களை யமைக்கும் அதிகாரத்தைப் பெறும்.

3. நாட்டின் நிர்வாகங்களெல்லாம் அரசனுடையதே. அரசன் நாட்டைச் சேர்ந்த இராணுவத்தையும், ஒரு தேசத்தோடு யுத்தம் செய்வதும் சமாதானஞ் செய்வதுமான அதிகாரங்களையும் பெறுவான். ஆனால், நாட்டின் நன்மையை யுத்தேசித்து சபைகளின் அபிப்பிராயங்களையும் அரசன் தெரிவித்து ஏற்றுக்கொள்ளலாம். நாட்டைச்சேர்ந்த ஊர்களையாகிலும் திரவியத்தையாகிலும் இஷ்டப்படி கொடுக்க அரசனுக்கு அதிகாரமில்லை.

4. அரசாங்க நிர்வாகத்திற்குரிய உத்தியோகஸ்தர்களை நியமிப்பதும் அரசனுடையதே.

5. அரசனே சட்டங்களையும் மசோதாக்களையும் பிறப்பிப்பதும் ரத்துசெய்வதுமான அதிகாரங்களைப் பெற்றுள்ளான்.

6. தண்டனைவிதிப்பதும் மாற்றுவதுமான அதிகாரங்களையும் அரசன் பெற்றுள்ளான்.

7. சட்டத்தின் முன்பாக எல்லா பிரஜைகளும் சமமானவர்களே; பட்டதாரிகளும், பிரபுக்களும், தொழிலாளர்களும் எல்லாரும் ஒரே சமமாக சட்டத்தின் முன் பாவிக்கப்படும். இராஜீய உரிமைகளையும் அவர்கள் சமமாகவே அனுபவிப்பார்கள். வித்தியாசம் சற்றுமில்லை. உத்தியோக ஸ்தானங்களுக்கும் வித்தி

யாசமின்றி சமமாகவே அவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

8. அரசாங்கத்திற்கு வரிசெலுத்தும் விஷயத்திலும் வித்தியாசமில்லாமல் அவரவர்களின் வரும்படியின் பிரகாரம் வரிவசூலிக்கப்படும்.

9. பிரஜைகளின் நபர் உரிமைகளும் பந்தோபஸ்துகளும் காக்கப்படும்; சட்டப்படி தக்க காரணமின்றி எவனும் சிறைபடுத்தப்படமாட்டான்.

10. அச்சுக்கூடச் சட்டம் இல்லை. ஆனால், குற்றஞ்செய்பவர்கள் சட்டத்தின்படி தண்டிக்கப்படுவார்கள்.

மேற்கூறிய சீர்திருத்தங்கள் உண்டானதும் ஜனங்கள் ஒருவாறு அச்சமயம் சந்தோஷத்துடனிருந்தனர். என்றாலும் சில பிரஜாதிபத்யக் கட்சியினர்மட்டும் அச்சீர்திருத்தத்தில் நம்பிக்கையின்றி தங்கள் பிரசாரத்தை விடாமற்படி செய்து வந்தனர். பைத்மாண்ட் சமஸ்தானதிபதி சீர்திருத்தங்களை யுண்டாக்கினபடி மற்ற சில சமஸ்தானங்களும் தங்கள் தேசத்தார்களுக்கு அப்படியே சீர்திருத்தங்களை வழங்கினர். சார்லஸ் ஆல்பர்ட், இரண்டாவது லியோபால்டு, ஒன்பதாவது பயஸ், முதலிய சமஸ்தானதிபதிகளே சீர்திருத்தங்களை வழங்கினர். இரண்டாவது பர்டினண்டு வெகு துன்பத்திற்குள்ளாகிக் கடைசியாகத் தன் தலைதப்புவதற்காக சீர்திருத்தங்களைத் தன் சமஸ்தானத்திலும் ஏற்படுத்தினன். மதேன சமஸ்தானதிபதி ஐந்தாவது பிரான்ஸிஸ், பார்மா பிராஞ்சியத்தைப் பரிபாலித்து வந்த சார்லஸ் லடோவிக் ஆகிய அவ்விரு சமஸ்தானதிபதிகளும் சீர்திருத்தங்களை வழங்காமல் ஜனங்களைத் துன்பப்படுத்த ஆஸ்திரிய படைவீரர்களை வர

வழைத்து பயமுறுத்தினர். லம்பார்டோ, வெனிஸ் பிராஞ்சியங்கள் ஆஸ்திரியர்களின் ஆதினத்தில் நேரா கவேயிருந்ததால் ஜனங்கள் பெரிய கலகங்களை யுண்டாக்க எத்தனித்தனர். ஆஸ்திரிய அரசாங்கத்தை நஷ்டப்படுத்த, அத்தேசத்தினின்றும் வரும் புகையிலையையும், சுருட்டையும் ஒருவரும் உபயோகப்படுத்தக் கூடாதென்று கட்டுப்பாடுசெய்து அச்சாமான்களை பகிஷ்காரஞ்செய்ய 1848-ம் வருடம் ஜனவரிமாதம் முதல் தேதியன்று ஒருபெரிய மகா நாடு கூட்டப்பட்டது. மிலன் நகரில் கூடின அக்கூட்டத்தைக் கண்ட ஆஸ்திரிய போலீஸார்கள் மிகவும் கோபங்கொண்டனர். அப்போலீசார்களிற் சிலர் சாமானிய ஜனங்களைப் போல உடை தரித்துக்கொண்டு நீண்ட சுருட்டுகளைப் பிடித்துக்கொண்டு வீதிகளில் வருபவர்களின் முகங்களில் புகைகளைவிட்டுக்கொண்டு வந்தனர். உடனே ஜனங்களுக்குள் குழப்பம் உண்டாகிப் பெரிய கலகம் ஏற்பட்டது. சுருட்டு பிடிப்பவர்களைக் கண்டவிடங்களில் அடித்து வந்தனர். போலீஸார்களும் கலகக்காரர்களைத்தாக்கி அகப்பட்டவர்களைச் சிறைபடுத்தியும் வந்தனர். மறுநாள்காலை, அரசாங்கத்தார், சாராயங்களையும் சுருட்டுகளையும் தாராளமாக யுத்தவீரர்களுக்குக் கொடுத்தும் வீதிகளில் வருபவர்களைப் பலவந்தப் படுத்தி சுருட்டுபிடிக்கும்படி செய்வித்தும் வந்தனர். ஆயுதங்களைக்காட்டிப் பயமுறுத்தி ஜனங்களை சுருட்டு பிடிக்கவும் சாராயம் குடிக்கவும் ஆஸ்திரிய அசாங்கத்தார் வற்புறுத்தி வந்தன்ர். மிலன் நகரில் போர்வீரர்கள் தலை தெரியாது குடித்துவிட்டு ஜனங்களைக் கண்ட இடங்களில் வெட்டி வந்த்னர். பல ஜனங்கள் மாண்டனர். தவிர, அரசாங்கத்தார் பதுவா, பாவியா முதலிய

ஊர்களிலும் அவ்வண்ணமே வற்புறுத்தி ஜனங்களின் மண்டைகளை உருட்டிவந்தனர். எங்கும் இரத்த வெள்ளம் பெருகிற்று. வெனிஸ் நகரில் இரு ஜனத் தலைவர்களையும் அவர்கள் கைதுசெய்தனர். ஜனங்கள் அதிக கோபங்கொண்டு பலமான புரட்சிசெய்ய வாரம்பித்தனர். பிரன்சு நாட்டுப் புரட்சியின் ஞாபகம் வந்தது. சுதந்தரப்போர் தொடங்கிற்று. ஜனங்கள் சிறைச்சாலைக்குச் சென்று சிறைப்பட்டிருந்த தேசாபிமானர்களை விடுவித்துச் சிறையைத்தகர்த்தனர். காரியம் மிதமிஞ்சிப்போகவே, அப்பிராஞ்சியத்தையாண்டு வந்த கவர்னர் உடனே சீர்திருத்தங்களை வழங்க முன் வந்தான். அச்சீர்திருத்த அரசாங்கத்தில் பால்பி என்பவன் முதல் கவர்னராக ஆயினன். கலகம் ஓய்ந்தது. சமாதானம் உண்டாயிற்று. மிலன் நகரில் கலகம் ஓயவில்லை. ஜனங்களுக்கும் யுத்தவீரர்களுக்கும் விபரீதமான போர் உண்டாயிற்று. ஆஸ்திரியர்களை மிலன் நகரினின்றும் வெளியோட்டுவதற்கு அந்நகரவாசிகள் யாவரும் வயது சென்றவர்கள் உள்பட கையில் துப்பாக்கி யேந்தி போர்புரிந்தனர். ஆஸ்திரிய படைவீரர்கள் பலர் மாண்டனர். கடைசியாக ஆஸ்திரிய வீரர்கள் ஜனங்களின் வீராவேசங்களுக்கு முன் நிற்கமாட்டாமற்படி வெளிசென்றனர். மிலன் நகரம் அன்னிய அரசாங்கத்தினின்றும் விடுதலை பெற்றது. அந்நகரக் கோட்டையின்மீது சுதந்தரக்கொடி பறந்தது. மிலன் நகரில் சுதந்தரக்கொடி பறந்ததும் வெனிஸ் நகரத்தார் மீண்டும் கலகம் விளைத்தனர். சீர்திருத்தங்கள் யாவும் பறந்தன. சுதந்தர தாகமுண்டாகி ஜனங்கள், ஆஸ்திரியர்களை அந்நகரினின்றும் ஓட்டப் பலத்த போர்புரிந்தனர். சார்லஸ் ஆல்பர்டும்

பைத்மாண்டவீரர்களை அணிவகுத்துப் பலமான யுத்தம் புரிந்தான்; மாஜினியின் வீரர்களும் சேர்ந்தனர். இங்ஙனம் போர் நடந்து ஆஸ்திரியர்கள் பலமாகத் தோல்வியடைந்து பின்னடைந்துவரவே, நேபல்ஸ் சமஸ்தானாதிபதியும் இன்னும் இரண்டொரு சமஸ்தானாதிபதிகளும் சார்லஸ் ஆல்பர்டின்மீது பொறாமை கொண்டும், பிரஜாதிபத்யக் கட்சியினர் வலுவடைந்தால் தங்கள் நிலைமை மாறி இராஜ்யத்தையும் இழக்க நேரிடுமோ வென்றும் ஐயப்பாடுகொண்டு போர்புரிவதினின்றும் விலகிக்கொண்டனர். ஆஸ்திரிய படைவீரர்கள் பலமாகத்தாக்கி இழந்த இடங்களையெல்லாம் மீண்டும் கைப்பற்றினர். சார்லஸ் ஆல்பர்ட் தன்னுடைய நிலைமையை யறிந்து பைத்மாண்ட் சமஸ்தானத்தைத் தன் மகனுக்குக் கொடுத்துவிட்டு போர்த்துகல் இராஜ்யத்துக்குச் சென்றான். 1848-ம் ஆண்டில் நடந்த இராஜீய புரட்சியை ஆஸ்திரிய அரசாங்கத்தார் அடக்கியும், மீண்டும் 1849-ம் ஆண்டில் புரட்சியொன்று உண்டாயிற்று. சார்லஸ் ஆல்பர்ட்டை சேனாதிபதியாக யிருக்கவேண்டுமென்று ஜனங்கள் கேட்டும், அவன் முடியாதென்று கூறி நகர் நீங்கினான். இதாலியர்கள் ஆஸ்திரிய அரசாங்கத்தை யொழிக்கப் பலமாகப்பாடுபட்டும் யுத்தவீரர்களை யடக்கிக் கட்டுப்பாட்டுடன் அணிவகுத்துச் செல்ல சேனாதிபதியொருவனுமில்லை. போலாந்து தேசத்தின் விடுதலைக்காகப் போர்புரிந்த வீரனொருவன் சேனாதிபதியானான். அவனுக்குப் பெயர்மட்டும் வந்துவிட்டதே தவிர, நல்ல யுத்த தந்திரமறிந்தவனல்ல. இதாலி பாஷையும் நடவடிக்கையும் அவனுக்குத் தெரியாது. அவனுடைய அறியாமையால் சேனைகள் பலமாக சேதமடைந்தன.

மிதவாதிகளிற் சிலர் கரிபால்டிக்கு சேனாதிபதி ஸ்தானங்கொடுக்க மறுத்தனர். இந்த துர்ப்பாக்கிய நிலைமையில் இதாலி சனங்கள் தங்களால் இயன்றமட்டும் போர்புரிந்தும் ஆஸ்திரியர்களுடன் போர்புரிய முடியவில்லை. மீண்டும் இதாலியர் பலமாகத் தோல்வியடைந்து வந்தனர். இரண்டாவது பர்டினண்டு முதலான சில சமஸ்தானாதிபதிகள் ஆஸ்திரியர்களுடன் சேர்ந்து ஜனங்களைத் துன்புறுத்தியும், தேசாபிமானர்களைச் சிறைபடுத்தியும் வந்தனர். கரிபால்டி தன்னுடன் சேர்ந்த படை வீரர்களுடன் பலமாகப் போராடிவந்தும் பிரயோஜனமில்லாமற் போயிற்று. இச்சமயத்தில் பாபல் சமஸ்தானாதிபதி போப் ஸ்தானம் காலியாயிற்று. அதற்குப் புதிய போப் ஒருவர் வந்தார். ரோமாபுரியைச் சுற்றிலும் பிரஜாதிபத்ய கட்சியினர்கள் வலுவடைந்து வரவே அவர்களை யடக்க அப்புதிய போப் ஸ்பெயின் அரசாங்கத்தின் உதவியை நாடினான். ஸ்பெயின் தேச வீரர்களும் வந்தனர். பிரான்சு தேசாதிபதி லூயி நெபோலியனும் போப் அவர்களைக்காக்கவும் பாபல் சமஸ்தானத்தில் அமைதியுண்டாக்கவும் தூதரரொருவரை யனுப்பினான். இங்ஙனம், இதாலி இருமுறை தன் விடுதலைக்காகப் போராடியும் தக்க சேனாதிபதி யில்லாமலும், சமஸ்தானாதிபதிகளுக்குள்ளே ஒற்றுமை யில்லாமலும், பிரஜாதிபத்ய கட்சியினர்களைத் தாங்கின மாஜினிக்கும் மிதவாதிகளுக்கு முண்டான அபிப்பிராய பேதத்தாலும், இத்தாலி சுதந்தரத்தை அவ்வருடத்தில் அடையாமல் பத்து வருடம் கழிந்தபிறகு மீண்டும் கரிபால்டியின் முயற்சியாலும், மாஜினியின் தேசாபிமான உணர்ச்சியினாலும், சார்லஸ் ஆல்பர்ட்டின் மகன் விக்டர் எமான்

யூலின் திறமையினுலும் இதாலி அன்னிய அரசாங்கத்தையொழித்து சுதந்தரத்தை ஸ்தாபித்து சுய ஆட்சி கொண்டது. காவோரும் இதாலி தேசத்தின் விடுதலைக்குப் பாடுபட்டதும் குறிப்பிடத்தக்கது. விக்டர் எமான்யூல் பைத்மாண்ட் சமஸ்தானுதிபதியாக வந்ததும் தன் அரசாங்கத்தைச் சீர்திருத்த எண்ணினுன். குழப்பத்தினுல் தேசம் ஆலங்கோலமா யிருந்தது. ஜனங்கள் வெகு கஷ்டங்களை அனுபவித்தனர். அந்நிலைமையில் விக்டர் எமான்யூல் ஆஸ்திரியாவுடன் சமாதானஞ்செய்து தன் நாட்டைச் சீர்திருத்தினுன். நல்ல மேதாவிகளை யமர்த்திப் பல துறைகளிலும் சீர்திருத்தங்களைச் செய்தான். மதகுருக்களுக்குப் பிரத்யேகமாக இருந்துவந்த உரிமைகளைக்களைந்து சமத்துவத்தை அவன் உண்டாக்கினுன். காவோர் முதலானோர் மந்திரிகளாக யிருந்துவந்தனர். பைத்மாண்ட் சமஸ்தானம் சீர்திருத்தத்தை யளித்துப் பிரஜைகளுக்குரிய உரிமைகளைத் தந்துவந்தும், அச் சமஸ்தானத்திலுள்ள பல பிரபுக் கட்சியினர் அவனைக் குறை கூறி வந்தனர். அங்ஙனமே பிரஜாதிபத்யக் கட்சியினர்களும் குறைகூறி வந்தனர். நேபல்ஸ் சமஸ்தானம் முதலிய இதர சமஸ்தானங்கள் கொடுங்கோன்மையை யாதரித்து வந்தன. நேபல்ஸ் மன்னன் இரண்டாவது பர்டினண்ட் பல அடக்குமுறைச் சட்டங்களையும் உத்திரவுகளையும் பிறப்பித்து பல தேசாபிமானர்களைச் சிறைபடுத்தி வந்தான். விசாரணையின்றியும், குற்றமின்றியும், மனிதர்கள் சிறைபடுத்தப்பட்டனர். அச் சமயம், இங்கிலாந்திலிருந்து கிளாட்ஸ்டன் நேபல்ஸ் நகரில் வசித்துவந்தார். அத்தேச நிலைமையையும், ஜனங்களின் கஷ்டங்களையும், உத்தியோகஸ்தர்களின்

அட்டூழியங்களையும் பார்த்துச் சகிக்கமுடியாமல், உடனே அவ்வூரைவிட்டு இங்கிலாந்து சென்று தான் கண்ட அநியாயத்தைப்பற்றிப் பெரிய கடிதமொன்று, இங்கிலாந்து மந்திரி ஆபர்டீன் பிரபுவுக்கு எழுதினர். அக்கடிதம் பத்திரிகைகளில் பிரசுரமாகவே, பல இதாலியர்கள் ஆநந்தங்கொண்டனர். மாஜினி அக்கடிதத்தை அச்சிட்டுப் பல இடங்களில் வழங்கும்படி செய்தான். மாஜினியிடத்தில் இங்கிலாந்திலுள்ள சில பார்லிமெண்ட் மெம்பர்களுக்கு வெறுப்பிருந்ததும் கிளாட்ஸ்டன் கடிதத்தால் நீங்கிற்று. மாஜினியைப் பல புதிய மெம்பர்கள் கொண்டாடினர்கள். இதாலிதேசத்தின் மற்ற சமஸ்தானங்களிலும் விபரீதங்கள் பல இருந்தன. டஸ்கனி ஆஸ்திரியாவுடன் சேர்க்கப்பட்டது. ஆஸ்திரியர்கள் ஜனங்களைப் பலவிதமாகத் துன்புறுத்தினர். மதேன சமஸ்தானத்திலும் ஐந்தாவது பிரான்ஸிஸ் ஜனங்களுக்குக் கொடிய சட்டங்களை யேற்படுத்தித் துன்புறுத்தி வந்தான். பார்மாவையாண்ட மூன்றாவது சார்லஸும், கொடுங்கோன் மன்னனாக யிருந்தான். லம்பார்டியிலும் வெனிஷியாவிலும் ஆஸ்திரியர்கள் ஜனங்களைப் படுத்தினபாட்டைச் சொல்லமுடியாது. மாதர்கள் நடுச்சந்தியில் நிறுத்தப்பட்டு முக்கோணங் கட்டி யடிக்கப்பட்டனர். பல தேசாபிமானர்கள் வீதிகளில் வரிசை வரிசையாக நிறுத்தப்பட்டுச் சுடப்பட்டனர். ஆஸ்திரியர்களுடைய உபத்திரவத்தைச் சகிக்கமுடியாமல் பலர் தங்கள் வீட்டைவிட்டு வெளிவராமலிருந்தனர். ஆஸ்திரிய அரசாங்கத்தை யொழிக்க மீண்டும் இரகஸிய சபைகள் ஏற்படுத்தப்பட்டன. 1851-ம் ஆண்டில் பலமான சபைகள் தேசமெங்கும் ஸ்தாபிக்கப்பட்டன. பார்மாவையாண்ட மூன்றாவது

சார்லஸ் நான்கு வருடத்திற்குள்ளாகத் தன் சிறிய சமஸ்தானத்தில் ஆயிரக்கணக்கான மனிதர்கள் சிறை பட்டும் முன்னூறு பேர்கள் தூக்கி விடப்பட்டனர். அதைப் பொறுக்காத சிலர் அவனைக் கொல்ல எத்தனித்தனர். அவன் ஒருநாள் தன் அரண்மனையிலிருந்து வெளியே உலாவப்போகையில் ஒருவன் இரகஸியமாகக் கத்தியினால் குத்தினான். கத்தியினால் குத்தப்பட்ட மூன்றாவது சார்லஸ் சில தினங்களுக்குள் மாண்டான். இதாலிதேசத்தின் விடுதலைக்காக இராஜ்யபுரட்சி யுண்டானதும் மாஜினி தன் ஜென்ம தேசத்திற்கு வந்து சனங்களுக்குப் பல உதவிசெய்தும் இதாலி பிரஜைகள் முன்னிலும் கேவலமாக ஆஸ்திரிய அரசாங்கத்தாலும் சமஸ்தானாதிபதிகளாலும் அடக்கப் பட்டு வருவதைக்கண்டு, மாஜினி ஸ்விட்ஸிர்லாந்து தேசத்துக்குத் திரும்பினான். மாஜினியும் அவனோடு மற்றுஞ் சில பிரஜாதிபத்ய கட்சியினரும் அங்கு வசித்துவந்தனர். மாஜினி ஸ்விட்ஸர்லாந்து தேசத்தைச் சேர்ந்த ஜீனிவா நகரைவிட்டு மீண்டும் ஒருவரு மறியாதபடி லண்டன்மாநகர் போய்ச் சேர்ந்தான். மாஜினி லண்டன் வந்து சேர்ந்ததும் கார்லயன் மனைவியார் இவனுக்குத் தங்கள் கிரகத்திற் கருகாமையில் ஒரு வீட்டை வாடகைக்கு வாங்கிக் கொடுத்தாள். முன்னிலும் மாஜினிக்கு இப்பொழுது வரும்படி சற்றே அதிகமாகவே வந்தது. மாஜினியினுடைய பெயர் இங்கிலாந்திலுள்ளவர்களுக்கு நன்கு தெரியுமாகையால், அவனுடைய வியாசங்களுக்கு நல்ல மதிப்பு இருந்தது. பல பத்திரிகாசிரியர்கள் தங்கள் பத்திரிகைகளுக்கு விஷயதானஞ் செய்யும்படி மாஜினியைக் கேட்டார்கள். மாஜினியும் அவரவர்களுக்குத் தக்க

படியும் பத்திரிகைகளின் இலட்சியத்திற்குத் தக்கபடியும் விஷயதானஞ் செய்துவந்தான். மாஜினியின் தகப்பனர் 1848-ம் ஆண்டில் இறந்துபோனர். தாயோ தகப்பனர் இறந்து நான்கு வருடங்களுக்குப் பிறகு 1852-ம் ஆண்டில் ஆவி துறந்தாள். மாஜினியைப் பற்றிய விசாரம் அவளுக்கு மிக்க உண்டு. மாஜினி பணத்தைச் சற்றும் லட்சியஞ் செய்யாமல் செலவழித்துவிடுவதை அவள் நன்கு அறிந்தவளாதலால், மாஜினி பணத்திற்குக் கஷ்டப்படாமலிருப்பதற்கும், வீணுகப் பணத்தைச் செலவழிக்காம விருப்பதற்கும் தான் இறக்குஞ் சமயத்தில் மாஜினிக்கு 160-பவுன் வருட வரும்படியைக் கொடுக்கும் சொத்தை வைத்துவிட்டு அச் சொத்தை யழிக்காமலிருக்க ரட்சகர்களை நியமித்துவிட்டுஞ் சென்ருள். தாய் தன் மைந்தனுக்குரிய தோஷத்தைக் கண்டு ஏற்பாடு செய்தாளாயினும், மாஜினி அச்சொத்தில் வெகுநாள்வரை பணம் எடுக்காமல், தன் வரும்படியைக்கொண்டே தன்னையும் தன்னல் ஸ்தாபிக்கப்பட்ட பள்ளிக்கூடத்தையும் காப்பாற்றி வந்தான். ப்ரௌனிங், ஜேம்ஸ் ஸ்டூவர்ட்மில், டிக்கன்ஸ், ஜோவெட், ஸ்வின்பர்ன் முதலிய அறிஞர்களுடன் சிநேகஞ் செய்துவந்தான். அவர்களுக்கு அடிக்கடி இவன் இராஜீய விஷயமாகக் கடிதம் எழுதுவான். மாஜினியின் இராஜீய கொள்கையையும் தேசாபிமானத்தையும், தாராள உணர்ச்சியையுங் கண்டு அவர்கள் கொண்டாடினர்கள். மாஜினி அருமையான ஒரு மேதாவி என்று அவர்கள் புகழ்ந்தனர். மாஜினி விஷயங்களை வாதிப்பதில் வெகு சமர்த்தன்; நல்ல பிரசங்கி: இவனுடைய இராஜீய கொள்கையைப் பல ஆங்கில நண்பர்கள் அங்கீகரிக்கவில்லையாயினும்,

அவர்கள் இவனுடைய வாக்குவன்மையையும், தேச பக்தியையும், மத உணர்ச்சியையும், கண்டு வியந்தார்கள். ஏழைகளிடத்திலும், தொழிலாளர்களிடத்திலும் இவனுக்குப் பரம விசுவாசம். ஏழைகளினுடைய உழைப்பினாலேயே பணக்காரர்கள் தங்கள் தனத்தைப் பெருக்கினார்களென்றும், ஏழைகளைப் பல விதத்திலும் காப்பாற்ற பணக்காரர்கள் கடமைப்பட்டவர்களென்றும் இவன் கூறுவான். தவிர, படித்தவர்கள் தங்கள் பெருமையும் கௌரவமும் வெளிப்படுவதற்கே தங்கள் சகோதரர்களிற் பலரைப் படிக்க வைக்காமல் இருந்து வருகின்றனரென்றும், படிப்பில்லாதவர்களைப் படிக்க வைப்பது படித்தவர்களின் முதற் கடமையென்றும் மாஜினி அடிக்கடி கூறுவான். லண்டனில் மாஜினி வசித்து வருகையில் அமெரிக்கா தேசத்தில் நீக்ரோ சாதியார்களின் அடிமைத் தனத்தை யொழிக்கப் பலமான கிளர்ச்சி யுண்டாயிற்று. அக் கிளர்ச்சி விஷயமாக மாஜினி பல வியாசங்கள் பத்திரிகைகளுக்கு எழுதினான். இப்படியிருக்க, இதாலிதேசத்தில் இராஜீய நிலைமை சீர்படவில்லை. பைத்மாண்ட் சமஸ்தானத்தில் மட்டும் சனங்கள் சில உரிமைகளை யனுபவித்து வருகின்றனரே யன்றி, தாராளமாக இன்னமும் அனுபவிக்கவில்லை. இதாலி தேசத்தில் அன்னிய அரசாங்கத்தை யொழிக்க பிரான்சு தேசத்தின் உதவியை காவோர் நாடினான். காவோர் மிதவாதி. பிரஜாதிபத்ய உணர்ச்சியில் நம்பிக்கையில்லை. முடி யரசிலேயே நம்பிக்கை. மாஜினியின் இராஜீய கொள்கையை வெறுத்தான். மாஜினியைக் கண்டால் இவனுக்குப் பிடிக்காது. இதாலி தேசத்துக்குப் பரம சத்துருவென மாஜினியை

காவோர் எண்ணி துவேஷித்து வந்தான். மாஜினியோ முடியரசு என்றைக்கும் ஜனங்களுடைய உண்மையான உரிமைகளை ஸ்தாபிக்காதென்றும், முடியரசாங்கத்தில் சமத்துவ உணர்ச்சி யுண்டாகாதென்றும் கூறிவந் தான். இராஜீய விஷயத்திலும் மனித வாழ்க்கையி லுள்ளபடி தர்ம நீதி இருக்க வேண்டுமென்றும், தர்ம நீதியின் வியாபகமே இராஜீய சீர் திருத்தமென்றும், ஒருதேசம் நல்லரசாங்கத்தைக்கொண்ட தென்பதற்கு இராஜீய விஷயத்தில் தர்ம நீதியின் ஸ்தாபனமே அறி குறியென்றும் மாஜினி கூறி வந்தான். அரசாங்க மானது தர்ம நீதியைக் காப்பாற்றுவதற்கே யேற்பட்ட தென்றும், அத் தர்ம நீதியால் அரசாங்கத்தைச் சேர்ந்த பிரஜைகளையும் பிரஜைகளின் குடும்பங்களை யும், அவர்களின் வாழ்க்கையையும், சங்கங்களையும் செம்மைப் படுத்தக் கடமைப்பட் டுள்ளதென்றும், தர்ம நீதிகள் நன்கு அனுஷ்டானத்திற்கு வரும்படி யான சட்ட திட்டங்களை யமைத்துச் சுதந்தரங்களை யும் உரிமைகளையும் கொடுக்கக்கடமைப்பட்டுள்ளதென் றும் மாஜினி கூறுவான். ஒருபுறத்தே நன்மையும், அறிவும், தனமும், போகமும், குடிகொண்டிருக்க வும், மற்றொரு புறத்தே தீமையும், அஞ்ஞானமும் தரித்திரமும், கஷ்டமும் குடிகொண்டிருக்கவுமான நிலைமையில் எப்படி சகோதரத்துவம் உண்டாகும் என்றும், மனிதர்கள் தியாகஞ் செய்ய முன் வராமல் பணத்தையே பெரிதாகக் கருதி வாழும் வரையிலும் சுதந்தரம் எப்படி யுண்டாகும். என்றும், ஜீவகாருண் யத்திற்காக ஊழியஞ் செய்தலை மேற் கொள்ளாமல் அவரவர்கள் தங்கள் தங்களையே உயர்ந்தவரெனக் கொண்டு மகிழ்ந்திருந்தால் சமத்துவம் எப்படி யுண்

டாகு மென்றும் மாஜினி அடிக்கடி வருந்திக் கூறு வான். அரசாங்கமானது பிரஜைகளின் வாழ்க்கை யைத் தர்ம நீதிப்படி சீர்திருத்த அவர்களுக்கு முதன் முதல் உரிமைகளைக் கொடுத்து சுதந்தரத்தை ஸ்தா பிக்க வேண்டும். சுதந்தர மொன்றே வாழ்க்கையின் முடிவல்ல; ஆனால், சுதந்தரமானது வாழ்க்கையைச் செம்மைப் படுத்துகின்றது. சுதந்தரத்தினால் பிரஜை கள் பொறுப்புள்ளவர்களாகித் தங்கள் காரியங்களைச் செவ்வனே நடத்தி வருவார்கள். மனிதர்களின் அபி விர்த்திக்கும் தேசத்தின் முன்னேற்றத்திற்கும் சுதந் தரம் இன்றி யமையாதது. சுதந்தரம் இல்லாத யிடத் தில் வாழ்க்கை துன்பத்திற் குரியது. சுதந்தரத் தைப் பறிக்கும் ஒருவன், இயற்கைக்கு விரோதமாக வும் கடவுளுடைய ஆக்ஞைக்கு விரோதமாகவும் நடக் கிறான். நபர் உரிமை, மதஉரிமை, வாக்குரிமை (பேசும் உரிமை), பத்திரிகைகளை நடத்தும் உரிமை, எழுதும் உரிமை, சங்க உரிமை, வியாபார வர்த்தக உரிமை, ஆகிய இவ்வுரிமைகளின்றி மனிதன் நித்தம் தன் வாழ்க்கையை நடத்த முடியாது. மேற்கூறிய உரிமை யில்லாமற்போனால், மானிட வாழ்க்கை சிக்க லாக யிருப்பதுடன் அபிவிர்த்தியின்றி ஒரே மாதிரி யாகவே யிருக்கும். மனிதர்களுடைய உரிமையில் அரசாங்கம் தலையிடக் கூடாது. அரசாங்கத்தின் இரண்டாவது கடமையானது சங்கங்களை யுண்டாக்கி அவைகளைச் சுதந்தரத்துடன் போஷிப்பது; சங்கங் களின் பலமே அரசாங்கத்தின் பலமென்றும், சங்கங் களின் நடமாட்டமே அரசாங்கத்தின் நன்மைக்கு அறிகுறி யென்றும் கூறப்படுகின்றது. சுதந்தரமுள்ள மனிதர்களில்லாவிடில் சங்கங்களே கிடையாது. அடி

மைத்தனத்தில் கஷ்டப்பட்டு வாழுபவர்களின் சங்கம் சங்கமல்ல. சங்கமென்பது சுதந்தராலயம். சுய நிர்ணய மொன்றினாலேயே மனிதன் சிறந்தவனாக மாட்டான். மனிதருள் தன்னுடைய கடமையை யறிந்து பிரர்களுக்குச் செய்யவேண்டிய தர்மத்தை யறிந்தவனே சிறந்தவனாவான். தீமை வழியை நாடுவது சுதந்தரமல்ல; நன்மையை நாடி நன்மையின் வழியே பிறர்களுக்கும் நன்மையை யுண்டாக்குவது சுதந்தரம். மூன்றாவதாக அரசாங்கமானது ஜாதீய கல்வியை யுண்டாக்குங் கடமையையுங் கொள்ள வேண்டும். ஜாதீய கல்வியினாலேயே தேசமும் பிரஜைகளும் அபிவிர்த்தியடைந்து ஒரு சமுதாய முண்டாவதற்கு வழி யுண்டாகும். தேசமெங்கும் ஜாதீய முறையில் பாடசாலைகளை ஸ்தாபித்துப் பிள்ளைகளுக்கு மனிதனுடைய ஸ்வதர்மம், தியாகம், பக்தி முதலியவைகளையே போதிக்க வேண்டும். அரசுரிமை ஒரு மனிதனுக்குப் பாத்தியதை யல்ல. அரசுரிமையானது ஜனங்களிடத்திலுள்ளது. அவர்களே பாத்தியதை யுள்ளவர்கள். கடவுளுடைய ஆக்ஞையை யறிந்து ஒருவன் தர்மத்தை நடத்தக்கூடும். ஜனங்களுடைய அபிப்பிராயமே புனிதமானது; அதுவேதான் தர்மம்; அதுவே சட்டம். குடியரசொன்றே கடவுளுடைய அரசாங்கம். குடிகளே பெருந் தொகையாளர்களாக யிருக்கிறார்க ளென்ற எண்ணத்தினாலேயே அவர்களின் அபிப்பிராயம் சிரேஷ்ட மென்பதல்ல; மனிதவர்க்கத்தின் இயற்கை அற்புதங்கள் யாவும் குடிகளிடத்தில் குடிகொண் டிருப்பதால், 'ஜன வாக்கியம் கர்த்தவ்யம்' என்று கூறப்படுகிறது! என்று மாஜினி அருமையான வியாசங்களைப் பத்திரிகைகளுக்கு எழுதி வந்

தான். மாஜினி, இதாலி தேசத்தில் குடியரசை ஸ்தாபிக்க வேண்டுமென்று கருதி, அதற்குரிய சகல ஏற்பாடுகளையும் தன் அபிப்பிராயத்திற் கொத்தவர்களுடன் செய்து வந்தான். காவோர், இதாலி தேசத்தை முடியரசாக்கி, விக்டர் எமான்யூல் மன்னனை அரசனுக்கி வைக்க அவன் பலமான ஏற்பாடுகளையுஞ் செய்துவந்தான். காவோர் சிறந்த இராஜ தந்திரி. அவன் பைத்மாண்ட் சமஸ்தானாதிபதி விக்டர் எமான்யூல் மூலமாக பிரான்சு தேசத்துடனும் இங்கிலாந்துடனும் சமாதானஞ் செய்துகொள்ள முன்வந்தான். கிரிமியன் யுத்தம் உண்டாயிற்று. இங்கிலாந்துக்குச் சகாயமாக காவோர், பைத்மாண்டு நகரினின்றும் படையொன்றை யனுப்பினன். இதாலி தேசத்தின் விடுதலைக்கு இங்கிலாந்து, பிரான்சு தேசங்களின், உதவி அவசியம் என்பதை யுணர்ந்து, அவர்களுடைய தயவைச் சம்பாதிக்க காவோர் படையொன்றையனுப்பினன். மாஜினி முதலானோர் அதை ஒப்புக்கொள்ளவில்லை. ஒரு தேசத்தின் விடுதலைக்கு அத் தேசத்தார்களே பாடுபட வேண்டுமென்றும், அன்னிய அரசாங்க மொன்றை யொழிக்க இன்னொரு அன்னிய அரசாங்கத்தைத் துணை கொள்வது நன்மையல்லவென்றும் மாஜினி கூறினன். மாஜினி இதாலி நாட்டுத் தெற்கு சமஸ்தானங்களில் கலகத்தை யுண்டாக்க ஏற்பாடு செய்தான். கலகம் உண்டாக்குவதும் இரகஸியமாகக் கொலை செய்வதும் தர்ம மென்றே மாஜினி எல்லா காலத்திலும் அங்கீகரிக்கும்படி கூறவில்லை. பழிக்குப் பழி வாங்கவேண்டு மென்னும் எண்ணத்தினலோ அல்லது தீராப் பகைமையைத் தீர்த்துக் கொள்ளவேண்டுமென்னும் எண்ணத்தினலோ இர

கஸிய கொலையை ஒருவன் செய்யக்கூடாதென்றும், ஒருவன் அநியாயமாகவும் குரூரமாகவும் சதா பலரை வருத்தி வருவானேயானால், அப் பலருடைய நன்மைக்காக அவனை இரகஸியமாகக் கொலை செய்வது தர்மமென்று மாஜினி தெரிவித்துள்ளான். இது விஷயமாக மாஜினிக்கும் மாஜினியின் மித்திரரான மானிங் என்பவருக்கும் பெருத்த வாதமுண்டாகி, மானிங் என்பவர், மாஜினியின் கொள்கையை வெறுத்து, மாஜினி தேசத்துரோகி என்றும் கூறினர். மாஜினியினுடைய இராஜீய கொள்கையை அக்காலத்தில் சிலரே அறிந்தார்களேயன்றி பலர் அறிய முடியவில்லை. இதாலி தேசத்துப் பல இராஜீய அறிஞர்களும் மாஜினியினுடைய இராஜ தர்மத்தையும் பிரஜா தர்மத்தையும் அறியவில்லை. மாஜினியின் அரசியல் தர்மமும், மதவழிபாடும், சமுதாய ஊழியமும், மனித தர்மமும், அக்காலத்தில் ஐரோப்பாவி லுள்ளவர்களுக்குப் புதிதாகவே காணப்பட்டன. மாஜினியினுடைய கொள்கையைப் பெரும்பாலும் மேனாட்டார் அறிய முடியாது. இவனுடைய கொள்கை அநேகமாகக் கீழ்நாட்டு சம்பிரதாயங்களை யொத்திருந்தது. மாஜினியின் 'கடமை' என்பது முக்கியமாக இந்தியர்களுடைய வார்த்தையும் கொள்கையுமாகும். எல்லா விஷயங்களிலும் மனிதன் முதன் முதல் கடமையை யறிந்து செய்யவேண்டுமென்பதே மாஜினியின் முக்கிய கொள்கை. பாரத நாட்டில் பண்டை காலந் தொட்டு வழங்கி வரும் பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ச்சுனனுக்கு 'கடமை' என்னும் விஷயத்தையே அடிக்கடி வற்புறுத்தி கூறியுள்ளார். 'கடமை' என்பதற்கு நாம் 'தர்மம்' என்று கூறிகிறோம். ஒருவ

னுடைய கடமையை பகவத் கீதை 'ஸ்வ தர்மம்' என்று கூறுகிறது. பிறர்களுடைய தர்மம் (கடமை) எவ்வளவு ஒழுங்காக அனுஷ்டிக்கப்பட்டுவந்த போதிலும், ஒருவனுடைய சொந்த தர்மம் சரிவர அனுஷ்டிக்கப்படாமலிருந்தாலும், அது சிரேஷ்டமானதென்று கீதை கூறுகிறது. மாஜினி, இதாலிதேசத்திலுள்ள சில முக்கியமான ஊர்களுக்குச் சென்று நிலைமையை யறிந்தான். ஜனங்கள் குடியரசு விஷயமாகத் தீவிர கொள்கையைப் பெறவில்லையென்றும், காவோர் முதலானோருடைய போதனையால், பல பிரஜைகள், முடியரசையும் பிரபுத்துவ ஆட்சி முறையையுமே பெரிதாகக்கருதி வருகின்றனரென்றும் மாஜினி கண்டான். தொழிலாளர்கள் மட்டும் மாஜினியினுடைய இராஜீய கொள்கையில் சற்றே ஈடுபட்டிருந்தார்களேயன்றி மற்ற ஜனங்கள் பெரும்பாலும் காவோரையும் விக்டர் எமான்யூலேயுமே பின்பற்றி யிருந்தனர். ஜினோவாவில் பிரஜாதிபத்யக் கட்சியினர் பைத்மாண்ட் சமஸ்தானத்திலுள்ள பிரபுக்கட்சியினரையும் அரசாங்கத்தையும் எதிர்த்து குடியரசு ஸ்தாபிக்கக் கலகம் விளைத்தனர். அக்கலகத்தில் மாஜினியும் அவனைச் சேர்ந்தவேறு சிலரும் கலகத்தில் சேர்ந்த குற்றத்திற்காக அரசாங்கத்தார் சிறைபடுத்த வரவே, மாஜினி, மாறுவேடங்கொண்டு அந்நகரை விட்டு மீண்டும் இங்கிலாந்து வந்து சேர்ந்தான். மாஜினியின் கட்சியினர்கள் தோல்வியடைந்ததற்குக் காரணம் காவோர் முதலான மிதவாதிகளினுலேயே யென மாஜினி எண்ணினான். மாஜினி மிக்க மனவருத்தத்துடன் லண்டன் மாநகரில் வசித்து வந்தான். என்றாலும் தன் முயற்சியை மட்டும் விடாமல் பழையபடியே தன் கொள்

கையைப் பரவச்செய்து வந்தான். 1859-ம் ஆண்டில் காவோர் ஆஸ்திரிய அரசாங்கத்துடன் போர்புரிய எண்ணினான். பைத்மாண்ட் ஜனங்கள் ஆஸ்திரிய அரசாங்கத்தை யொழிக்க வேண்டுமென்னும் நோக்கத்தைக்கொண்டு மும்முரமாகக் கிளம்பினர். பிரஜாதிபத்யக் கட்சியினர் வெகு ஆத்திரத்துடன் முன்வந்தனர். பல தொண்டர் படைக் கூட்டம் வந்து சேர்ந்தது. கரிபால்டி அவர்களுக்குத் தலைமை வகிக்க முன் வந்தான். பிரஜாதிபத்யக் கட்சியினர்களும் விக்டர் எமான்யூலின் தலைமையை யங்கீகரித்து இதாலி தேசத்தின் விடுதலைக்குப் பிரபுக்கட்சியினர்களுடன் சேர்ந்து போர்புரிய வந்தனர். மாஜினியும் இதாலி தேசத்தின் விடுதலைக்காகவும் ஐக்கிய சமுதாய வாழ்க்கைக்காகவும் பிரபுக்கட்சியினர்களும் பிரஜாதிபத்யக் கட்சியினர்களும் ஒன்று சேர்ந்தனரெனத் தன் ஆங்கில நண்பர்களிடம் கூறிவந்தான். என்றாலும் பிரன்சுக்காரர்களுடன் சேர்ந்து அவர்களுடைய உதவியை இதாலிதேசம் நாடியிருப்பதில் மாஜினிக்கு இஷ்டமில்லை. ஓர் அன்னிய அரசாங்கத்தைத் துணைகொள்வது தேச மரியாதைக்கும் தன் மதிப்புக்குமே குறைவென்பதே மாஜினியின் அபிப்பிராயம். மதேனா, பார்மா, ரோமக்னா முதலிய சமஸ்தானங்கள் தங்கள் சமஸ்தானாதிபதிகளைக் கீழிறக்கி பைத்மாண்ட சமஸ்தானாதிபதி விக்டர் எமான்யூலுடன் சேர்ந்து போர் புரிய வந்தன. டஸ்கனியும் அவ்வண்ணமே செய்தது. விக்டர் எமான்யூல் தன் படையுடன் லம்பார்டியையும் வெனீஷியாவையும் கைப்பற்றிக்கொண்டான். இதாலிதேசத்தின் மத்திய பிரதேசங்களை பிரஜாதிபத்யக் கட்சியினர் நன்கு தாக்கும்படியும் அப்

பிரதேசங்களிலுள்ள போப் அதிகாரத்தை முறியடிக்கும்படியும் விக்டர் எமான்யூல் கட்டளையிட்டான். நேபல்ஸ் சமஸ்தானத்திலுள்ள தன் நண்பர்களை இதாலிதேசத்துத் தென்பாகங்களைக் கைப்பற்ற அவன் உத்திரவு செய்தான். அச்சமயத்தில் விக்டர் எமான் யூலுக்கு உதவியாயிருந்து போராடின பிரான்சு தேசாதிபதி லூயி நெபோலியன் பிரஷ்யாவின் படையெழுச்சிக்குப் பயந்தும், பிரஜாதிபத்ய உணர்ச்சியின் வேகத்திற்குப் பயந்தும், உடனே, போரை நிறுத்தி ஆஸ்திரியாவுடன் சமாதானஞ் செய்து கொண்டான். வெனிஷியாவை ஆஸ்திரியாவுக்கும் மத்திய இதாலியைப் பழையபடி சமஸ்தானாதிபதிகளுக்கும் கொடுக்கும்படி சமாதானஞ்செய்து கொண்டான். மாஜினி ஏற்கனவே நினைத்தபடி முடிந்தது. அன்னிய அரசாங்கத்தின் உதவியை நாடினவர்கள் எவரும் சரிவர சௌக்கியப் படுவதில்லை. பிரான்சும் ருஷியாவும் இரகஸியமாக உடன்படிக்கை யொன்று செய்து கொண்டு ஐரோப்பாவையே பங்கிட்டுக்கொள்ள உத்தேசித் திருப்பதையும் அறிந்து மாஜினி இங்கிலாந்தில் சுயநிர்ணய சமாஜமொன்றை யேற்படுத்திப் பல தேசத்தவர்களை அங்கத்தினர்களாகச் சேர்த்தான். மாஜினி மீண்டும் இங்கிலாந்தினின்றும் புறப்பட்டு பிளாரன்ஸ் நகர்வந்து இதாலிக்கு வந்துசேர எண்ணினான். பைத்மாண்ட் அரசாங்கத்தார் மாஜினியின் மீது இருந்த தடையுத்திரவை நீக்கவில்லை. இதாலி தேசத்தின் விடுதலைக்குப் பாடுபட்டு உழைத்துவரும் தேசாபிமானியை இதாலி சமஸ்தான மொன்று வரவொட்டாமற்படி தடுப்பது சுதந்தரத்தின் லட்சணமல்லவெனப் பல ஆங்கில நண்பர்கள் பத்திரிகை

களுக்கு எழுதினர். ஆனால், ரிகாஸோலி மாஜினி யைத் தெரியவொட்டாமல் இரகஸியமாகத் தன் மாளி கையிலேயே வைத்திருந்தார். ரிகாஸோலி மாஜினி யின் கொள்கையை யாதரிப்பவரில்லை. ஆனால், மாஜினி யின் தேசாபிமானத்தையும் மேலான குணத்தையுங் கண்டு அவனைப் பெருமையுடன் பாராட்டி வந்தான். மாஜினியும் அவருடன் இராஜீய விஷயங்களில் ஒற் றுமை கொள்ளாவிடினும் அவருடைய அறிவையும் பரிசுத்தமனதையுங் கண்டு பரமபக்தி காட்டிவந் தான். பிரபுக் கட்சியினர்கள் இதாலியின் ஐக்கியத் திற்குப் பாடுபடும் வரையில் மாஜினி தன் பிரஜாதி பத்ய உணர்ச்சியைப் பிரசுரஞ்செய்யவில்லை யென் றும் அவருக்கு வாக்குத் தத்தஞ் செய்தான். மாஜினி தன்னுடைய கொள்கையை எத்தகைய கஷ்டகாலங் களிலும் விட்டுக் கொடுத்ததில்லை. ஆனால், தான் விட் டுக் கொடுப்பதினால் ஒருக்கால் இதாலிதேசம் சமு தாய ஐக்கியத்தையும் சுதந்தரத்தையு மடைவதா யிருந்தால் போதுமென்று கொண்டு தன் கொள் கையைச் சற்று விட்டுக்கொடுப்பதாக வாக்குத் தத் தஞ் செய்தான். மாஜினி சதா ஐக்கியத்திலேயே மனதைச்செலுத்திவந்தான். இதாலிதேசத்து சமஸ் தானங்கள் ஐக்கியத்திற்கு உதவிசெய்யாமற்போனால், பிரஜைகள் தாங்களே தங்கள் உதவியைக் கொண்டு ஐக்கியத்தை ஸ்தாபிப்பர் என விக்டர் எமான்யூலுக்கு மாஜினி கடிதமொன்றை எழுதியனுப்பினான். டஸ் கனியையும் ரோமக்னாவையும் ஆதாரமாகக் கொண்டு போப் சமஸ்தானங்களைத் தகர்த்துப் பிறகு நேபல்ஸ் சமஸ்தானத்தையும் அதன்தென்பாகங்களையும் தகர்க்க வேண்டுமென்று மாஜினி கூறினதைப் பல பிரஜாதி

பத்யக் கட்சியினரும் மிதவாதிகளும் அங்கீகரித்தனர். போப் சமஸ்தானத்தைக் கைப்பற்றுவதினால் மதசுதந்தரம் உண்டாகுமென்றும் எண்ணியே முதலில் அச் சமஸ்தானத்தைத் தாக்க அனைவரும் சம்மதித்தனர். ரோமாபுரியில் பிரன்சுக்காரர்கள் படைகொண்டுபோப் மதகுருவுக்காகக் காத்துவந்தனர். அங்ஙனம் பிரன்சு படைவீரர்கள் ரோமாபுரியைக் காத்துவருவது அதர்மமென இங்கிலாந்தும் ஜர்மெனியும் கூறும்படி மாஜினி தன் ஆங்கில நண்பர்களுக்கும் ஜர்மென் சிநேகிதர்களுக்கும் தெரிவித்தான். ஒரு குடும்பச் சண்டையில் பிறர் தலையிடாமலிருக்கும் தர்மத்தைக் கைக்கொள்ளும்படி நெபோலியனிக்குக் கூற மாஜினி பல ஏற்பாடுகள் செய்தான். அதற்குள்ளாக, ஸிஸிலித்தீவில் இராஜீய புரட்சியொன்றை யுண்டாக்கத் தன் நண்பர்களிடம் தெரிவித்தான். மத்ய இதாலியாவில் படையெடுத்து வரும்படி கரிபால்டிக்கு மாஜினி சொல்லியனுப்பினான். மதேனாவைச் சேர்ந்த பாரினி என்பவனும் மாஜினியின் ஏற்பாட்டுக்குச் சம்மதித்தான். ரிகாஸோலியைச் சேரும்படி மாஜினி கேட்டும், அவர் இராஜீய நிலைமையின் கஷ்டங்களையெடுத்துக் கூறினார். மாஜினி போப் (மதக்குரு) அவர்களுடைய சமஸ்தானத்தின்மீது படையெடுப்பதினால், ஐரோப்பாவிலுள்ள கத்தோலிக் அரசாங்கத்தார் அனைவரும் ஒன்றுபட்டு பல துன்பங்களைச் செய்ய நேரிடுமென்றும், அதனால், இதாலியின் நிலைமை இப்பொழுதைவிட இனி அதிக நெருக்கடியாகப் போய்விடுமென்றும், பிரான்சு ஆஸ்திரியா முதலிய தேசங்கள் ஒன்று சேர்ந்து இதாலியுடன் போர்புரிய முன் வந்தாலும் வரும் என்றும் கூறி

மாஜினியின் வார்த்தைக் கிணங்கவில்லை. காவோர் மீண்டும் பைத்மாண்ட் சமஸ்தானத்திற்கு மந்திரியானன். ஆஸ்திரியாவைத் தொலைக்கச்செய்த பிரயத்தனம் முதலியன பாழாய்ப்போகவே, காவோர், ஆஸ்திரியர்களால் வருந்திவரும் ஹங்கேரி நாட்டார்களைத் தூண்டிப்போராட சூழ்ச்சி செய்தான். ஹங்கேரி ஆஸ்திரியாவுடன் போர்புரிந்து வருகையில், தான் தன் சைன்னியத்துடன் வியன்னு நகர்மீது படையெடுத்துச் செல்வதென்று காவோர் தீர்மானித்தான். காவோர் நல்ல இராஜதந்திரி. சமயோசித புத்தியும், சமயத்திற்குரிய அனுஷ்டானமுங் கொண்டவன். காவோரின் எண்ணத்தையறிந்த நெபோலியன் நைஸ், ஸேவால் பட்டிணங்களைக் கொடுத்தால், ஆஸ்திரிய ஆட்சியின்றி சமஸ்தானங்களைச் சுதந்தரப்படுத்திக் கொடுப்பதாக வாக்களிக்கவே, காவோர் அதற்கு இணங்கினன். காவோருடைய காரியத்தையறிந்த மாஜினி மிக்க வருத்தத்துடன் இதாலி சமுதாய ஐக்கியத்திற்கு அவன் பெரிய முட்டுக்கட்டைபோலானன் எனக்கூறி வந்தான். கரிபால்டியோ தன்னுடைய படைவீரர்களைக்கொண்டு ஸிஸிலியில் கலகஞ் செய்து ஊர் ஊராகக் கைப்பற்றி வந்தான். ஸிஸிலியில் பிரஜாதிபத்யம் ஸ்தாபிக்கப்பட்டது. கரிபால்டி இதாலியின் தென்பாகத்திலும் தன்னுடைய வீரர்களைக் கொண்டு நேபல்ஸ் முதலிய சமஸ்தானங்களையும் தகர்த்து பிரஜாதிபத்யதை ஸ்தாபித்து வந்தான். ரோமாபுரியிலுள்ள போப்புடனும் அவருடைய சமஸ்தானத்துடனும் போர்புரியத் தயாராக கரிபால்டியிருந்து வந்தான். அவ்வேளையில் காவோர், கரிபால்டி போப் சமஸ்தானத்தின்மீது படையெடுத்தால் பிரான்

சுடன் சண்டைபோட நேரிடுமென்று கண்டு படை யெடுக்காதபடி பல சூழ்ச்சிசெய்து அவனைத் தன் பக்கத்திற் சேர்த்துக்கொண்டான். கரிபால்டியின் வெற்றியைக்கண்ட மாஜினி சந்தோஷங்கொண்டு பிளாரன்ஸ் நகரில் தொண்டர் படைகளைத்திரட்டி எல்லைப் புறத்தைத்தாண்டி பரூகியாமீது படையெழுச்சி கொள்ளத் தயார் படுத்தி வந்தான். கிரிஸ்பியும் பர்டாணியும் இதாலியின் தென்பாகங்களில் காவோருக்கு எதிராகக் கட்சியை ஸ்தாபித்துப் போராடி வந்தனர். மாஜினியும் நேபல்ஸ் வந்து சேர்ந்தான். கரிபால்டி தன் படையைத்திரட்டி மேனேக்கிச் செல்வானுனல் இன்னும் ஐந்து மாதத்திற்குள்ளாக இதாலியில் ஐக்கியமுண்டாகும் என்றும், கரிபால்டி அப்படி செய்யத் தவறினால், நாட்டில் உறக்கமும், பின்னர் கலகமும் கடைசியாக ஐக்கியமும் உண்டாகும் என்றும் மாஜினி தன் ஆங்கில நண்பர்களுக்குக் கடிதமெழுதி வந்தான். மாஜினியின் எண்ணம் வீணாயிற்று. கரிபால்டி தன் படையுடன் முன் நோக்கவில்லை. காவோர் பிரயத்தனம் பலப்பட்டது. இதாலியின் ஐக்கியம் மீண்டும் ஸ்தாபிக்கப்படவில்லை. நாட்டில் சமாதானம் ஒருவாறு ஏற்படுத்தப்பட்டது. புதிய சில சீர்திருத்தங்கள் உண்டாயின. மாஜினியின் இருப்பு இதாலிய தேசாபிமானர்களுக்குள்ளும் சமுதாயத்தினுள்ளும் கட்சியுண்டாக்குமென்று சிலர் தெரிவித்து மாஜினியை நாட்டைவிட்டுப் புறப்பட்டுப்போகக் கூறினர். ஆனால் கரிபால்டியோ, மாஜினி விஷயமாகப் பரிந்துபேசி காவோர் கட்சியினர்களின் எண்ணத்தைக் கண்டித்தனர். மாஜினியும் துக்க வருத்தத்துடன் கரிபால்டியுடன் இரவெல்லாம் உட்கார்ந்து ரோமாபுரியையும்

வெனிஸ் நகரையும் கைப்பற்றப் பல ஏற்பாடுகள் செய்து மாஜினி நேபல்ஸ் நகரைவிட்டுச் சென்றான். இதாலி தேசத்து மிதவாதிகளின் நடத்தையையும் லூயி நெபோலியன் வஞ்சனையையுங்கண்டு மாஜினி மிக்க வருந்தினான். இதாலியின் ஐக்கிய பாவம் இனி உண்டாவது எந்நாளோவென்னும் ஏக்கமும் மாஜினிக்கு உண்டாயிற்று. இதாலி தேசப்பெருமையும் கீர்த்தியுங்கொண்டு உலகத்து தேசங்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக யிருக்குமென்று எண்ணின எண்ணம் நிறைவேறுங் காலம் எப்பொழுதோவென்று மாஜினி அடிக்கடி கலங்குவான். இதாலி தேசத்தினிடத்தில் மாஜினி வைத்த அன்பு இவ்வளவவ்வளவல்ல. ஒழிந்த நேரங்களில் தேசத்தைப்பற்றி நினைப்பதும், கஷ்டமில்லாத காலங்களில் தேசத்திற்கென்று பாடுபட முன் வருவதுமான தேசாபிமானத்தை மாஜினி கொள்ளவில்லை. இரவும் பகலும் சதா தாய்நாட்டைப் பற்றிய நினைவே இவனுக்கிருந்தது. உண்பதும் உறங்குவதும் இவனுக்கு இரண்டாம் பக்ஷமேயாம். இதாலி உண்மையாக டாண்டியின் தேசாபிமானத்தையும் தத்துவ உணர்ச்சியையுங் கொள்ளாமல் மைக்கவல்லியின் இராஜ தந்திரத்தையே கொண்டிருந்ததை மாஜினி கண்டு மனம் வருந்தினான். ஐரோப்பாவிலுள்ள பல தேசங்கள் அநேகமாக மைக்கவல்லியின் இராஜ தந்திரத்தையே பின்பற்றுகின்றன. மைக்கவல்லி குடியரசு உணர்ச்சியைக் கொண்டவரல்ல; அவர் முடியரசைப் பின்பற்றுபவர். நல்ல அரசியல் ஞானி, அர்த்த சாஸ்திர நிபுணர், இராஜ்ப பரிபாலன முறைகளைப்பற்றியும் அரசனுடைய நிர்வாகக்கிரமங்களைப்ப்றறியும் அவர் கூறியுள்ளார். ஐரோப்பாவில்

உண்டான சிறந்த இராஜ தந்திரிகளில் மைக்கவல்லி மிகவும் முக்கியர். இதாலி தேசத்தவர்களுக்கு உயர்ந்த தர்மமும், நீதி முறையும் மத உணர்ச்சியும், சுதந்தர அவாவும் இல்லையென்றே மாஜினி கூறிவருவான். நாட்டில் உத்தியோகங்களுக்கு வேட்டையாடுபவர்களும் சுய நலங்கருதி வருபவர்களுமே நிரம்பினர்களென்று மாஜினி கூறுவான். இதாலியின் வடபாகத்திற்கும் தென்பாகத்திற்கும் ஏற்பட்ட பகைமையையும் பைத்மாண்ட் சமஸ்தானத்தின் சுய நலத்தையும், மற்ற சமஸ்தானங்களில் நடக்கும் குரூரங்களையும் ஜனங்களின் அவிவேகத்தையுங் கண்டு மாஜினி மனோவியாகூலங்கொண்டு வருந்தி வந்தான். இதாலியின் ஐக்கியத்திற்கும் உண்மையான தத்துவ வழிபாடுகளுக்கும் மத உணர்ச்சிக்கும், இராஜீய சுதந்தர உரிமைக்கும், ரோமாபுரியையும் வெனிஸ் நகரையும் கைப்பற்றுதலே இன்றியமையாததெனை மாஜினி அறிந்தான். வெனிஸ் நகரத்துக்காகவும் ரோமாபுரிக்காகவும் பிரஜாதி பத்யத்திற்காகவும் என்னுடைய உயிரைத் தத்தஞ்செய்ய வேண்டியதாயிருக்கிறது; ரோமாபுரியைக் கைப்பற்றுவதிலிருந்து போப் அரசாங்கம் வீழ்ந்ததெனக் கொள்ளவேண்டும். போப் அரசாட்சியின் வீழ்ச்சியே புதிய மத உணர்ச்சியின் உதயத்திற்கு அறிகுறி. வெனீஷியாவின் சுவாதீனம் ஆஸ்திரியர்களின் பலத்தையொடுக்கும். ஐரோப்பாவின் மத்திய, கீழ்தர ஐரோப்பா பாகங்களின் விடுதலைக்கும் இதாலி தேசத்தின் விடுதலையே காரணம். இதாலி தேசத்தின் விடுதலையிலிருந்தே மத்திய ஐரோப்பாவுக்கு விடுதலையுண்டாகப் போகிறதென்பதைக் கடவுள் சங்கல்பித்துள்ளார். நம்மை நாம் விடுதலை செய்துகொண்

டால் பிறர்களை நாம் செய்ய முடியும். நாம் உயர்ந்தவர்களாக ஆகவேண்டும்; இலதேல் இறந்து சாகவேண்டும், என்று மாஜினி தன் நண்பன் ஒருவனுக்குக் கடிதம் எழுதினன். உண்மையில் கரிபால்டியைவிட மாஜினி புத்திசாலியே. பலாத்காரத்தைக் கொண்டு அந்நகரங்களைக் கைப்பற்ற முயன்ருல் கட்டாயம் ஆஸ்திரியாவுடனும் பிரான்சுடனும் சண்டைசெய்ய நேரிடுமென்பதை மாஜினி உணராமலில்லை. பைத்மாண்ட் சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்களைவிட மாஜினியின் தேசாபிமானம் மிக்க பரந்தது. பிரன்சுக்காரர்களை ரோமாபுரியினின்றும் அப்புறப்படுத்த பொதுஜன அப்பிராயத்தைப் பலப்படுத்த எண்ணினன். பொதுஜன வாக்கின் வேகத்தாலே பிரன்சுக்காரர்களைப் போகச் செய்யலாமென்று மாஜினி நம்பினன். பிரன்சுக்காரர்களின் துணையில்லாமலே இதாலி தனியாக நின்று ஆஸ்திரியர்களுடன் போராட முடியுமென்று மாஜினி பூர்ணமாக நம்பி வந்தான். காவோர் முதலானேரும் கடைசியாக மாஜினியின் அபிப்பிராயத்தைத் தழுவினர். வெனிஷியாவும் பால்கன் தேசமும் ஹங்கேரியும் ஒன்று சேர்ந்து தாக்கினல் ஆஸ்திரியா கட்டாயம் தோல்வியடைவதுடன் துருக்கியும் கூட தோல்வியடையும் என்று மாஜினி கூறுவான். ஏனெனில், ஆஸ்திரியா கொடுங்கோன்மையா யிருப்பது போலவே துருக்கியும் கொடுங்கோன்மையா யிருப்பதால் ஆஸ்திரியாவுடன் அதுவும் அழிய வேண்டுமென்பது மாஜினியின் எண்ணம். 1863-ம் ஆண்டில் போலாந்து வாசிகள் சுதந்தரத்திற்காகப் புரட்சி செய்வதைக்கண்ட மாஜினி முன்னினும் அதிகமாக இதாலியைப்பற்றி ஆத்திரப்பட்டான். இங்கிலாந்

தில் போலாந்தார்களுக்குச் சகாயமாக உதவிபுரிந்து ஹைட்பார் என்னுமிடத்தில் ஒரு பெரிய மகா நாடு கூட்டவும் தீர்மானித்தான். முடியரசே சகல காரியங்களுக்கும் துன்பத்தை யுண்டாக்குவதென அடிக்கடி இவன் கூறிவந்தான். பிரஜாதிபத்யக் கட்சியினர்களைப் பலப்படுத்தி அவர்களுக்கு வேண்டிய உதவியை இங்கிலாந்திலிருந்து இவன் செய்து வந்தான். என்றாலும் தன்னுடைய வேலை அதிகமாகப் பயன் கொடுக்காததைப்பற்றி யோசித்துக் கொஞ்சகாலம் பிரஜாதிபத்ய உணர்ச்சியை மனதிலேயே வைத்துக் கொண்டு, பிரஜாதிபத்ய உணர்ச்சியை யங்கீகரிக்கும் முடியரசைத் தற்சமயம் அங்கீகரித்து, நாட்டின் அபிவிர்த்திக்குரிய திட்டங்களை இவன் தயாரித்து வந்தான். நாட்டில் பாலர்கள் தொண்டர்படையில் சேர்ந்து தேச ரட்சணைக்காகப் பாடுபட இச்சாசேகப் படையொன்றைத் திரட்ட முயற்சி செய்தான். ரெயில்வே பாதைகள், சுரங்கங்கள், மாதாக்கோயில் நிலங்கள், தொழில் ஸ்தாபனங்கள், ஐக்கிய நாணயச் சங்கங்கள், சுயஆட்சி ஸ்தாபனங்கள், வர்த்தகச் சங்கங்கள் ஆகிய இவைகளை நாட்டின் அபிவிர்த்தியைக் கொண்டு சீர்திருத்தமுன் வந்தான். இங்கிலாந்தில் கொஞ்சகாலமே வசித்து வந்தான். இங்கிலாந்தில் இவன் தேகம் மெலினமடைந்தது. அடிக்கடி சுருட்டு பிடித்து வந்தான். வியாதி வர எத்தனித்தது. உணவு சரியாகயில்லை. இவனுக்காக இதாலியில் நிதியொன்று சேர்க்கப்பட்டது. இங்கிலாந்தில் இவன் பொருட்டு சேகரிக்கப்பட்ட 500 பவுனும் வெனிஸ் நகர விடுதலைக்காக இவன் கொடுத்துவிட்டான். அமெரிக்காவின் சுதந்தரத்துக்காகப் பாடுபட்ட அப்ரஹம் லின்

கன் என்பவர் கொல்லப்பட்டதைக் கேள்வியுற்ற மாஜினி மிக்க வருந்தினுன். இங்கிலாந்து தேசத்தில் மாஜினி மிக்க கீர்த்திவானுக ஆயினுன். வெனிஷியாவை எப்படியாகிலும் கைப்பற்றுவதற்கே தன் பொழுதையெல்லாம் மாஜினி செலவழித்து வந்தான். கரிபால்டியும் மாஜினியுடன் சம்மதித்தான். என்ருலும் மாஜினியும் கரிபால்டியும் ஒருவரை யொருவர் அலட்சியமாகவே நினைத்து வந்தனர். கரிபால்டி சாமானியமானவனென்றும், இராஜீயத் துறையில் பரிபக்குவ பிரஜாதிபத்ய உரிமையுள்ளவனல்ல வென்றும் மாஜினி நினைத்தான். மாஜினியின் எண்ணமெல்லாம் வெறும் பேச்சே யன்றி அனுஷ்டானத்திற்குரியதல்ல வென்று கரிபால்டி நினைத்தான். கரிபால்டியும் மாஜினியைப்போலவே இதாலிதேசத்தின் ஐக்கிய சமுதாயத்தில் நம்பிக்கைகொண்டிருந்தான். கரிபால்டியோ அரசனிடத்தில் நம்பிக்கையுள்ளவனல்ல. நடந்து வரும் சமஸ்தான அரசாங்கத்துடன் கலந்து இதாலியின் விடுதலைக்கு பாடுபடவேண்டு மென்று கரிபால்டி நினைத்தான் ; மாஜினியோ ஒருவருடைய உதவியின்றித் தனியே ஜனங்களாகப் பாடுபடவேண்டுமென்று எண்ணினுன். கரிபால்டியோ, யுத்ததந்திர மறிந்தவனுததால், ரோமாபுரியைக் கைப்பற்ற அந்நகர்மீது தன் படையைச்செலுத்தாமல் காவோர் வார்த்தைக்கிணங்கி அந்நகரைக் கைப்பற்றும விருந்தான். இப்படியிருக்க, இதாலியில் பிரஜாதிபத்யக் கட்சியையே யில்லாமல் தொலைக்கச் சில மிதவாதிகள் மிங்கட்டி என்பவனைத் தலைமை கொண்டு பாடுபட்டு வந்தனர். ஆனுல், அவர்களுடைய காரியம் ஒன்றும் பலிதமாகவில்லை. எந்நாட்டிலும் மிதவாதிகளின் வார்த்தையும் வழிபாடும்

பலிதமாகாது. ஏனெனில், அவர்கள் மகா ஜனங்களின் உணர்ச்சியைக்கொண்டு பொதுஜன அபிப்பிராயத்தை யொட்டிப் போகக்கூடியவர்களல்ல. ரிகோஸலி மாஜினியின் மீது இருந்த குற்றத்தை நீக்கி மன்னிப்பு செய்திருப்பான். 1857-ம் வருடத்திய தண்டனை மாஜினியின்மீது இருந்ததை காவோரும் ரத்து செய்யவில்லை. காவோருக்குப் பிறகு ரிகோஸலியே மந்திரியாக வந்தார். ஆனால், அவர், உடனே நீக்கப்பட்டார். நிற்க, கரிபால்டி இதாலியை எப்படியாகிலும் விடுவிக்கவேண்டுமென்று முன்வந்தான். 'ரோமாபுரியைக் கைப்பற்றுவது அல்லது இறப்பது' வேறு இல்லையென்ற திடபுத்தியுடன் கரிபால்டி முன் வந்ததைக்கண்ட மாஜினி, அவனுக்குதவி செய்வது தன் கடமையென்று கொண்டு உடனே கரிபால்டி நிதியென்பதாகப் பணம் திரட்டினான். ஸிஸிலியிலிருந்து கரிபால்டி தன் படையுடன் சேர இவன் புறப்பட்டான் என்று மாஜினி கேள்விப்பட்டதும், லண்டன் நகரை விட்டு கரிபால்டியுடன் சேர இவன் புறப்பட்டான். பாதிதூரம் வந்ததும், கரிபால்டி தன் இதாலி தேசத்தவர்களின் குண்டினால் அடிபட்டுக் காயமடைந்தான் என்று கேள்வியுற்றதும், மாஜினிக்கு உண்டான விசனத்திற்கு எல்லையில்லை. குழந்தைபோல வாய்விட்டு அழுதான். அரசாங்கத்தைப் பன்முறை திட்டி பிரஜாதிபத்யக் கொடியை இதாலியில் நாட்டுவதாக மாஜினி உடனே சபதஞ் செய்து கொண்டான். இந்நிலைமையில் சிலநாளிருந்தபிறகு, ஒருநாள் திடீரென்று, விக்டர் எமான்யூவிட மிருந்து மாஜினிக்குக் கடிதமொன்று வந்தது. மாஜினியின் உதவியைத் தான் நாடுவதாகவும், இதாலிதேசத்தின் விடுதலைக்கு இருவரும்

சேர்ந்து உழைக்கவேண்டுமென்பதாகவும் அவன்எழுதி யிருந்தான். எமான்யூலும் ஆஸ்திரியாவைத் துவே ஷித்தான். மாஜினிக்கும் மன்னனுக்கும் வெகு நாள் வரை கடிதப்போக்கு நடந்துவந்தது. மாஜினி சற்றே னும் மன்னனுக்கு இணங்கவில்லை. கடைசியாக 'மாஜினி தன் பிரஜாதிபத்யக் கட்சியினருடன் வெனிஷியாவில் ஒரு புரட்சியை யுண்டுபண்ண வேண்டுமென்றும், அதற்கு அரசன் ஆயுதங்களையும் மற்ற யுத்த சாமான் களையும் கொடுக்க வேண்டு மென்றும், இரு திறத்தா ரும் ஒன்று சேர்ந்து ஹங்கேரியிலாவது அல்லது கலிஷியாவிலாவது பெருத்த கலகத்தை மூட்டி ஆஸ் திரியாமீது போர் தொடக்கஞ் செய்யவேண்டுமென் றும் மாஜினியும் விக்டர் எமான்யூலும் ஒப்பந்தஞ் செய்து கொண்டனர். அவ்வொப்பந்தம் நீடிக்க வில்லை. மன்னனுடைய மனதைக் கலைத்து மாஜினி யுடன் சேர வொட்டாமற்படி பலர் செய்தனர். பைத் மாண்ட் மந்திரிகள் மாஜினிக்கு விரோதமாகப் பல சூழ்ச்சிகள் செய்து வந்தனர். விக்டர் எமான்யூல் மாஜினியை விட்டுவிட்டு கரிபால்டியுடன் சேர இச்சித் தான். கரிபால்டியோ இங்கிலாந்துக்குப் போக ஆயத் தஞ் செய்து வந்தான். இங்கிலாந்தில் பலர் கரிபால் டியைக் காண அவா கொண்டதின்பேரில் கரிபால்டி அவர்களைத் திருப்தி செய்யப் புறப்பட்டான். மாஜினி யும் இங்கிலாந்துக்குப் புறப்பட்டான். அயில் ஆப் ஒயிட் என்னுமிடத்தில் வசித்துவந்த ஸிலி என்பவ ருடைய கிரகத்தில் மாஜினி கரிபால்டியைச் சந்தித் தான். மாஜினிக்கும் கரிபால்டிக்கும் இதாலியைப் பற்றிய பல பேச்சுகள் நடந்தன. கரிபால்டி மாஜினி யைப்பற்றிப் புகழ்ந்து கூறுவதைக் கேள்வியுற்ற இங்

கிலாந்து அரசாங்கத்தார் பயந்து, உடனே கரிபால்டியை வழியனுப்ப வேண்டிய ஏற்பாடுகள் செய்தனர். கரிபால்டியைப்பற்றி இங்கிலாந்தில் பல பிரபு வம்சத்தினர்களும் கொண்டாடி வந்தமையால், அவன் மாஜினியைப் புகழ்ந்தது அவர்களுக்குச் சரிப்படவில்லை. ஏனெனில், மாஜினி பிரஜாதிபத்ய கட்சியைச் சேர்ந்தவனென்றும், கரிபால்டி பிரபுத்துவத்தை ஆதரிப்பவனென்றும், மாஜினி தன் காரியத்தை முடிக்க இரகஸியக் கொலைகளையும் கலகங்களையும் ஆதரிப்பவனென்றும் கரிபால்டி நல்ல யுத்தவீரன் என்றும் ஆங்கிலேயர்களிற் பலர் எண்ணியிருந்தனர். அவர்களுடைய எண்ணத்திற்கு மாருக கரிபால்டி மாஜினியைப் புகழ்ந்து கூறினது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, கரிபால்டி, இங்கிலாந்தை விட்டுச் சீக்கிரம் போக கவர்ன்மெண்டார் முயற்சித்தனர். கரிபால்டியோ விக்டரின் திட்டத்தை யங்கீகரித்தான். நிற்க, விக்டருடைய மந்திரிகளிற் சிலரும் மந்திராலோசனை பிரதிநிதிகளிற் சிலரும் வெனிஸ் நகரையும் ரோமாபுரியையும் கைப்பற்றத் தங்கள் பைத்மாண்ட் சமஸ்தானத்தில் ஒரு பகுதியைப் பிரன்சுக்காரர்களுக்குக் கொடுத்து ஏற்பாடு செய்ய முயற்சித்தனர். மாஜினிக்கோ சொல்ல முடியாத கோபம் உண்டாயிற்று. தேசத்தைத் தங்கள் சுயநலத்திற்காக விற்கிருர்களே யென்று வருந்திப் புலம்பி வந்தான். அதற்கெல்லாம் காரணமாயிருந்த கிரிஸ்பி என்பவனை மாஜினி வாயில் வந்தபடி தூற்றினுன். பிரஷ்ய அரசாங்கத்துடன் சமாதானஞ் செய்து கொள்ள ஏற்பாடாயிற்று. 1866-ம் ஆண்டில் சமாதான உடன்படிக்கை தயார் செய்யப்பட்டது.

மாஜினி உடன்படிக்கையைக் கண்டித்தான். ஜெர்மெனியர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளும்படி மாஜினியே 1851-ம் வருடத்திலும் 1867-ம் ஆண்டிலும் கூறியிருக்க, இப்பொழுது கண்டிப்பது முறையல்லவென்று பலர் மாஜினியை ஏளனஞ் செய்தனர். கடைசியாக பிரான்சுக்கு பைத்மாண்டின் ஒரு பகுதியையும் ஸர்டீனியா தீவையும் கொடுத்து வெனிஸ் நகரத்தைக் கைப்பற்ற ஏற்பாடு செய்தனர். மாஜினி அவ் வேற்பாடுகளுக்கு ஒப்பவில்லை. ஜனங்கள் பலர் மாஜினியின் பிரஜாதிபத்ய உணர்ச்சியைத் தாங்கிப் பாடுபட முன் வரவில்லையாயினும், மாஜினி யிடத்தில் அத்யந்த விசுவாசம் அவர்களுக்கு இருந்தது. நாற்பதினாயிரம் பேர் கையெழுத்திட்டு மாஜினியின் மீதிருந்த உத்திரவை ரத்துசெய்ய மகஜர் ஒன்று கொடுத்தனர். மிதவாதி கட்சியைச் சேர்ந்த மந்திரிகளும் சபையினர் சிலரும் சும்மா யிருந்தனர். தவிர, மெஸ்ஸீனா என்னு மிடத்தில் மாஜினியை அவ்வூர் ஜனங்கள் தங்கள் பிரதிநிதியாக நியமித்தனர். மிதவாதிகள் அந் நியமனத்தை யங்கீகரிப்பதில்லை. இவ்வாறு அவர்கள் மாஜினியை வெறுத்து வருவதைக் கண்ட ஜனங்கள் கோபங்கொண்டு கலகம் விளைக்க எத்தனித்தனர். ஆஸ்திரியர்களுடன் பைத்மாண்ட் சமஸ்தானாதிபதி யுத்தஞ் செய்யவு மிருந்தான். அந் நிலைமையில் ஜனங்கள் கலகம் செய்வது தனக்கு அநர்த்தத்தை விளைக்குமென்று கொண்டு உடனே மாஜினியின் மீதிருந்த தண்டனை யுத்திரவை ரத்து செய்தனர். மாஜினி இதாலி தேசத்திற்குள் வந்து தன் மனைவியுடனும் மித்திரர்களுடன் வசித்து வரலாயினான். இங்கிலாந்தில் இருக்கையில் மாஜினி, எங்ங

னம் இருந்தானே அம் மாதிரியாகவே எழுதுவதிலும் சம்பாஷிப்பதிலும் காலத்தைப் போக்குவான். அத் தருணத்தில் கரிபால்டி ரோமாபுரியைத் தாக்கினன். போப் அவர்களின் ஊர்களிற் சிலவற்றையுங் கைக் கொண்டான். பிரன்சுப் படைகள் கரிபால்டியின் வீரர்களைத் தாக்கின. மாஜினியின் பிரஜாதிபத்ய உணர்ச்சி கொஞ்சங் கொஞ்சமாக சைன்னியத்தைச் சேர்ந்த வீரர்களுக்குள்ளும் பரவிற்று. கரிபால்டியின் காரியத்திற்கு சமஸ்தானத்தைச் சேர்ந்த மிதவாதிகள் உதவி செய்யாமல் வஞ்சிப்பதை யறிந்து, மாஜினி ஜர்மெனி அரசியல் ஞானி பிஸ்மார்க்கின் உதவியை நாடினன். பைத்மாண்ட் சமஸ்தானத்தைத் தாக்கி, அதிலுள்ள யுத்த தளவாடங்கள், பீரங்கி மருந்துகள் முதலியவைகளை உபயோகப்படுத்த மாஜினி எண்ணி னன். அதற்காக மாஜினி ஸிஸிலித் தீவுக்குச் சென் ருன். ஸிஸிலித் தீவுக்குப் புறப்பட்டுப் போகையில், பிரஜாதிபத்ய கட்சியைச் சேர்ந்தவ னொருவன் மாஜினி யின் எண்ணத்தைப் பிரன்சு போலீஸார்களுக்குத் தெரிவித்து மாஜினிக்குத் துரோகஞ் செய்தான். நேபல்ஸ்கப்பலில் ஏறி பாலர்மோ என்னு மிடத்தில் மாஜினி இறங்கினதும் இவன் பிரன்சு போலீஸார்க ளால் கைதுசெய்யப்பட்டான். கயேடா என்னுமிடத் திற்குக் கொண்டு போகப்பட்டு இராஜீய கைதியாக இவன் பாவிக்கப்பட்டான். சிறை பட்டிருக்கையில், மாஜினி ஷேக்ஸ்பியர் நாடகங்களையும் பைரன் கவிதை களையும் படித்து வந்தான். அடிக்கடி சுருட்டு பிடிப்பான். நானுவித சுருட்டுகளைப் பிடித்து வந் ததால் இவனுக்கு நோய் உண்டாயிற்று. சில வாரங் கள் சென்ற பிறகு, மாஜினி விடுதலையடைந்தான்.

ரோமாபுரி கைப்பற்றப்பட்டது. ரோமாபுரிக்கு மாஜினி சென்றதும் ஜனங்கள் கூட்டங் கூட்டமாக வந்து இவனைப்பார்க்க வந்தனர். ரோமாபுரியில் பிரஜாதிபத்ய ஆளுகைக்குப் பதிலாக பிரபுத்துவ ஆளுகையிருந்தது. தன் எண்ணத்துக்கு மாறாகவும், பிரஜாதிபத்ய உணர்ச்சிக்கு விரோதமாகவும், ஒரு தேச கௌரவத்திற்கு எதிராகவும் பிரஞ்சுக்காரர்களின் உதவியால் ரோமாபுரியை பைத்மாண்ட் சுவாதீனப்படுத்தியதைக் கண்டு உள்ளம் கொதித்தான். படித்தவர்களையும், பணக்காரர்களையும் இனி நம்புவதில் பிரயோசனமில்லையென்று கண்டு தொழிலாளர்களுக்குப் பாடுபட மாஜினி முன் வந்தான். தொழிலாளர்களுக்குச் சங்கங்களை அங்கங்கே ஸ்தாபித்தான். அவர்களுக்கு சரித்திரமும் இராஜரீக சாஸ்திரமும் பொருளாதார சாஸ்திரமும் போதித்து வந்தான். புத்தகாலயங்களை அவர்களுக்குஸ்தாபித்தான். அவர்களுடைய குழந்தைகளுக்குப் பாடசாலைகளையும் இராப் பள்ளிக்கூடங்களையும் ஏற்படுத்தினான். அவர்கள் கடன் படாமலிருக்கவும், வீண்செலவு செய்யாமலிருக்கவும் ஐக்கிய நாணயச் சங்கங்களையும் கூட்டுறவு சங்கங்களையும் ஏற்படுத்தி உதவிபுரிந்து வந்தான். மாஜினி தன்னுடைய எண்ணத்தைப் பிரசாரஞ்செய்ய பத்திரிகை யொன்றை ஏற்படுத்தினான். இதாலி தேசத்து மகாஜனங்களுக்கு உதவியாகயிருக்க தேச சரித்திரமொன்றையும் தேசீய கல்வியின் திட்டமொன்றையும் எழுத உத்தேசித்தான். இவை ஈடேறவில்லை. இவன் இங்கிலாந்து தேசத்தில் மாதர்களின் இயக்கத்திற்கு ஆதரவாய் இருந்து வந்தான். மாதர்களின் உரிமையைப்பற்றி இதாலி தேசத்தவர்களுக்குக் கூறி வந்தான். இங்கிலாந்து தேசத்

தவர்களின் சுதந்தர உணர்ச்சியைப் பற்றியும், அவர்களுடைய மேலான வாழ்க்கையைப் பற்றியும், தம் தேசத்திற்காக அவர்கள் காண்பிக்கும் தியாகத்தைப் பற்றியும் மாஜினி தன் தேசத்தவர்களுக்குக் கூறி வந்தான். காரல்மார்க்ஸ் என்பவரின் சமுதாய சமத்துவத்தையும் பக்குனின் என்பவரின் சமூக உரிமைக் கொள்கையைப் பற்றியும் மாஜினி கண்டித்தான். அவர்களுடைய கொள்கை காலத்திற்கேற்றதல்லவென்று மாஜினி கூறி வந்ததுடன், மத உணர்ச்சியை வேருடன் களையும் எந்த இயக்கத்தையும் இவன் கண்டித்து வந்தான். இவனுக்கு முன்னதாகவே மனைவியார் மாண்டாள். மணந்து கொண்டும் இவன் அவளிடம் அதிக சுகத்தையடையவில்லை. உள்ளநாளெல்லாம் தேசத்திற்காகவே மாஜினி தன் உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணஞ்செய்து வந்தான். இவன் மரணமடையுஞ் சமயத்தில் இதாலி ஐக்கியத்தையடையும் உணர்ச்சியைக் கொள்ள வாரம்பித்தது. மாஜினியின் நோக்கம் அவன் காலத்திலேயே யுண்டாகவில்லை. வரவர மாஜினிக்கு தேகம் இளைத்தது. முதுகு வளைந்து அங்கம் தளர்ந்து தலைநரைத்து வந்தும், மாஜினி தன் தேசத்தைப்பற்றியும் ஐக்கிய உணர்ச்சியைப்பற்றியும் கூறி வந்தான். கடைசியாக மாஜினி 1872-ம் வருடம் மார்ச்சுமாதம் 10-ந் தேதி பைஸா நகரில், பெல்லிகிரினோ ரோஸலி என்பவரின் வீட்டில். மரணமடைந்தான். இவன் 67 வருட காலம் ஜீவித்திருந்தான். மரணமடைவதற்கு முன்னர் மாஜினியின் தங்கை யொருத்தி மத உணர்ச்சி வேறுபாட்டால் அவனைக்காணவும் வரவில்லை. மாஜினி பைஸா நகரத்தில் மாண்டதும், ஜினேவா நகரில் அவன்

தாயார் புதைக்கப்பட்டிருந்த இடத்திற்குப் பக்கலிலே மாஜினியின் பிரேதம் அடைக்கலஞ் செய்யப்பட்டது. மாஜினியின் நாளை இன்னமும் இதாலி தேசத்தவர்கள் கொண்டாடி வருகின்றனர். மாஜினி சுபாவத்தில் கவித்திறமையைக் கொண்டவன். சிறு பிராயத்தி லிருந்தே நாடகங்களில் இவனுக்கு மிக்க பிரியம் உண்டு. பெரிய கற்பாறைகளின்மீது மோதும் அலை கள்போல சப்திக்கக்கூடிய சொற்களைக்கொண்டது இவனுடைய வியாசம். மாஜினி நல்ல நீதி நெறி கொண்டவன். தர்மநீதி இவனிடத்தில் குடிகொண் டிருந்தது. இவனுடைய எண்ணமெல்லாம் பார்ப்ப தற்குச் சாமானியமாக யிருந்தபோதிலும் நல்ல அனு பவத்துடன் கூடியவையாயிருக்கும். மத உணர்ச்சி யும் அறிவும் இவனிடத்தில் கலந்திருந்தது. மறை பொருளாகப் பேசுவதும், உயர்வு நவிற்சியாகக் கூறு வதும், வஞ்சப்புகழ்ச்சியும் இவனிடத்தில் எப்பொழுது மில்லை. இயேசு நாதரின் உண்மையான தத்துவக் கட்டளையையறிந்தவர்களில் மாஜினி ஒருவர். அன்பே வடிவமாகக்கொண்டவர். மாஜினி இராஜீய விஷயத்தில் நல்ல தூரதிருஷ்டியுள்ளவர். இவர் நல்ல முன்- யோசனைக்காரர். குடியரசில் நல்ல தீவிர பக்தியுள்ள வர். இதாலி தேசத்தின் சுதந்தர நிலைமைக்கு மாஜினி யின் அரசியல் ஞானமே காரணம். சதா சுறு சுறுப் புள்ளவர். சோம்பல் என்பது இவனிடத்தில் பிறக்க வில்லை. காரியங்களை யமைத்துச் செய்வதில் இவ ருக்கு நல்ல திறனுண்டு. மாஜினியின் வாழ்க்கை மிக்க பரிசுத்தமானது. உள்வாழ்க்கையும் வெளி வாழ்க்கை யும் நல்ல ஆசாரத்துடன் கூடியது. பொறுமை, லோபம் முதலிய தீக்குணங்கள் இவரிடத்தில் இல்லை.

இவர் நல்ல இராஜரிஷி. ஐரோப்பா நாட்டில் மாஜினி பூர்ண தெய்வபக்தியுடனும் ஜீவகாருண்யத்துடனும், தர்ம சிந்தனையுடனும், இன்மொழியுடனும் தப்பிப் பிறந்தார். இதாலிதேசத்து விடுதலைக்கு அடிகோலியா யிருந்த மாஜினி என்று மழியாப்புகழ்பெற்று விளங்கி னார்.

## 4. ஜோஸப் மாஜினியின் நீதி மொழிகள்.

1. வருங்கால அபிவிர்த்திக்கு இரண்டு விஷயங்கள் முக்கியமானவை. ஒன்று விஷய நிர்ணயம்; மற்றொன்று அந்நிர்ணய அனுஷ்டானம். இவ்விரண்டும் இல்லாதவிடத்து அபிவிர்த்தியில்லை. இவ்விரண்டு விஷயங்களும் இதாலிதேசத்துக்கு இல்லாத குறையினாலேயே அத்தேசம் அபிவிர்த்தியின்றி அவிவேகத்தில் ஆழ்ந்துஇருக்கிறது. கொடுங்கோன்மையானது பெரிய மதில் சுவர்போல் உயர்ந்து நான்கு பக்கங்களிலும் இதாலிதேசத்தைச் சூழ்ந்திருக்கிறது. இரகஸியப் போலீஸ், சுங்க உத்தியோகஸ்தர்கள், போலீஸ் உத்தியோகஸ்தர்கள் ஆகிய இம்மூன்று வகையினர்களும் நாட்டில், தாராள எண்ணம் பரவாமலிருக்கவும், சுதந்தர உணர்ச்சி உண்டாகாமலிருக்கவும் பெரிய முட்டுக் கட்டைகளாக இருந்து வருகின்றனர். சுதந்தர உணர்ச்சியையும் சமத்துவ உணர்ச்சியையும் ஊட்டும் பத்திரிகைகளும் புத்தகங்களும் தடுக்கப்படுகின்றன. சர்வகலாசாலைகளும் கல்லூரிகளும் அடிமைத்தனத்தை யூட்டுகின்றன. தாராள நோக்கத்துட னிருப்பவர்களின் தலைதப்புவது தம்பிரான் புண்ணியமாக யிருக்கிறது. நல்ல புத்தியுள்ள வாலிபர்கள் அநியாயமாகத் தங்கள் புத்திசாலித் தனத்தை அதர்ம வழியில் உபயோகப்படுத்தி அடிமைத் தனத்தில் ஆழ்ந்து உழல்கின்றனர். இங்ஙனம் உழன்று வரும் சமூகத்தினருக்குப் பெரிய இராஜீயப் புரட்சியே அபிவிர்த்திக்கும் புனர் உத்தாரணத்திற்கும் ஏற்ற சாதனமாகும்.

2. சுதந்தர ஸ்தாபனத்திற்குக் கஷ்டங்களைத் தாங்குவதே முக்கியதர்மம். சுதந்தரத்தையிழந்த ஜாதியார் மகத்தான கஷ்டங்களைத் தாங்கினாலன்றி மீண்டும் சுதந்தரத்தை ஸ்தாபிக்கமுடியாது; சுதந்தர மிழந்த ஜாதியார்களின் கண்களினின்றும் விழும் நீர்த்தாரைகளின் துளி ஒவ்வொன்றும் உயர்ந்த அறிவையும் அனுபவத்தையும் போதிக்கக் கூடியவை. அங்ஙனம் விழும் ஒவ்வொரு துளியும் பெருவள்ளமாகி ஜன சமூகத்தை அபிவிர்த்தி செய்யும். பிரதிவருடமும் துன்பப்படுவர்களின் சங்கியை வளர வளர, சிறைச்சாலைகளில் அவதிப்படுபவர்களின் எண்ணிக்கை உயர உயர, நாட்டின் அபிவிர்த்தி பெருகிக் கொண்டே வரும்.

3. இதாலியைக் கவனியுங்கள். துரதிருஷ்டம், துன்பம், தீமை, வறுமை, கொடுமை, பலாத்காரம் ஆகிய இப்பைசாச குணங்கள் குடிகொண்டிருக்கின்றன. அதிகாரிகளின் கொடுமையோ நாலுபக்கமும் வியாபித்த வண்ணமாகயிருக்கிறது. பிரஜைகளின் உபயோகமற்ற கலகம் ஆங்காங்கு ஏற்பட்டு வருகின்றது. அன்னிய அரசாங்கமாகிய ஆஸ்திரியாவை உதறித் தள்ளப்போதுமான ஒற்றுமையும் தியாகமும் அறிவும் பலமுமின்றி ஜனங்கள் இருக்கின்றனர். இதாலி உண்மையில் போராட முன்வருமானால் ஆஸ்திரியாவைப் போன்ற மூன்று ஆஸ்திரியாவைத் தாக்கி சுதந்தரத்தை ஸ்தாபிக்கக் கூடும். இதாலி தேசத்தின் தொன்மைவாய்ந்த சரித்திரங்கள், வீரர்களின் சரிதங்கள், மதஉணர்ச்சி, தியாகச்செயல்கள் ஆகிய இவைகள் இன்னும் ஒளிவீசி நிற்கின்றன. இதாலியின் அபிவிர்த்திக்கு முக்கியமாக ஜாதீய உணர்ச்சியே வேண்டும். ஜாதீய உணர்ச்சி உண்டானால் சுதந்தரம் உண்டு.

4. நம்பிக்கை என்பது ஜனங்களுக்குப் போய் விட்டது. தேசத்தினிடத்தில் நம்பிக்கையையும் சமூக அபிவிர்த்தியினிடத்தில் நம்பிக்கையையும் அற்றவர்க ளானார்கள். இதாலிசமுதாயத்தின் உயிர்நிலை நீங்கிற்று: ஜனங்கள் தங்கள் வாழ்க்கையின் இலட்சியமின்ன தெனச் சற்றேனும் நினைக்காமல் மிருகங்களைப்போல் உண்பதும் உறங்குவதுமாகப் பொழுதுபோக்குகின்ற னர். உயிர்வாழ்க்கைக்கு நம்பிக்கை பிரதானம். நாட் டின் அபிவிர்த்தியில் ஆஸ்திகபுத்தி தீவிரமாக ஏற்பட வேண்டும்.

5. கடமை, தியாகம், ஆஸ்திகபுத்தி இம்மூன் றும் நாட்டின் அபிவிர்த்திக்கு ஏற்றவழிகளாம். இம் மூன்றும் ஒன்றையொன்று பின்பற்றிவருவன. இம் மூன்றும் ஒருவனிடத்தோ அல்லது ஒரு சமுதாயத் தினிடத்தோ காணப்படின் அவனையும் அச்சமுதாயத் தையும் வெல்ல எத்துணை பலமுள்ள படையினாலு மாகாது. இம்மூன்றும் வச்சிரக்கோட்டைகளாம். இக் கோட்டையைத் தகர்க்க பீரங்கிகளாலும், ஆகாய விமானங்களாலும், மற்ற எவ்விதமான யுத்ததள வாடங்களாலும் ஆகாது.

6. கடவுளிடத்தில் பக்திபூர்வமாக இராத சமு தாயம் நாகரிகப்பான்மையுடையதல்ல; கடவுளிடத் தில் நம்பிக்கை வைப்பதும் கடவுளுடைய ஆக்ஞையை யனுஷ்டிப்பதும், எல்லா மனிதர்களும் கடவுளுடைய குழந்தைகளென்று பாராட்டுவதுமே நாகரிகத்திற்கு அடையாளங்களாம். கடவுளுடைய சட்டமே எல்லா சட்டங்களுக்கும் மேலானது. கடவுளுடைய சட் டத்தைமீறி நடக்கலாகாது. கடவுளுடைய சட்டத்தை மீறிய பிறசட்டங்கள் சட்டங்களல்ல. அவைகளுக்

குச் சமூகத்தினர் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியதில்லை. கடவுளும் அவருடைய ஆக்ஞையும், சமூகசங்க சேர்க்கை, சுதந்தரம், சமத்துவம், ஜீவகாருண்யம் ஆகிய இவைகளே ஜனங்களின் அபிவிர்த்திக்கு மூலாதாரங்கள்.

7. மேன்மையான நோக்கங்களே ஜனங்களை மேன்மைப்படுத்தும்; ஜனங்கள் உயர்ந்த நோக்கமுள்ளவர்களாய்த் தங்கள் வாழ்க்கையைப் பரிசுத்தமாகச் செய்துகொள்ள வேண்டும். சகல பொறுப்பையும் கடவுளிடத்தில் அமைத்துத் தங்கள் கடமையைச் செய்பவர்களாக ஜனங்களிருக்கவேண்டும். பொறாமையும், கோபமும், வீண்மயக்கமும் மனித சங்கத்தின் விரோதிகள்.

8. மனிதனுடைய சிதாகாயத்தில் உயர்ந்த எண்ணம் உதிக்காமற்போனால், பலமற்றவர்களைப் பலமுள்ளவர்களின் கொடுமையினின்றும் யார் காப்பாற்றுவர்? மனிதனால் சிருஷ்டிக்கப்படாத சில சட்டங்கள் மிக்க பரிசுத்தமாகவும் மீற முடியாததாகவுமிருப்பதால் நன்மை தீமை என்பதைப் பிரிக்கின்றோம்; அங்ஙனம் அப்புனித சட்டங்களில்லாமலிருந்தால் நன்மை தீமைகளைப் பகுத்தறிவதெங்ஙனம்? யாருடைய பெயரால், எதனுடைய தன்மையால் நாம் கொடுமையையும், பலாத்காரத்தையும் பிரிவினையையும் கண்டிக்க முடியும்? கடவுளின்றி உலகில் வேறொரு அதிகாரமில்லை.

9. கடவுள் சட்டத்தை யளித்திருக்கிறார்; கடவுள் ஒருவரே மானிட சமூகத்திற்குச் சட்டம் அளிக்க அதிகாரமுள்ளவர்; கடவுளின் சட்டமொன்றே சட்டம். கடவுளுடைய சட்டமொன்றையே நீங்கள்

ஆதரிக்கவேண்டும்; அவருடைய சட்டத்திற்குக் கீழ்ப் படியாமலிருக்க வேண்டும். கடவுளுடைய சட்டத் திற்கு விரோதமின்றி அனுகுணமாக யிருக்கும்வரை மனிதனுற் செய்யப்படும் சட்டங்கள் பிரயோசனப் படும். கடவுளுடைய சட்டத்திற்கு விரோதமாக மனிதசட்டங்களிருக்குமாலுல், அச்சட்டங்களை மீறி நடப்பது ஒவ்வொருவனுடைய கடமை.

10. தேசமும் குடும்பமும் இரண்டு சக்கரங்கள்; இவ்விரண்டு சக்கரங்களும் பெரிய சக்கரமொன்றில் அடங்கியுள்ளன. ஏணிக்கு இரண்டு படிகள் போல இவ்விரண்டுமாகும். படிகள் இன்றி உயர ஏறமுடியா தது போல இவ்விரண்டுக்கும் செய்யும் கடமைகளின் தர்மமின்றி ஜாதீய அரசாங்கத்தை ஸ்தாபிக்கமுடியாது.

11. தேசமின்றி பெயர், அந்தஸ்து, குலம், உரிமை, பொருள், நற்பழக்கம் அன்னோன்னியம் ஆகிய இவைகள் இல்லை. தேசத்தை முதன் முதல் ஒவ்வொருவனும் தனதாக்கிக்கொள்ள வேண்டும். தேசமில்லாதவரை வாழ்க்கையில்லை. வாழ்க்கை யில்லாதவரை சமூகமும் சமுதாயமுமில்லை. சமுதாய மில்லாதவரை நாகரிகமில்லை. நாகரிகமில்லாதவரை மனிதனுகமாட்டான்.

12. மனிதவாழ்க்கையின் தர்மத்தை ஐக்கிய குணத்தாலேயே சாதிக்க முடியுமேயன்றி வேற்றுமை யினுலும் வேறுபாட்டினுலும் சாதிக்கமுடியாது. தேச சுதந்தரத்திற்காக ஏற்படும் போராட்டங்களிலும், மனித சங்கத்தின் அபிவிர்த்திக்காகவுண்டாகும் இயக்கங்களிலும் ஐக்கியம் ஒன்றே பிரசன்னமா யிருப்பதால், அவ்வைக்கியமின்றி சேர்க்கையும் அபி விர்த்தியும் உண்டாகா. மனிதன் எப்பொழுதும் அபி

விர்த்தியை நாடும் பிராணியாதலால், அபிவிர்த்திக்குரிய வழிபாடுகளில் சங்க சேர்க்கை இன்றியமையாதது.

13. எல்லா அதிகாரமுறையும் கடவுளிடத்திலுள்ளது; தர்மநீதியினிடத்திலுள்ளது; எந்த சக்தியானது பிரபஞ்சத்தை நடத்துகின்றதோ அந்த சக்தியினிடத்தே எல்லா அதிகாரமுறையும் உண்டு. மானிட சைதன்னியத்தில் அவ்வதிகார முறை அடங்கியிருக்கிறது. அவ்வதிகாரத்தைத் தனி மனிதன் மானிட சமூகத்திற்கென்று செலுத்தவும், அல்லது மானிட சமூகத்தைச் சேர்ந்த பெரும்பாலார் அவ்வதிகாரத்தைச் செலுத்தவும் கூடாது. சமூகநன்மை, சுதந்தரம், அபிவிர்த்தி இவைகளைப் பெருக்கக்கூடியதே அதிகாரத்தின் லட்சணம்.

14. ஜாதீய உணர்ச்சியானது ஜாதீயக் கல்வியினின்றுமே யுண்டாகும். ஜாதீயக் கல்வியே சமுதாய ஒற்றுமை, சமுதாய உணர்ச்சி, சமுதாய தர்மம், சமுதாய உரிமை முதலியவைகளையுண்டாக்கும். கல்வியின் பொருளே சுதந்தரப்பொருள். சமுதாய நன்மையைப் போதிப்பதற்குத்தான் கல்வி என்று பெயர். நீதிதர்மம், பரோபகார சிந்தை, சமூக உழைப்பு, ஜீவகாருண்யம், சாந்திநிலை, முதலியவைகளைப் புகட்டக்கூடியதற்குத் தான் கல்வி என்று பெயர்.

15. சங்கமானது சமாதானத்தை யுண்டாக்கக் கூடியதாக யிருக்கவேண்டும். சங்கமானது பகிரங்கமாகவே யிருத்தல் வேண்டும். சுதந்தரமும் தேசமும் ஒரு சமுதாயத்தினருக்கு நிலைக்காதபொழுது இரகஸிய சங்கங்கள் நீதியானவைகளே. சுதந்தரமும்

தேசமும் நிலைத்திருக்குங் காலத்தில் அவ்விரகஸிய சங்கங்கள் நியாயமானவைகளல்ல; அச்சங்கங்களைக் கலைத்து விடலாம். சங்கமானது அபிவிர்த்தியைக் கொடுக்கக்கூடியதாக யிருக்கவேண்டும். அபிவிர்த்தியைக் கொடுக்காத சங்கம் சங்கமல்ல.

16. தற்பொழுதுள்ள சமூகத்தில் மூவகை மனிதர்களிருக்கின்றனர். முதலாளிகள் முதல் வகையையும், மத்திய வகுப்பினராகிய ஒப்பந்தக்காரர்கள் இரண்டாவது வகையையும், தொழிலாளிகள் மூன்றாவது வகையையும் சேர்ந்தவர்கள். முதல் வகையினர் மற்ற மனிதர்களின் பொருள்களையும், இரண்டாவது வகையினர் மற்ற மனிதர்களின் புத்தியையும் மூன்றாவது வகையினர் மற்ற மனிதர்களின் சரீரப் பிரயாசையையும் முறையே கொண்டிருக்கின்றனர்.

17. தொழிலாளர்கள் வறுமையினால் அவதிப்பட்டிருக்கையில், அவர்களுக்கு உபதேசம் செய்வது, பசிப்பவனுக்கு அன்னமளிக்காமல் கல்லைக்கொடுப்பது போலாகும்.

18. கொடுமையையும் பலாத்காரத்தையும் கொண்டு பரிபாலித்து வரும் அரசாங்கம் அதிக நாளைக்கு நிற்க முடியாது.

19. அரசாங்கத்தின் கொடுங்கோன்மைக்கும், சமுதாயத்தின் புனருத்தாரணத்திற்கும் இடையே தேச மகாஜனங்கள் சிறைவாசம், சித்திரவதை தூக்கு தண்டனை முதலிய கஷ்டங்களை அனுபவிக்கவேண்டும்.

20. தேசத்திலுண்டாகும் இராஜீயப் புரட்சிகள் ஒவ்வொன்றிலும் தீவிரமான ஓர் மூலதத்துவம் உண்டு. அம்மூலதத்துவத்தினின்றுமே பிரஜா உரிமை, அர

சாங்கம், சமுதாய கடமை முதலிய பல வழிபாடுகள் உண்டாகின்றன.

21. முடியரசு ஒரு காலத்தில் நன்மையாகவே யிருந்தது. அது அக்காலத்தில் ஏற்பட்ட சில கோளாறுகளைக் களைந்து சாந்தியையுண்டு பண்ணிற்று. ஆனால், முடியரசு இக்காலத்திற்கு நன்மையல்ல; பிரஜாதிபத்ய உணர்ச்சி முதிர்ந்த இக்காலத்திற்கு ஏற்ற குடியரசே ஆவசியமானது. சமுதாயம் என்னும் ஓர் பெரிய விருட்சத்தின் கிளையினின்றும் அரசாங்கமானது உண்டாகவேண்டும். ஒரு பெரிய விருட்சத்தில் பழம் உண்டாவதுபோல அரசாங்கமானது சமுதாயத்தினின்றும் இனிமையாக உண்டாகவேண்டும்.

22. அன்னிய சம்ஸர்க்கம், அன்னிய ஒழுக்க வழக்கம் சிறிதேனுமில்லாமற்படி இயற்கையின் சம்ஸர்க்கத்தையும் தேசத்தின் அநாதியான ஒழுக்க வழக்கத்தையுங்கொண்டு பரிசுத்தப்படுத்தி நிற்பதே அரசாங்கத்தின் கடமை.

23. அரசாங்கமானது சமுதாயத்தின் மனமாகவும், பிரஜைகள் உறுப்பாகவும் இருக்கவேண்டும்.

24. சரித்திரங்களின் தொகுதியும், சாஸ்திரங்களின் அபிவிர்த்தியும், நூதன வஸ்துக்களின் உற்பத்தியும், புதிய இராஜீய சித்தாந்தமும் ஆகிய இவையாவும் ஒரு தேசத்தின் வலுமையை நீக்கமுடியாது; சமுதாயத்தில் அன்னோன்னிய உணர்ச்சியின் சம உரிமை ஏற்பாட்டொன்றினாலேயே ஜனங்களின் வறுமையும் துன்பமும் நீங்கும்.

25. உண்மையான வாழ்க்கையை மனிதர்கள் பின்பற்றவேண்டும்; உண்மையான வாழ்க்கையைப்

பற்ருத மனிதர்கள் மயானங்களிலும், கோரிகளிலும் நடமாடும் பிசாசுகளை யொத்தவர்களாவார்கள்.

26. வாழ்க்கையானது அன்பின் வடிவம். வாழ்க்கையை யறியாதவன் அன்பின் வடிவத்தையும் தன்மையையும் அறியமாட்டான். அன்பினுலேயே உலகம் உண்டாயிற்று. அன்பு ஒன்றினுலேயே சமூகம் அன்னேன்னிய வாழ்க்கையைப்பற்றும். அன்பே மானிட வடிவம். அன்பையறிந்து கடமையைச் செய்யவேண்டும்.

27. வாழ்க்கையானது சலனமுள்ளது. பரந்த கோரிக்கையைக் கொண்டது. தீவிர அபிவிர்த்தியைப் பற்றியது. இம் மூன்றும் வாழ்க்கையின் தன்மை களாம். இவையின்றி வாழ்க்கையில்லை.

28. வாழ்க்கையானது கடவுளிடத்தும் பிராணி களிடத்தும் கலந்திருக்குந் தன்மையது.

## ஸி. சுப்பிரமணியபாரதியார் இயற்றியது.

---

(இந்த இத்தாலிதேசத்து தேசாபிமானி தம்மால்
ஸ்தாபிக்கப்பட்ட "யௌவன இத்தாலி"
என்ற சங்கத்தினுல் செய்துகொண்ட
பிரதிக்கினை)

---

1. பேருருட்கடவுள் திருவடியாணை,
 பிறப்பளித் தெமையெலாம் புரக்கும்
தாரணி விளக்காம் என்னரு நாட்டின்
 தவப்பெய ரதன் மிசையாணை
பாரவெந்துயர்கள் தாய்த்திரு நாட்டின்
 பணிக்கெனப் பல்விதத் துழன்ற
வீரர், நந்நாடு வாழ்கென வீழ்ந்த
 விழுமியோர் திருப்பெயராணை.

2. ஈசனிங் கெனக்கு மென்னுடன் பிறந்தோர்
 யாவர்க்கு மியற்கையி னளித்த
தேச மின்புறுவான் எனக்கவன் பணித்த
 சீருய ரறங்களி னுணை
மாசறுமென் நற் றுயினைப் பயந்தென்
 வழிக்கெலாம் உறையுளாம் நாட்டின
ஆசையுங் கெவர்க்கு மியற்கை யாமன்றே?
 அத்தகை யன்பின்மீ தாணை.

3. தீயன புரிதல், முறைதவிருடைமை,
 செம்மைதீர் அரசியல், அநீதி

ஆயவற் றென்னெஞ் சியற்கையி னெய்தும்
 அரும்பகை யதன்மிசை யாணை,
தேய மொன்றற்றேன், நற்குடிக்குரிய
 வுரிமைகள் சிறிதெனு மில்லேன்,
தூய சீருடைத்தாம் சுதந்திரத் துவசம்
 துளக்கிலா நாட்டிடைப் பிறந்தேன்.

4. மற்றை நாட்டவர் முன் னின்றிடும் போழ்து
 மண்டுமென் வெட்கத்தி னாணை
முற்றியவீடு பெறற்கெனப் படைப்புற்
 றச்செயல் முடித்திட வலிமை
அற்றதா மறுகும் என்னுயிர்க் கதனி
 லார்ந்தபே ராவலி னாணை
நற்றவம் புரியப் பிறந்ததாயினு மிந்
 நலனறு மடிமையின் குணத்தால்

5. வலியிழந் திருக்கு மென்னுயிர்க் கதன்கண்
 வளர்ந்திடும் ஆசைமீ தாணை!
மலிவுறு சிறப்பின் எம்முடை முன்னோர்
 மாண்பதன் நினைவின் மீதாணை
மெலிவுட னிந்நாள் யாங்கள் வீழ்ந்திருக்கும்
 வீழ்ச்சியி னுணர்ச்சிமீ தாணை
பொலிவுறு புதல்வர் தூக்கினி லிறந்தும்
 புன்சிறைக் களத்திடை யழிந்தும்

6. வேற்றுநாடுகளில் அவர் துரத்துண்டு
 மெய்குலைந் திறந்துமே படுதல்
ஆற்ற கிலாராய் எம்மரு நாட்டின்
 அன்னை மாரழுங்கணீ ராணை
மாற்றலரெங்கள் கோடியர்க் கிழைக்கும்
 வருக்கொணாத் துயர்களி னாணை.

ஏற்ற இவ்வாணை யணைத்துமேற் கொண்டே
யான்செயுஞ் சபதங்கள் இவையே.

7. கடவுளிந் நாட்டிற் கீந்ததோர் புனிதக்
கட்டளைத் தன்னினும், அதனைத்
திடனுற நிறுவ முயலுதல் மற்றித்
தேசத்தே யிறந்திவர்க் கெல்லாம்
உடனுறு கடமை யாகுமென் பதினும்
ஊன்றிய நம்புதல் கொண்டும்
தடநில மிசையோர் சாதியை இறைவன்
சமைகெனப் பணிப்பனேல் அதுதான்,

8. சமைதலுக் குரிய திறமையும் அதற்குத்
தந்துள னென்பதை யறிந்தும் ;
அமையுமத் திறமை ஜனங்களைச்சாரும்,
அன்னவர் தமக்கெனத் தாமே
தமையல தெவர்கள் துணையுமில்லாது
தம்மருந் திறமையைச் செலுத்தல்
சுமையெனப் பொறுப்பின் செய்திலுக்கதுவே
சூழ்ச்சியா மென்பதை யறிந்தும்.

9. கருமமுஞ் சொந்த நலத்தினைச்சிறிதும்
கருதிடா தளித்தலுந் தானே
தருமமா மென்றும், ஒற்றுமையோடு
தளர்விலாச் சிந்தனை கொளலே
பெருமைகொள் வழியாமென்றுமே மனத்திற்
பெயர்ந்திடா உறுதிமேற் கொண்டும்
அருமைசால் சபத மிவை புரிகின்றேன்;
ஆணைக ளனைத்துமுற் கொண்டே

10. என்னுடனொத்த தருமத்தை யேற்றோர்
இயைந்தஇவ் "வாலிபர்சபை" க்கே

தன்னுடல், பொருளும் ஆவியுமெல்லாம்
தத்தமா வழங்கினேன் எங்கள் [தாய்ச்
பொன்னுயர் நாட்டை யொற்றுமை யுடைத்
சுதந்திரம் பூண்டதுவாகி,
இன்னுமோர் நாட்டின் சார்விலதாகிக்
குடியர சியன்றதா யிலக.

11. இவருடன் யானு மிணங்கியே யென்று
மிதுவலாற் பிறதொழி விலனுய்த்
தவறறுமுயற்சி செய்திடக் கடவேன்
சந்ததஞ் சொல்லினுல், எழுத்தால்
அவமறு செய்கை யதனினுல், இயலும்
அளவெலாம், எம்மவரீந்த
நவமுறு சபையினொரு பெருங்கருத்தை
நன்கிதின் அறிந்திடப் புரிவேன்.

12. உயருமிந்நோக்க நிறைவுற "இணக்கம்"
ஒன்றுதான் மார்க்கமென்பதுவும்
செயம் நிலையாகச் செய்திடற் கறமே
சிறந்ததோர் மார்க்க மென்பதுவும்;
பெயர்வற எங்கள் நாட்டினர் மனதிற்
பேணுமாறி யற்றிடக் கடவேன்
அயலொரு சபையி லின்றுதோ றென்றும்
அமைந்திடா திருந்திடக் கடவேன்.

13. எங்கள் நாட்டொருமை யென்னுடுங் குறிக்கும்
இச்சபைத் தலைவரா யிருப்போர்
தங்களாக் கினைக ளனைத்தையும் பணிந்து
தலைக் கொளற் கென்றுமே கடவேன்,
இங்கென தாவி மாய்ந்திடுமேனு
மிவர்பணி வெளியிடா திருப்பேன்

துங்கமார் செயலாற் போதனையாலும்
இயன்றிடுந் துணையிவர்க் களிப்பேன்.

14. இன்று மென்நாளு மிவைசெயத் தவறேன்
மெய்யிது, மெய்யிது, இவற்றை
என்றுமேதவறி யிழைப்பனே லென்னை
ஈசனார் நாசமே புரிக,
அன்றியு மக்கள் வெறுத்தெனை யிகழ்க,
அசத்தியப் பாதகஞ் சூழ்க,
நின்ற தீயெழுவாய் நரகத்தின் விழ்ந்து
நித்தம் யானுழலுக மன்னே.

15. பேசிநின்ற பெரும்பிர திக்கினை
மாசிலாது நிறைவுறும் வண்ணமே,
ஆசிகூறி யருளுக, எழையேற்
கீசனென்று மிதயத் திலகியே.

---

P. R. Rama Iyar and Co., Printers, Madras.

177745

# ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமி சர்மா

## இயற்றிய நூல்கள்

| | | |
|---|---|---|
| | ரூ. | அ. |
| மகாத்மா காந்தி (2-ம் பதிப்பு) | 1 | 8 |
| முகம்மத் அலி ஷவுகத் அலி ... | 1 | 0 |
| சித்தரஞ்சன தாஸ் ... ... | 0 | 12 |
| ஸ்வராஜ்யம் ... ... | 0 | 8 |
| லாலா லஜபதிராய் ... ... | 0 | 8 |
| சிவாஜி மகாராஜா ... ... | 1 | 0 |
| துருவன் ... ... | 0 | 5 |
| பண்டித மதிலால் நேரு ... ... | 0 | 2 |
| டால்ஸ்டாய் (ருஷியஞானி) மகாத்மா காந்தியின் குரு ... | 0 | 4 |
| மகாத்மா காந்தியின் ஆன்ம சக்தியும் சாந்தி நிலையும் ... | 0 | 10 |
| நெபோலியன் ஜீவிய சரிதம் ... | 1 | 8 |

(அச்சில்)

இந்தியா இழந்த தனம் (1-ம் பாகம்)
அசோக சக்கரவர்த்தி
இராஜபுத்ர மகாவீரர் கும்பமகாராணா
இராஜநீதி சாஸ்திரம் (அரசியல் நூல்)
இராஜ ராஜ சோழன் (தமிழ்நாட்டுச் சிறந்த மன்னன்)
இந்தியா இழந்த தனம் (2-ம் பாகம்)

ஞானபோதினி பிரசுராலயம்
33, இருளப்பன் வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.

## ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமி சர்மா

### இயற்றிய நூல்கள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| மகாத்மா காந்தி (2-ம் பதிப்பு) | | 1 | 8 |
| முகம்மத் அலி ஷவுகத் அலி | ... | 1 | 0 |
| சித்தரஞ்சனதாஸ் ... | ... | 0 | 12 |
| ஸ்வராஜ்யம் ... | ... | 0 | 8 |
| லாலா லஜபதிராய் ... | ... | 0 | 8 |
| சிவாஜி மகாராஜா ... | ... | 1 | 0 |
| துருவன் ... | ... | 0 | 5 |
| பண்டித மதிலால் நேரு ... | ... | 0 | 2 |
| டால்ஸ்டாய் (ருஷியஞானி) மகாத்மா காந்தியின் குரு | ... | 0 | 4 |
| மகாத்மா காந்தியின் ஆன்ம சக்தியும் சாந்திநிலையும் | ... | 0 | 10 |
| நெபோலியன் | ... | 1 | 8 |

(இந்தியா இழந்ததனம் அச்சில்)

**காங்கிரஸ் விளம்பர சபை,**

சௌகார் பேட்டை, சென்னை.